

அப்ப அடுத்த ஆண்டும் சாத்தியம்தான் உண்டோ...


விலை - 20
பக்கங்கள் - 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 31 | கதிர் 347 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 22, திங்கட்கிழமை 07.11.2016


# யாழ்ப்பாணத்தில் அதிரடி; 8 இளைஞர் திடீர் கைது

## ஆவாக் குழு உறுப்பினர்கள் என்கிறது பொலிஸ் ஒருவர் முன்னணி அலுவலகத்தில் வைத்து மடக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், நவம்பர் 7

தமிழ் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் பணியாற்றுபவர் உட்பட 8 இளைஞர்கள் இரண்டு நாள்களில் யாழ்ப்பாணத்தில் திடீரெனக் கைது செய்யப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் ஆவா குழு எனப்படும் வன்முறைக் கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது. எனினும் பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினரே இவர்களைக் கைதுசெய்து கொழும்புக்குக் கொண்டுசென்றனர். ஆவா குழுவின் பின்னணியில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச உள்ளார் என்று அரசு தெரிவித்தது. அதனை கோத்தபாய மறுத்தார். ஆவா முன்னாள் போராளிகளால் உருவாக்கப்பட்டது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச >> 21

## முதலமைச்சராக ஆசைப்படவில்லை

### சாவகச்சேரியில் தெரிவித்தார் மாவை

தென்மராட்சி, நவ. 7

எனக்கு முதலமைச்சர் பதவி மீது ஆசை கிடையாது. நான் அந்தப் பதவியை விரும்புவதாக நிலவும் கருத்து எனக்கு மிகப் பெரும் வேதனையாக இருக்கின்றது.

இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சாவகச்சேரி அலுவலகம் திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்றைய காலத்தில் நாம் சிறை >> 24

ஆவாவின் பின்னணியில் இராணுவம்

## மக்களின் சந்தேகத்தில் தவறு எதுவும் இல்லை

### எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 7

ஆவாக் குழுவின் பின்னணியில் இராணுவம் இருப்பதாக மக்கள் சந்தேகிப்பதில் தவறு ஏதும் இல்லை. இது தொடர்பில் முழுமையான சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஆவாக் குழு தொடர்பில் செய்தி >> 24

தூதுவரின் கருத்தால்

## சீனா - இலங்கை இடையே முரண்

யாழ்ப்பாணம், நவ. 7

சீனத் தூதுவர் வெளியிட்ட கருத்தால், சீனா - இலங்கை இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசு தனது அதிருப்தியை தெரிவிக்கும் நோக்கில், சீனத் தூதுவருக்கு அழைப்பாணை அனுப்பவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் செய்தியாளர் சந்திப்பை சீனத் தூதுவர் கடந்த வாரம் நடத்தியிருந்தார். முன்னைய ஆட்சிக் காலத்தில் அதிக வட்டிக்கு சீனா கடன் வழங்கியுள்ளதாகக் >> 23

## படைப் புலனாய்வில் 2 பிரிவுகள் கலைப்பு

யாழ்ப்பாணம், நவ. 7

இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் பதவியில் இருந்து, பிரிகேடியர் சுரேஸ் சாலி நீக்கப்பட்டதையடுத்து, இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின் கீழ் செயற்பட்ட இரண்டு பிரிவுகள் கலைக்கப்பட்டுள்ளதாக சண்டே லீடர் ஊடகம் செய்தி வெளி >> 23

# அடுத்த ஆண்டே புதிய அரசமைப்பு

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 7

புதிய அரசமைப்பு இந்த ஆண்டு இறுதிக்குள் உருவாக்கப்படாது. அடுத்த ஆண்டே சாத்தியமாகும்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

'இந்த ஆண்டு இறுதிக்குள் புதிய அரசமைப்பு உருவாகிவிடுமா?' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, 'இந்த ஆண்டு இறுதிக்குள் சாத்தியமில்லை. அடுத்த ஆண்டே அந்தப் பணி நிறைவடையும் என்று எதிர்பார்க்கின்றேன்' என்று ஜனாதிபதி மைத்திரிபால பதிலளித்துள்ளார். >> 25

## தடைகளைத் தாண்டி தீர்வு கிடைக்குமா?

### கேள்வி எழுப்புகிறார் விக்கி

யாழ்ப்பாணம், நவ. 7

தடைகளைத் தாண்டி தீர்வு கிடைப்பதற்கான சூழ்நிலைகள் இருக்கின்றதா என்று கேள்வி எழுப்பியுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எமது நிலை கவலைக்கிடமாக இருக்கும் நேரம் இது என்று தெரிவித்தார்.

வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற வீ.தனபாலசிங்கத்தின் கௌரவிப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்த >> 04

## புத்தர் சிலை விவகாரத்தின் பின்னணியில் அமைச்சர்

### நல்லாட்சியைக் கவிழ்க்கும் முயற்சியா என கிழக்கு முதலமைச்சர் கேள்வி



அம்பாறை, நவ. 7

அம்பாறை இறக்காமம் மாயக்கல்லி மலையில் புத்தர் சிலை வைக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் நல்லாட்சி அரசின் அமைச்சர் உள்ளதாகக் கூறப்படுகிறது. அவ்வாறாயின் அவர் நல்லாட்சி அரசுக்கு எதிரான சக்திகளின் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துகின்றாரா?

இவ்வாறு >> 06

## நல்லாட்சி அரசு மீதும் தமிழருக்கு அதிருப்தி

### புதுடில்லியில் சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 7

புதிய அரசு மீது தமிழ் மக்களுக்கு அதிருப்தி இருக்கின்றது. விடயங்கள் நடைபெறவில்லை. நடைபெறுகின்ற விடயங்களும் மந்த கதியில் இருக்கின்றன. இதனால் மக்களுக்கு நம்பிகையீனம் ஏற்படுவது நியாயமானது. விடயங்கள் >> 21

## யானைகளின் அட்டகாசத்தால் ரூ. 15 லட்சம் பயிர்கள் நாசம்

### நெடுங்கேணி விவசாயிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 7

நெடுங்கேணி-ஒலுமடு, சேனைப்புலவுப் பகுதிகளில் யானைகளின் தாக்குதலால் நேற்று மட்டும் சுமார் 15 லட்சம் ரூபா மதிக்கத்தக்க பப்பாசி பயிரழிவு ஏற்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் புதிதாக யானைகள் >> 06

# யாழ்ப்பாணத்தில் சட்டம் ஒழுங்கை உறுதிப்படுத்தக் கோரிக் கவனவீர்ப்பு

## 7 தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து அறிவிப்பு

கரணவாய், நவ. 7

யாழ். குடாநாட்டில் சட்டம் ஒழுங்கையும் பொதுமக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கும். அது பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். அத்துடன் தற்போதைய நிலை தொடர்பில் [illegible] படும். இவ்வாறு ஏழு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து நேற்று அறிவித்தன.

யாழ். குடாநாட்டில் தற்போது நிலவும் அசாதாரண நிலைமைகளை >> 21

## யானையிடமிருந்து நூலிழையில் தப்பினார் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர்

முல்லைத்தீவு, நவ. 7

முள்ளியவளை - மாமூலையில் பயணித்துக் கொண்டிருந்த வேளையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் யானையிடமிருந்து நூலிழையில் தப்பித்தார் என்று >> 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டப்பகலில் வீடு புகுந்து 18 பவுண் நகை கொள்ளை

## பழம் வீதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 7

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் உள்ள பழம் வீதியில் நேற்று முன்தினம் பட்டப்பகலில் வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் 18 பவுண் நகைகளைத் திருடியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் உள்ள பழம் வீதியில் உள்ள வீட்டின் உரிமையாளர்கள் நேற்றுமுன்தினம் பகல் வீட்டைப் பூட்டிய பின்னர் பாடசாலை நிகழ்வொன்றுக்குச் சென்றுள்ளனர். வீட்டுக்குள் நூதனமான முறையில் நுழைந்த திருடர்கள் 18 பவுன் நகை மற்றும் சிறு தொகைப் பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

நிகழ்வுக்குச் சென்ற வீட்டு உரிமையாளர்கள் மாலை 6 மணியளவில் வீட்டுக்கு வந்தவேளையிலேயே வீட்டில் திருட்டு நடந்துள்ளதை அறிந்துள்ளனர். இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ற-101)



நெல்லியடியில் இருந்து அச்சுவேலி நோக்கி சென்றுகொண்டிருந்த ஓட்டோவும், ஹையேஸ் வாகனமும் நேற்று இமையாணன் புறாப் பொறுக்கி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் மோதுண்டு விபத்துக்குள்ளாகின. (ற 10 -21-26)

# கொல்லப்பட்ட மாணவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு

## உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு





யாழ்ப்பாணம், நவ. 7

துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் குடும்பங்களுக்கு உடனடியாக இழப் பீடு பெற்றுக் கொடுப்பதற்கு அரசுடன் பேச்சு நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

சுலக்சனின் குடும்பத்தினரை நேற்றுக் காலை அவர்களது வீட்டுக்குச் சென்று எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த மாதம் 20ஆம் திகதி பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களான கஜன் மற்றும் சுலக்சன் ஆகியோர் கொல்லப்பட்டனர். சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த சுலக்சனின் வீட்டிற்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுக் காலை சென்றிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் சென்றிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவரைக் கண்டதும், சுலக்சனின் தாயார் ஒப்பாரி வைத்து அழுதார். சிறிது நேரத்தின் பின்னர், சுலக்சனின் தாய், தந்தை, சகோதரர்களை அழைத்து எதிர்க்கட்சித் தலைவர் கலந்துரையாடினார்.

அரசின் சார்பில் உங்களுடன் யாராவது தொடர்பு கொண்டார்களா? உதவிகள் ஏதாவது வழங்கப்பட்டதா என்பது தொடர்பில் வினவினார்.

சுலக்சனின் தந்தை பதிலளித்தார். தாம் பெரிதும் இன்னல்படுவதாகவும், வன்னிப் போரின் போது காப்பாற்றிய தமது மகனை இப்போது பறிகொடுத்துவிட்டதாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவைத் தொடர்பு கொள்ளுமாறும், அவர் ஊடாக உதவிகள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். வழக்கு விசாரணைகள் தனியாக இடம்பெறும். சுலக்சனின் இழப்பினால் உங்க ளுக்கு (குடும்பத்தினருக்கு) ஏற்பட்ட பாதிப்புக்கு, அரசிடம் உடனடியாகப் பேசி இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவித்தார்.

சுமார் 10 நிமிடங்கள், குடும்பத்தினருடன் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கலந்துரையாடினார். மீண்டும் வருவேன் என்று தெரிவித்து விட்டு வெளியேறினார்.

இதேவேளை, இந்தப் படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்த கிளிநொச்சியைச் சேர்ந்த மாணவன் கஜனின் குடும்பத்தினரை நேற்றுப் பிற்பகல் எதிர்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில், எதிர்க்கட்சித் தலைவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி .சிறிதரன், மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர்

நீதி கோரி விசாரைணைகள் ஒரு பக்கத்தில் நடந்து கொண்டிருக்க, இந்தப் படுகொலையில் இறந்த மாணவர்கள் அவர்களது குடும்பங்களுக்கு முக்கிய மானவர்கள். இவர்களின் இழப்பு ஒரு பெரிய இழப்பு. இந்த இரு குடும்பகளினதும் பொருளாதார நிலமைகளைக் கருத்திற்கொண்டு இவர்களுக்கு பொருளாதார ரீதியில் உதவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று எதிர்கட்சி தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். (வ-5,106)

# குற்றமிழைத்தவர் தண்டனையிலிருந்து தப்பிப்பதே நாட்டின் முக்கிய பிரச்சினை

## தேசிய சமாதானப் பேரவையின் அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 7

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற பல குற்றச்செயல்கள் சாட்சியங்கள் ஊடாக நிரூபணமாக இருக்கின்றபோதிலும் அவற்றுக்கு நீதி கிடைக்கவில்லை. அந்தக் குற்றமிழைத்தவருக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். அப்படி நம்பிக்கை தரும் விதத்தில் ஏதாவது நமது நாட்டில் நடக்காததுதான் நம்முன்னாலுள்ள பிரச்சி னையும் அவநம்பிக்கையு மாகும்.

இவ்வாறு தேசிய சமாதானப்பேரவையின் செயற்றிட்ட அதிகாரி சாந்த பத்திரன தெரிவித்தார்.

நிலைமாறு கால நீதிப் பொறிமுறையின் உண்மையைக் கண்டறிதலுக்கான மாவட்ட அனைத்து மதக் குழுக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்வு மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ. கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. மாவட்ட அனைத்து மதப் பேரவையின் இணைப்பாளர் ஆர்.மனோகரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது பத்திரண மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற பல குற்றச் செயல்களுக்கும், அசாதாரண சம்பவங்களுக்குமான சாட்சியங்கள் நிரூபணமாக இருக்கின்றன. போர் சூழ்நிலையில் படையினரிடம் அல்லது பொலிஸாரிடம் தமது பிள்ளைகளை தாங்களாகவே அழைத்துச் சென்று பெற்றோரும் உறவினர்களும் ஒப்படைத்தார்கள். எந்த அதிகாரிகளிடம் தங்களது பிள்ளைகளை ஒப்படைத்தார்கள் என்பதும், அது எந்த இடத்தில் வைத்து நடந்தது என்பதும் பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் நன்கு தெரியும். பின்னாள்களில் தங்களது பிள்ளைகள் எங்கே என்று உரிய அதிகாரிகளிடம் கேட்கும்போது, தங்களுக்கு எதுவும் தெரியாது என்று அதிகாரிகள் கையை விரித்து பதிலளிக்கின்றார்கள்.

இப்படிப் பொறுப்பற்ற விதத்தில் பதிலளிக்க முடியுமா? அப்படியென்றால் எமது நாட்டிலுள்ள நீதியால் என்ன பிரயோசனம்? நாட்டிலுள்ள சட்டத்தின்படி தங்களுக்கு இழைக்கப்பட்ட குற்றத்திற்கு நிரூபணமான சாட்சிகள் இருக்குமாயின், அந்தக் குற்றமிழைத்தவருக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். அப்படி நம்பிக்கை தரும் விதத்தில் ஏதாவது நமது நாட்டில் நடக்காததுதான் நம்முன்னாலுள்ள பிரச்சினையும் அவநம்பிக்கையுமாகும்.

உண்மையைக் கண்டறிவதற்கான சகல உரிமைகளும் நாட்டு மக்களுக்கு இருக்கின்றது. அது பற்றி ஆராய வேண்டும். அதற்காக நடவடிக்கையும் எடுக்க வேண்டும். அதனை நாம் காலத்தின் தேவை கருதியும் நாட்டின் எதிர்கால நன்மை கருதியும் செய்தாக வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்களை அந்தத் துயரத்திலிருந்து விடுவிப்பதற்கான வழிவகைகள் உலகில் போர் இடம்பெற்ற வேறு பல நாடுகளில் போருக்குப் பின்னரான நிலைமாறு கால நீதி காலப் பகுதியில் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

அதைப் போல நாமும் செயற்பட்டு துயரமற்ற தேசமாக இந்த நாட்டை வழிநடத்த வேண்டும். இனிமேலும் இன முரண்பாடுகள் கூர்மையடைந்து செல்லாதவாறு இந்த நாட்டில் வாழும் அனைவரும் அடுத்தவரின் மனித உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும் – என்றார்.

இந்த ஒன்று கூடல் செயலமர்வில் மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலிருந்து அனைத்து மதங்களையும் சேர்ந்த பிரதிநிதிகளும் சமூக செயற்பாட்டாளர்களும் பாதிக்கப் பட்டவர்களும் தேசிய சமாதானப் பேரவையின் அதிகாரிகளும் பங்குபற்றினர். (வ-4)

# பன்னாட்டு ஒலிம்பியாட் போட்டியில் பசறை மாணவன் தனிஸ்கர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், நவ. 7



பசறை தமிழ் தேசியக் கல்லூரியில் கற்கும் சந்திரகாசன் தனிஸ்கர் இந்தோனேசியாவில் நடைபெறவுள்ள பன்னாட்டு ஒலிம்பியாட் விஞ்ஞானப்போட்டியில் பங்குபற்றுவதற்காக அந்த நாட்டுக்குச் செல்லவுள்ளார். கல்வி அமைச்சினால் நடத்தப்படும் ஒலிம்பியாட் விஞ்ஞான போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டியிருந்த நிலையில் அவர் இந்தோனேசியாவுக்குப் பயணமாகிறார். எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை போட்டி நடைபெறவுள்ளது.

இவர் மூத்த விஞ்ஞான ஆசிரியர் சந்திரகாசன், ஆசிரியை தர்சினியின் புதல்வராவார். பசறை கல்வி வலயத்திலிருந்தும் இந்தப் பாடசாலையிலிருந்தும் முதல் முறையாக பன்னாட்டு மட்டத்தில் பங்குபற்றும் முதல் தமிழ் மாணவன் என்ற பெருமை இவரை சார்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீருடை வவுச்சர்கள் நாளை விநியோகம்

அரச பாடசாலை மாணவர்கள் இலவச சீருடை பெறுவதற்கான வவுச்சர்கள் நாளை செவ்வாய்கிழமை முதல் விநியோகிக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்தது.

இது தொடர்பில் கொழும்பு கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதாரன வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாணவர்களுக்கு சீருடை வவுச்சர்கள் கிடைக்கச் செய்வதற்கு இலகுவான நடைமுறையொன்று பின்பற்றப்படும். கடந்த வருடத்தைப் போன்று மாணவர்களின் பெற்றோர்கள் பாடசாலைக்குச் செல்வதற்கோ, கையொப்பம் இடுவதற்கான அவசியமில்லை.

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் சீருடை கூப்பன்களுக்கான பொறுப்பை அந்தப் பிரிவு ஆசிரியர்கள் ஏற்க வேண்டும். தரம் 6 முதல் ஏனைய சகல மாணவர்களும் அவர்களுக்குரிய வவுச்சர்களைப் பெற்றுக் கொள்ள முடியும். வகுப்புக்குப் பொறுப்பான ஆசிரியர் இந்த வவுச்சர்களை விநியோகம் செய்வார்.

என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## சில பகுதிகளுக்கு இன்று மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார். யாழ்.பிரதேசத்தில் வறுத்தலை விளான், வீமன்காமம், காங் கேசன்துறை கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5ஆவதுபொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வு காலவிடுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என்று அவர் தெரிவித்தார். (வ-10)

**ஆலய உதவியாளர் தேவை**

பகுதி நேரமாகவோ / முழு நேரமாகவோ விரும்பத்தக்கது. (திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் ஆலயத்துக்கு)

**தொடர்பு:- 077 3867458**

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 06.11.2016 | வெற்றி வாரம் 2053 | ஊதா
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 07 34 40 57
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி ரூ 5,535,100/=
வெற்றி இலக்கங்கள் 24 67
டபிள் சான்ஸ்

Galaxy Star
வெற்றி வாரம் 107
திகதி 06.11.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
02 03 21 35 39
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,000,000/-

**பொற்பதி அறிவாலயம் கட்டட நிதிக்காக பொற்பதி இந்து விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட மாபெரும் அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு முடிவுகள் 06.11.2016**

1 ஆம் பரிசு இலக்கம் - 05208
2 ஆம் பரிசு இலக்கம் - 05940
3ஆம் பரிசு இலக்கம் - 06003

ஆறுதல் பரிசு இலக்கங்கள்

| | |
|---|---|
| 1) 15855 | 6) 17769 |
| 2) 13886 | 7) 06949 |
| 3) 15805 | 8) 00845 |
| 4) 06016 | 9) 06669 |
| 5) 15007 | 10) 00706 |

பரிசுக்குரியவர்கள் உரிய ஆதாரங்களுடன் 14.11.2016 ஆம் திகதிக்கு முன்னர் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகம்.
பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம். கொக்குவில்.

T.P : 077 174 7999
(ஜே/5941)(17.20)

**கணக்காளர் சேவைப்போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள் யாழ் - ஸ்ரான்லிவீதியில(GAS)**

ஆரம்பம் : 19 நவம்பர் 2016 சனிமு.ப 9.00

பிரபல **Professionals :**

* நிதிக்கணக்கீடு - I, II
* கிரயமுகாமைத்துவக் கணக்கீடு
* அரசநிதிநடைமுறைகள்
* கணக்காய்வும் புலனாய்வும்

} திரு.க.பிரதீபன் (SLAuS)

* பொதுவிவேகமும் கிரகித்தலும் -

திரு.S. ஹரிகரகணபதி
திரு.பா.மகாலிங்கம்

சனி,ஞாயிறு. போயாதினங்களில் மட்டும் முழுநாள் வழிகாட்டல்கள்.

(J 5936) (16,17,19)

**தொடர்புகளுக்கு:0778448709 (சசி)**

## நன்றி நவிலலும் மதிய போசன அழைப்பும்



## நடராசா துரைசிங்கம்

01.10.2016ல் இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவர் நடராசா துரைசிங்கம் அவர்களின் மரணச்செய்திகேட்டு நேரில் வந்து கிரியைகளில் கலந்து கொண்டவருக்கும் தொலைபேசி, தொலைநகல் ஆகியவற்றின் மூலம் துயர் பகிர்ந்தோர்க்கும் கண்ணீர்அஞ்சலி பிரசுரித்தும், மலர் வளையங்கள் சாத்தியும் அஞ்சலித்தோருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் பங்கேற்றவர்களுக்கும் எமது மனப்பூர்வ மான நன்றி களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் இன்று 07.11.2016 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள தியாகிஅறக்கொடை நிறுவனத்தின் (T.C.T.) மண்டபத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: அழைப்பிதழ் கிடைக்கப்பெறாதவர்கள் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மலர் வாசம்
ஞானபாஸ்கரோதயசங்க வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
0777 935 944

## வினாடிவினா போட்டியில் யாழ். மருத்துவபீடம் முதலிடம்



நேற்று 06.11.2016 அன்று College of Paediatricians இன் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியில் மருத்துவபீடங்களுக்கிடையே நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் ஏழு மருத்துவபீடங்களை பிரதிநிதித்துவபடுத்தி அணிக்கு நால்வர் கொண்ட குழுக்கள் பங்குபற்றின.

இப் போட்டியில் யாழ். மருத்துவபீடம் சார்பில் 33 ஆம் அணியை சார்ந்த V.அருணாத், R.வினிதரன், S.லக்சிகா, A.அனிஷ்டன் ஆகியோர் வைத்திய கலாநிதி திருமதி கீதாஞ்சலி சத்தியதாஸ் மற்றும் ஏனைய குழந்தை மருத்துவ நிபுணர்களின் வழிகாட்டலில் இப் போட்டியில் கலந்து கொண்டனர்.

மிகவும் விறுவிறுப்பாகவும் சுவாரஸ்மாகவும் இடம்பெற்ற இப்போட்டியில் யாழ். மருத்துவபீட மாணவர்கள் ஏனைய பல்கலைக்கழகங்களை பின் தள்ளி முதலிடத்தை சுவீகரித்து சாதனை படைத்துள்ளனர்.

பங்கு பற்றிய மாணவர்களுக்கு யாழ். மருத்துவபீட மாணவர் ஒன்றியம் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

மேலும் இப்போட்டியில் 2ஆம் 3 ஆம் இடங்களை தமதாக்கிக் கொண்ட சேர்.பொன் கொத்தலாவல டிபென்ஸ் மற்றும் ருகுணு பல்கலைக் கழகங்களிற்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ் வெற்றிக்குவழிகோலிய மருத்துவபீட பீடாதிபதி வைத்திய கலாநிதி S.ரவிராஜ் ஐயா அவர்களுக்கும் மற்றும் போக்குவரத்து வசதிகளை ஒழுங்கு செய்து உதவிய உதவிப்பதிவாளர் திரு. சர்வேஸ்வரன் அவர்களுக்கும் மருத்துவபீட மாணவர் ஒன்றியம் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(ஜே/5942)(17.20)

## நான்காம் ஆண்டு நினைவு



தோற்றம்
19.01.1950

மறைவு
07.11.2012

நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

### சவரிமுத்து தோமஸ்

(Ex.Technision of Radio Ceylon and Technision, Royal Air Force of Oman)

நீங்கள்
எம்மை விட்டு மறைந்தாலும்
என்றும் மறக்க முடியா அன்பை
தந்துவிட்டு சென்றீர்கள்
உங்களை நினைக்கும் அந்த
நொடியே எம் கண்களில்
கசியும் கண்ணீர்த் துளிகளில்
இன்றும் வாழ்கின்றீர்கள்

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமகன்மார், பேரன்மார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடைகளைத்...

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: நேரடியான போர் ஒன்று இல்லாவிட்டாலும், மறைமுகமான போரை – ஒடுக்குமுறையை நாம் எதிர்கொள்கின்றோம். ஒரு காலத்தில் ஈழம் தவிர்ந்த எல்லாம் தரலாம் என்று முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச அடிக்கடி சொல்வார். ஆனால், எதனையும் தர அவர் தயாராக இருக்கவில்லை. இப்போதும் அதே போன்ற ஒரு நிலைதான் காணப்படுகின்றது.

எல்லாம் திறந்து விடப்பட்டுள்ளது போன்ற ஒரு தோற்றப்பாடு காண்பிக்கப்பட்டாலும் கூட, மறைமுகமான அழுத்தங்களும் ஒடுக்கு முறைகளும் தொடரத்தான் செய்கின்றன. ஒரு லட்சத்துக்கும் அதிகமான படையினரை வடபகுதியில் வைத்துக் கொண்டு மக்கள் எவ்வாறு சுதந்திரமாக நடமாட முடியும்? எப்படித் தொழில் செய்ய முடியும்? இது போன்ற பல்வேறு நெருக்கடிகள் எம் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் திணிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு ஒரு நீண்ட வரலாறு உள்ளது. பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமிழ் மக்களுடைய குரலாக அவை ஒலித்திருக்கின்றன. இதற்காக அந்தப் பத்திரிகை நிறுவனங்கள் சந்தித்த நெருக்கடிகள் பல. யாழ்ப்பாண யோகர் சுவாமிகள் சில தசாப்தங்களுக்கு முன்னர் சொன்னார்: எரிப்பார்கள், ஏசுவார்கள். உண்மையை எழுதுங்கள். உண்மையாக எழுதுங்கள் என்று. அவரது தீர்க்க தரிசனம் உண்மையாகவே இருந்தது. அடக்கு முறைகளுக்கு மத்தியிலும், தமிழ்ப் பத்திரிகைகள் தமது பத்திரிகா தர்மத்தைக் கைவிடவில்லை. தாம் சார்ந்த மக்களின் குரலாகவே அவை எப்போதும் ஒலித்தன. அதற்காகக் கொடுக்கப்பட்ட விலையும் அதிகம்தான்.

நிமலராஜனில் ஆரம்பமாகி இந்த 16 வருட காலத்தில் சுமார் 40 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் இலங்கை முழுவதிலும் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அல்லது காணாமற் போயிருக்கின்றார்கள் எனக் கணிப்பீடு தெரிவிக்கின்றது. இதில் 3 பேரைத் தவிர்ந்த ஏனைய அனைவருமே தமிழர்கள்.

கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் விசாரணைகள் எதுவும் முன்னைய ஆட்சியில் நடத்தப்பட்டு, குற்றவாளிகள் நீதியின் முன்பாக நிறுத்தப்படவில்லை. அவர்கள் அவ்வாறு செய்வார்கள் என்ற நம்பிக்கையும் அப்போது இருக்கவுமில்லை. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது, ஊடகவியலாளர்களின் கொலைகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. ஆனால், இரண்டு சிங்கள ஊடகவியலாளர்களின் கொலைகள் தொடர்பான விசாரணைகளை மட்டுந்தான் புதிய அரசு மீள் விசாரணைக்கு எடுத்துள்ளது. தமிழ் ஊடகவியலாளர்களின் கொலைகள் தொடர்பில் எந்த விதமான விசாரணையும் இல்லை என்ற நிலைதான் தொடர்கின்றது.

இதுவரையில் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாமலிருப்பதையிட்டு என்னுடைய அதிருப்தியை இந்த இடத்தில் நான் தெரிவிக்க விரும்புகின்றேன். தமிழ் ஊடகவியலாளர்களுக்கு ஒரு நீதி சிங்கள ஊடகவியலாளர்களுக்கு இன்னொரு நீதி என்ற நிலை தொடர்ந்தால் நல்லிணக்கத்தையும் நம்பிக்கையையும் எவ்வாறு கட்டியெழுப்ப முடியும்?

மாகாணசபைத் தேர்தலின் போது மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாம் எதனைச் சொல்லி வாக்குக் கேட்டோமோ அதனைத் தான் இப்போதும் கேட்கின்றோம். மக்களுக்கு நாம் கொடுத்த வாக்குறுதியிலிருந்து அல்லது மக்கள் எமக்குக் கொடுத்த ஆணையிலிருந்து நாம் பின்வாங்க முடியாது.

அரசமைப்பு பேரவையில் இடம்பெறும் நகர்வுகள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுப்பனவையாக அமையவில்லை. பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுப்பதா இல்லையா என்பதிலேயே தெளிவற்ற நிலைதான் உள்ளது. சிறுபான்மையினரை இரண்டாந்தரப்பிரஜைகளாகத்தான் பிரதான கட்சிகள் மதிக்கின்றன என்பதற்கு இது ஒரு உதாரணம்.

இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதில் பல தடைகளைத் தாண்டிச் செல்ல வேண்டிய தேவையும் உள்ளது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அதற்கடுத்ததாக பொது வாக்கெடுப்பு என்ற தடையும் உள்ளது. இவை அனைத்தையும் தாண்டி நியாயமான ஒரு தீர்வு கிடைத்தால் நாம் அதனை நிச்சயமாக வரவேற்போம். ஆனால் அதற்கான சூழ்நிலைகள் இருக்கின்றனவா? அதனை நாம் எவ்வாறு உருவாக்கப் போகின்றோம்?

வெறுமனே மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்துக் கொண்டிருப்பதால் என்ன பயன்? எனவே எமது நிலை கவலைக்கிடமாக இருக்கும் நேரம் இது என்றார்.

(வ-5)


## யாழ்ப்பாணம் மாநகர சபை பகிரங்க ஏலம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நீர்வேலைப் பகுதியில் பழுதடைந்த நிலையில் உள்ள 18 பம்கள் ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது.இதன் விவரங்களை அலுவலக நேரத்தில் யாழ் மாநகர இந்து விடுதியில் பார்வையிடலாம்.

**ஆகக்குறைந்த கேள்வித் தொகை (ஒரு பம்):**
ரூபா 6, 000.00

**பகிரங்க ஏலம் நடைபெறும் இடம்:**
யாழ். மாநகர இந்து விடுதி

**காலம்:** 22.11.2016 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
முற்பகல் 10.30 மணி

**ஆணையாளர்**
**யாழ்ப்பாணம் மாநகர சபை**

## மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான பொதுச்சந்தைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

மாந்தைகிழக்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள் மற்றும் கோழி இறைச்சிக்கடைகள் 2017.01.01 தொடக்கம் 2017.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 07.11.2016 தொடக்கம் 22.11.2016 வரை
கேள்விஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 23.11.2016 பிற்பகல் 2.00 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 25.11.2016 முற்பகல் 10.30 மணி

**கேள்வி நிபந்தனைகள் :**

1. கேள்விப் பத்திரங்கள் செயலாளர் மாந்தைகிழக்கு பிரதேசசபை, பாண்டியன்குளம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாக அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்பதோடு கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் தங்களது தேசியஅடையாளஅட்டை மற்றும் கிராமசேவையாளரின் வதிவிடச்சான்றிதழ் என்பவற்றுடன் சமுகமளிக்க வேண்டும்.
2. எந்தவொரு கேள்விகளையும் காரணம் காட்டது ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவாக கேள்வி கோருபவர்களின் கேள்வித்தொகை மீளஅளிக்கப்படமாட்டாது.
3. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர்கள் கேள்வித்தொகையின் 1/3பகுதியை 01.12.2016 இற்குமுன்னர் செலுத்தி சபையுடன் ஒரு ஒப்பந்தத்தை செய்து கொள்ளப்பட வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராககணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்படமாட்டாது.

| இல | சந்தைகள் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப்பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடியஆகக் குறைந்ததொகை |
|---|---|---|---|---|
| 1 | பாலிநகர் | | | |
| | மரக்கறிச்சந்தை | 1000 | 1500 | 20000 |
| | மீன் சந்தை | 1000 | 1500 | 10000 |
| | கோழியிறைச்சிக் கடை | 1000 | 1500 | 25000 |
| 2 | நட்டாங்கண்டல் | | | |
| | மரக்கறிச்சந்தை | 1000 | 1500 | 15000 |
| | மீன் சந்தை | 1000 | 1500 | 10000 |
| | கோழியிறைச்சிக் கடை | 1000 | 1500 | 10000 |
| 3 | பாண்டியன்குளம் | | | |
| | மரக்கறிச்சந்தை | 1000 | 1500 | 10000 |
| | மீன் சந்தை | 1000 | 1500 | 10000 |
| 4 | பொன்னகர் | | | |
| | மரக்கறிச்சந்தை | 1000 | 1500 | 10000 |
| | மீன் சந்தை | 1000 | 1500 | 10000 |
| | கோழியிறைச்சிக் கடை | 1000 | 1500 | 10000 |

**மாந்தைகிழக்குபிரதேசசபையின் பொதுஅறிவித்தல்.**

1. மாந்தைகிழக்கு பிரதேசசபைக்குட்பட்ட அனைத்து கடைகளும் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வியாபார அனுமதிப்பத்திரத்தை 2017.03.31 ஆம் திகதிக்கு முன்னர் மாந்தைகிழக்கு பிரதேசசபையில் பெற்றுக் கொள்ளவும். தவறுபவர்கள் மீது 01.04.2017 இற்கு பின்னர் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்
2. மாந்தைகிழக்கு பிரதேசசபைக்குட்பட்ட அனைத்து கட்டட ஒப்பந்தகாரர்களும் 2017.03.31 இற்கு முன்னர் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.
3. மாந்தைகிழக்கு பிரதேசசபைக்குட்பட்ட பிரதேசங்களில் நிரந்தர கட்டடங்கள் கட்டுபவர்கள் பிரதேசசபையின் அனுமதியினை பெற்றுக் கொள்ளவும் அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

செயலாளர்.
மாந்தைகிழக்குபிரதேசசபை.

## யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்(வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
பதிவு இலக்கமும் திகதியும் ஜே/1639 - 12.05.1976
அங்கத்தவர் பட்டியல்கள் காட்சிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் அனைத்துக் கிளைகளுக்குமான கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளன. இது தொடர்பாக வாக்களிக்கத் தகுதி பெற்ற அங்கத்தவர் பட்டியல்கள் 15.10.2016 இல் மூடப்பட்டு 07.11.2016 ஆம் திகதியிலிருந்து 21.11.2016 ஆம் திகதி வரை எமது கிளைநிலையங்களிலும் கிளை நிலையங்கள் இயங்காத கரவெட்டி, பருத்தித்துறை கிளைகளின் அங்கத்தவர் பட்டியல்கள் முறையே கரவெட்டி, பருத்தித்துறை கால்நடை வைத்திய நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்அங்கத்தவர் பட்டியலில் சங்கத்தின் துணைவிதிப் பிரிவு 28.1.14 இற்கமைய தெரிவு செய்யப்பட முடியாதவர்களை இனங்காணக் கூடியவாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ் அங்கத்தவர் பட்டியல்கள் தொடர்பாக மேன்முறையீடுகள் அல்லது ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் அங்கத்தவர்கள் எழுத்து மூலமானபதிலை 02.12.2016 ஆம் திகதிக்குப் பிந்தாது " செயலாளர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ - து) திருநெல்வேலி கிழக்கு. கோப்பாய் " என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**07.11.2016** **செயலாளர்.**

## புதிய மாணவர் அனுமதி 2017

**2017 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர் அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

01. தரம் 6 இற்கான தமிழ் மொழி மூல வகுப்புக்கள்.
02. தரம் 6 இற்கான (ஆங்கில மொழி மூலமான கணிதம், விஞ்ஞானம் உள்ளிட்ட) இருமொழிக் கற்கை வகுப்புக்கள் (Bilingual Classes)
03. தரம் 10 இற்கான தமிழ் மொழி மூல வகுப்புக்கள்.

மேற்குறித்த வகுப்புகளுக்கு அனுமதி பெற விரும்புவோர் பாடசாலையால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து 2016.11.23 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

**அனுமதிக்கான பரீட்சைகள் 2016.12.30 ஆம் திகதி நடைபெறும்.**

**அதிபர்,**
**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி,**
**கோப்பாய்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் காணிகளை இராணுவத்தினர் விடுவிக்க வேண்டும்

## ஸ்ரீநேசன் எம்.பி. வலியுறுத்து

மட்டக்களப்பு, நவ. 7
மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனையில் படையினர் கைப்பற்றி வைத்துள்ள பொது மக்களின் காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும்.
இவ்வாறு தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இரண்டாம் கட்ட ஈழப் போர் 1990ஆம் ஆண்டு ஆரம்பித்தபோது இந்தப் பகுதியில் படை நடவடிக்கை மேற்கொண்ட இராணுவத்தினர் 107 குடும்பங்களின் வீடுகள் வளவுகள், மற்றும் அரச பாடசாலை என்பனவற்றைக் கைப்பற்றி இராணுவ முகாம் அமைத்தனர்.
குறித்த வீட்டு உரிமையாளர்களின் உறவினர்கள் 15 பேர் 1990 ஆம் ஆண்டு சித்தாண்டி முருகன் ஆலயத்திலிருந்து கைது செய்யப்பட்டு காணாமலாக்கப்பட்டிருந்தார்கள். அதில் 14 வயது மாணவனும் உள்ளடக்கம்.
படையினர் கைப்பற்றியிருந்த பொதுமக்களின் வீடுகள் மற்றும் காணிகளில் 78 இடங்களை விடுவித்துள்ளனர். இன்னமும் 29 குடும்பங் களின் வீடுகளும் காணிகளும் அரச பாடசாலை யொன்றும் விடுவிக்கப்படாமல் படையினர் தமது கட்டுப்பாட்டிலேயே வைத்துள்ளனர். படையினர் கைப்பற்றி வைத்துள்ள பொதுமக்களின் வீடுகள் மற்றும் காணிகள், அரச பாடசாலை என்பனவற்றை இந்த நல்லாட்சிக் காலத்தில் உடனடியாக விடுவிக்க வேண்டும்.
பொதுமக்களின் வீடுகளுக்கும் காணிகளுக்குமாக படையினரால் மாதாந்தம் 250 ரூபாவே வாடகையாக வழங்கப்படுகின்றது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.
இது குறித்தும் நல்லாட்சி அரசு கவனத்தில் எடுக்க வேண்டும் – என்றார். (ற-4)

## அச்சகம் உருவாக்கியுள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

### கெஹலிய ரம்புக்வெல கூறுகின்றார்

கொழும்பு, நவ. 7
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு பில்லியன் ரூபா செலவில் புதிய பத்திரிகையொன்றை ஆரம்பிக்கத் தேவையான அச்சகமொன்றை அமைத்துளார் என்று முன்னாள் அமைச்சரும் மகிந்த சார்பு நாடாளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.
இந்த நிதியை முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனின் மருமகன் முதலீடு செய்துள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார்.
கண்டி புஷ்பதான பாலிகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டு எதிர்க் கட்சியின் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
உலகிலுள்ள பிரபல இணையத்தள செயற்பாட்டாளர்கள் 10 பேரை அடுத்த மாதம் நாட்டுக்கு வரவழைத்து 10 இணையத்தளங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பயண ஏற்பாட்டுக்காக ஹெலிகொப்டர் ஒன்றை இறக்குமதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (ற-4)

## குடி தண்ணீர் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.7
சுகாதாரம் மற்றும் குடி தண்ணீர் தொடர்பான தெற்காசியப் பிராந்திய கற்கைக்கான நிகழ்வு கண்டியில் நடைபெறவுள்ளது.
வேள்ட்விசன் ஆஸ்திரேலியா நிதி உதவியுடன் நான்கு நாள் பிராந்திய கற்கைகள்– கள சுற்றுலாக்களுக்கு ஊடாக விடயங்கள் ஆராயப்படவுள்ளன.
எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள பிராந்திய நிகழ்வில் இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்வர். யாழ்.மாவட்டத்தில் இருந்து வேள்ட் விசன் மற்றும் அரச அலுவலர்கள் மேற்படி கண்டி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இன்று திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு கண்டி நோக்கி புறப்படுவர் என வேள்ட்விசன் நிறுவன முகாமையாளர் தெரிவித்தார். (ற-50)

## ஒன்றுகூடலும் நன்றித்திருப்பலியும்

யாழ்ப்பாணம், நவ.7
ஊறணி புனித அந்தோனியார் ஆலய மக்களின் ஒன்று கூடலும் நன்றித் திருப்பலியும் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெற உள்ளது. நாளை பி.ப 3 மணிக்கு நடைபெற உள்ள இந்த நிகழ்வுக்கு ஆலய மக்கள் அனைவரையும் ஆலய முன்றிலில் சமுகமளிக் குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற-555)

## பாலர் பகல் பராமரிப்பு நிலையம்

யாழ்ப்பாணம்,நவ.7
யாழ். மாநகராட்சி மன்றம் பாலர் பகல் பராமரிப்பு நிலையம் ஒன்றை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.
மாநகராட்சி மன்றத்தின் முன்பள்ளி கட்டடத் தொகுதியில் இந்தப் பாலர் பகல் பராமரிப்பு நிலையம் இயங்கவுள்ளது.
இந்த நிலையத்தில் பகல் பராமரிப்புக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பிள்ளைகள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்று மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.
பகல் பராமரிப்பில் இணைத்துக் கொள்ளப்படும் சிறுவர்களுக்கு சகல வசதிகளும் மாநகராட்சி மன்றத்தினரால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-17)

# வாழ்வோம் வளம்பெறுவோம் திட்டத்தில் 36 பேருக்கு உதவி

முல்லைத்தீவு, நவ.7
வட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனால் முன்னெடுக்கப்படும் 'வாழ்வோம் வளம்பெறுவோம்' செயற்றிட்டத்தின் ஏழாம் கட்டத்தில் வயோதிபர்கள் உட்பட 36 பேர் உள்ளீர்க்கப்பட்டனர் என்று வடமாகாணசபை உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் அமைந்துள்ள மக்கள் தொடர்பகத்தில் நேற்று முன்தினம் காலை பத்து மணிக்கு நடைபெற்ற செயற்றிட்ட நிகழ்விலேயே குறித்த 36 பேரும் உள்ளீர்க்கப்பட்டனர். அதற்கான பங்களிப்பை ஆஸ்திரேலியாவில் வாழும் புலம்பெயர் அன்பர்கள் வழங்கியுள்ளனர்.
தற்காலிக வாழ்வுடைமை ஊக்குவிப்பை நோக்காகக் கொண்டு நாளாந்த உணவுத் தேவைக்கு இடர்படும் குடும்பங்களுக்கான உதவி வழங்கலாக 'வாழ்வோம் வளம் பெறுவோம்' என்ற செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. புலம்பெயர்ந்து வாழும் ஈழ அன்பர்களின் நிதிப்பங்களிப்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தச் செயற்றிட்டத்தின் முதலாம் கட்டமானது 2014ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 20 ஆம் திகதி நடைபெற்றது. தொடர்ச்சியாக ஆறு கட்டங்கள் நிறைவுற்ற நிலையில் செயற்றிட்டத்தின் 7ஆம் கட்டத்துக்கான பங்களிப்பை புலம்பெயர்ந்த ஆஸி. புலம் பெயர் தமிழர்கள் வழங்கினர். அவர்களுக்கு மொத்தமாக 600 கிலோ அரிசியும் கர்ப்பிணித் தாய் ஒருவருக்கு பண ஊக்குவிப்பும் வழங்கப்பட்டது – என்றார். (ற-21)

# இலங்கை மீனவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ.7
தமிழகத்தின் தனுஷ்கோடி கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இலங்கை வடபகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மூவருக்கும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்க மறியல் நீடிக்கப்பட்டது.
ராமநாதபுரம் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட வவுனியாவைச் சேர்ந்த தேவநேசன், அவரது சகோதரரான அருள் நேசன் மற்றும் தலைமன் னார் பகுதியைச் சேர்ந்த விஜி ஆகியோருக்கே மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
கடந்த மாதம் 22 ஆம் திகதி இரவு தனுஷ்கோடியின் அரிச்சல் முனை முதலாம் தீடையில் விசைப்படகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த குறித்த மீனவர்கள் படகு திசை மாறியதால் அரிசல் பகுதியில் கரையொதுங்கினர். கடலோரப் பாதுகாப்புப் பொலிஸார் குறித்த மூன்று மீனவர்களையும் கைதுசெய்தனர். ராமநாத புரம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட மூன்று இலங்கை மீனவர்களும் 15 நாள் விளக்க மறியிலில் வைக்கப்பட்டனர். சென்னை புழல் சிறையில் அடைக் கப்பட்டனர். இந்த வழக்கு நேற்று ராமநாதபுரம் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்டது. விசாரணைகளின் பின்னர் மூவரும் எதிர்வரும் 18ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.
காரைக்கால் மீனவர்களை இலங்கை அரசு விடுவித்த நிலையில் இலங்கை மீனவர்களை விரைவில் விடுவிக்க மத்திய அரசு உத்தரவிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-21)





வேலைவாய்ப்பு
யாழ். நகரில் உள்ள கடை ஒன்றுக்கு Corel Drow, photo Shop தெரிந்த பெண் வேலையாள் தேவை.
077 651 9913

தவறிவிட்டது
கடந்த (02.11.2016 ) அன்று த. தர்மேந்திரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (531422562V) சிறுதொகைப் பணத்துடன் முக்கிய ஆவணங்களும் அடங்கிய கறுப்பு நிற பேர்ஸ் கே.கே.எஸ். வீதி சந்திக்கும் மொபிடெல் கொம்பனிக்கும் (ஸ்ரான்லி றோட்) இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.
075 098 1005, 021 222 6272

தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை
இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சியிலுள்ள கிளைகளில் 31.08.2016க்கு முன் தங்க கடனுக்காக வைக்கப்பட்ட நகைகளும் 60 நாட்களுக்கு மேல் மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளை 19.11.2016ம் திகதி காலை 10.00 மணி முதல் இல.56/22/B, ஸ்டென்லி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலகத்தில் 85வது சட்டத்தின் நிபந்தனைகள் பிரகாரம் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.
ASIA ASSET FINANCE PLC
Muthoot Finance
உதவி பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
Hotline: 071-6531349
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## யானைகளின்...

வாகனத்தில் கொண்டுவந்து இறக்கிவிடப்பட்டதைக் கண்டதாக விவசாயிகள் சிலர் தெரிவித்தனர்.

இவ்வாறு பிரதேச விவசாயிகள் சங்கத் தலைவர் பூபால சிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டம் நெடுங்கேணி, ஒலுமடு, சேனைப்புல வுப் பகுதிகளில் நேற்று அதிகாலையில் ஊருக்குள் புகுந்த யானைகளின் தாக்குதலால் ஒரே நாளில் மட்டும் சுமார் 15 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டது. இதேபோல் கடந்த வாரம் பல இடங்களில் இவ்வாறு சொத்து அழிவுகள் ஏற்பட்டன. குறிப்பாக இந்தப் பகுதி விவசாயிகளால் மேற்கொள்ளப் படும் பப்பாசிச் செய்கையை இலக்கு வைத்து யானைகள் அழிக்கின்றன. நேற்று மட்டும் 3 ஏக்கருக் கும் அதிக மான நிலப்பரப்பில் பயிரிட்டிருந்த பப்பாசிச் செய்கையை யானைகள் அடியோடு அழித்துள்ளன.

சில நாள்களுக்கு முன்பு ஓர் வீட்டின் கூரைப்பகுதியை தாக்கிச் சேதப்படுத்திய வேளையில் வீட்டார் நெருப்கைக் கொளுத்தி அவலக்குரல் எழுப்பியவாறு ஓடித் தப்பியமை யால் உயிர் பிழைத்தனர்.

யானைகளின் தாக்கம் தொடர்வது குறித்துச் சுட்டிக்காட்டி அதற்கு ஆவன செய்யுமாறு நாம் பலமுறை கோரிக்கை விடுத்தபோதும் யானைகளைப் பிடிப்பதாக வாக்குறுதி யளித்த அதிகாரிகள் அதனை நிறைவேற்றவில்லை.

போர் காரணமாக பெரும் அழிவுகளையும் உயிரிழப்புக் களையும் சந்தித்து அதில் இருந்து மீண்டுவருவதற்காக வங்கிகளிலும் உறவுகளிடமும், நிறுவனங்களிலும் கடனைப் பெற்றுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டால், அதனை அறுவடை செய்வதில் நிச்சயமற்ற தன்மையே காணப்படுகின்றது.

தென்பகுதிகளில் இருந்து யானைகளைக் கொண்டுவந்து இறக்குவது இதுதான் முதல் தடவையல்ல. இவ்வாறு பலமுறை இடம்பெற்றுவிட்டன. இது தொடர்பில் அதி காரிகளிடம் தொடர்பு கொண்டால் பிரதேசத்தில் தொடர்ச்சி யாக தாக்குதலை மேற்கொள்ளும் யானைகளை இடம் மாற்றி விடுவதன் மூலம் குறித்த யானை சாந்தம் கொள் ளும், அதன் பிரகாரமே இவ்வாறு இறக்கப்படுவதாக கூறுகின்றனர். ஒரு தடவையேனும் இங்கிருந்து யானை கள் பிடித்து வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்பட வில்லை.

இந்த விடயத்தில் கூட அதிகாரிகள் தென்பகுதிகளுக்கு ஒரு நியதியையும் எமக்கு ஓர் நியதியையும் கடைப் பிடிக்கின்றனரா? என்ற சந்தேகமும் எழுகின்றது. இத னால் குறித்த விடயத்துக்கு அதிகாரிகள் உரிய தீர்வை விரைந்து மேற்கொள்ளத் தவறும் சந்தர்ப்பத்தில் பிரதேச விவசாயிகள் வீதியில் இறங்கிப் போராடுவதைத் தவிர வேறு மார்க்கம் தென்படவில்லை - என்றார். (வ-4,101)

## புத்தர்சிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வியெழுப்பியுள்ளார் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னு லாப் தீன் நஸீர் அஹமட். இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இறக்காமம் மாயக்கல்லி மலையில் புத்தர் சிலை வைக் கப்பட்டுள்ளமை மாத்திரமன்றி, அதற்கு அருகிலுள்ள காணியையும் தேரர்கள் கோரியிருப்பதாக அறிகின் றேன். கடந்த ஆட்சிக் காலத்தில் சிறுபான்மைச் சமூகத்தி னரின் பூர்வீக இடங்கள் திட்டமிடப்பட்ட வகையில் ஆக் கிரமிக்கப்பட்டன.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த இடங் களுக்குத் திரும்பும் போது புதிய குடியேற்றங்களையும் இராணுவ முகாம்களையுமே அவர்களால் காண முடிந் தது. இந்த நிலைமையை மாற்றியமைக்கவே சிறு பான்மை மக்கள் பெரும் எதிர்பார்ப்புக்களுடன் நல்லாட்சி அரசுக்கு வாக்களித்தனர். ஆனால் இன்று ஜனாதிபதி யும் பிரதமரும் விரும்பாத பல விடயங்கள் திட்டமிடப்பட்ட வகையில் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

மாயக்கல்லி மலையில் புத்தர்சிலை வைக்கப்பட்டுள்ள மைக்குப் பின்னால் நல்லாட்சியின் முக்கிய அமைச்ச ரொருவர் இருப்பதாக கூறப்படுகின்றது. அவ்வாறாயின் அந்த அமைச்சர் தேசிய அரசை கவிழ்க்க முயலும் சக்தி களுக்கு துணை போகின்றாரா என்ற சந்தேகம் எழுகின் றது என்று அதில் கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரி வித்தார். (வ-4)

### மரண அறிவித்தல்

## திருமதி பொற்கலை சிவநேசன்

(ஆயுள் வேத வைத்தியர்)



காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி பொற்கலை சிவநேசன் (ஆயுள்வேத வைத்தியர்) நேற்று (06.11.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரசையா - பூலோகம் தம்பதியரின் அன்பு இளைய மகளும், மாதகல் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் இரத்தினாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும், சிவநேசனின் (ஆயுள் வேத வைத்தியர்) அன்பு மனைவியும், பகவதி, ஞானக்கிளி, காலஞ்சென்ற கோமதி மற்றும் காமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாதகலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இந்திரகாலன், செல்வராணி மற்றும் ஜெயபாலன், லிங்கேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.11.2016 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.45 மணியளவில் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வலந்தலை,
காரைநகர். 17.15.) 5932

தகவல்:
கணவர் (செ. சிவநேசன்).

### மரண அறிவித்தல்

திருமதி

## மங்கையர்க்கரசி மார்க்கண்டு



யாழ்ப்பாணம் பாரதி வீதி, கச்சேரியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மங்கையர்க்கரசி மார்க்கண்டு நேற்று (06.11.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு (முன்னாள் பிரதமலிகிதர், யாழ் கச்சேரி) வின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இரவீந்திரன் (போதனாசிரியர், யாழ் பல்கலைக் கழகம்), மகேந்திரன் (முன்னாள் கிராம அலுவலர்) மற்றும் றஜனிமாலா (வவுனியா), சாந்தினிமாலா (ஆசிரிய ஆலோசகர், யாழ் வலயம்), தர்சினிமாலா (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயும் இரவீந்திரநாயகம் (நில அளவையாளர், வவுனியா), தர்மராஜன் (ஓய்வு நிலை ஆசிரியர், கனகரத்தினம் ம.ம.வி), தங்கராசா (உரிமையாளர், நியூ ரோன் கிரபிக்ஸ், கொழும்பு), விமலாதேவி, மீரா (ஆசிரியர், கொழும்புத்துறை இந்து ம.வி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அனோஜன் (பொறியியலாளர், கட்டார்), குகாஜினி, செந்தூரன் (கணிய அளவையியலாளர்), ஆரபி (சட்ட மாணவி), சீர்மாறன் (ஹற்றன் நஷனல் வங்கி, வவுனியா), மதுர (உறுகுணை பல்கலைக்கழகம்), கீர்த்திகன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), அபிநயன், விஸ்காந் (பிரான்ஸ்), தேனுகா (பிரான்ஸ்), தேவ்காந், மேனகா, விமல்காந், சங்கீதன், துவாரகன், அகல்யன் ஆகியோரின்அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2016) திங்கட்கிழமை பி.ப 4.00 மணியளவில் யோசேவ்வாஸ் வீதி, றம்பைக்குளம், வவுனியா என்ற முகவரியில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(ஜே.5839) (16.17.19)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி ஆனந்தராணி சௌந்தரநாயகம்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 03.06.1933 | 05.11.2016 |

ஏழாலை கிழக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆனந்தராணி சௌந்தரநாயகம் (05.11.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தம் - அருளம்மா தம்பதியரின் மூத்தமகளும் ஆரோக்கியநாதர் - மரியம்மா தம்பதியரின் மருமகளும் சௌந்தரநாயகம் (ஓய்வுபெற்ற தலைமைப்புகையிரத பாதுகாவலர்) இன் அன்புமனைவியும் ரூபசௌந்தரி (லண்டன்) காலஞ்சென்ற ரகு (இத்தாலி) மற்றும் ரவி (இத்தாலி), ரணா (லண்டன்), அமலா (நடன ஆசிரியை ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயும் யோசப் சந்தியாப்பிள்ளை (லண்டன்), மலர், எல்சா (இத்தாலி), தயா (லண்டன்) காலஞ்சென்ற அன்ரனி சுரேஸ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் விஜய், வினோத், யூலியானா, லக்ஷ்மி, ஆனந்த், கியாரா, றிக்கி, யூலியன், ஆதவியன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஜெரோணிக்கா, கினவுடியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் குணராணி (லண்டன்) காலஞ்சென்ற ஆனந்தராஜா மற்றும் அரியமலர் (இத்தாலி) காலஞ்சென்ற ஆனந்தரத்தினம் (இந்தியா) மற்றும் கருணாதேவி ((கனடா) ஆகியோரின் மூத்தசகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (08.11.2016) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஏழாலை இசிதோர் தேவாலயத்தில் நடைபெற்று ஏழாலை கத்தோலிக்க சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(ஜே5933)(17.20)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண மரநடுகை மாதம்

"ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்"
- கரோலஸ் லினேயஸ் (தாவர வகைப்பாட்டியலாளர்).

கார்த்திகை
01-30, 2016
"சொந்த மண் சொந்த மரங்கள்"
"ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்"



# சட்டவிரோத மணல் ஏற்றிய மூன்று டிராக்டர்கள் சிக்கின

## கிளி. பொலிஸார் நடவடிக்கையில்

யாழ்ப்பாணம், நவ.7

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரு தினங்கள் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிய 3 உழவு இயந்திரங்கள், ஒரு போத்தல் கசிப்பு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தர்சன தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த ஆர் சிறீவர்தனவின் பணிப்பின் பேரில் அமைக்கப்பட்ட குழு கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

கடந்த இரண்டு தினங்களில் அனுமதி இன்றி மணல் ஏற்றிய 3 உழவியந்திரங்கள் கைப்பற்றப்பட்டன. சந்தேகத்தின் பேரில் அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். தருமபுரத்தில் ஒரு உழவு இயந்திரமும், மருதங்கேணியில் 2 உழவு இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டன.

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் கசிப்பு எடுத்து வந்த நபர் பொலிஸாரை கண்டவுடன் மோட்டார் சைக்கிளையும் கசிப்பையும் கைவிட்டுத் தப்பியுள்ளார். அது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்று அவர் தெரிவித்தார். (ற-6)

# வனவளத்திணைக்களத்தால் மேய்ச்சல் தரவையில் சிக்கல்

## அளவீடு செய்ய முடியாதுள்ளது என்று கண்டாவளை பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.7

கிளிநொச்சி, கண்டாவளையில் மேய்ச்சல் தரவைக்கென அடையாளப்படுத்தப்பட்ட 500 ஏக்கர் நிலத்தை வன வளத் திணைக்களத்தினர் உரிமை கோரியுள்ளனர். அதனால் மேய்ச்சல் தரவைக்கான இடம் அளவீடு செய்யப்படவில்லை.

இவ்வாறு கண்டாவளைப் பிரதேச செயலர் ரி.முகுந்தன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்மீளாய்வுக் கூட்டம் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடத்தப்பட்டது.

முன்னர் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களில் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்படாத தீர்மானங்களை நிறைவேற்றுவதில் உள்ள தடைகள் தொடர்பாகவும், அந்தத் தீர்மானங்களின் தற்போதய நிலை தொடர்பாகவும் அதில் ஆராயப்பட்டது. அவற்றை விரைவாக நிறைவேற்ற எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

> திணைக்களங்களின் அனுமதிகள் விரைவாக கிடைக்க பெறாமையே காரணம் என உரிய அதிகாரிகளால் தெரிவிக்கப்பட் டது. திணைக்களங்கள் ஒழுங்கு முறையீனமாக நடந்து கொள் வதாலேயே மண் போன்ற சட்டவிரோத செயல்கள் இடம்பெறுகின்றன என்று மாவட்ட செயலாளர் சுட்டிக்காட்டினார்.

மேச்சல்தரை இன்மையால் கட்டாக்காலிக் கால்நடைகளைக் கடுப்படுத்த முடியாதுள்ளமை தொடர்பில் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் அடையாளப்படுத்தப்பட 500 ஏக்கர் காணியை வன வளத் திணைக்களத்தினர் தமக்குரியது என்று உரிமை கோரியுள்ளனர். அதனால் நில அளவை செய்வதில் சிக்கல் காணப்படுகின்றது - என்று கண்டாவளைப் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு அதற்குரிய அனுமதியைப் பெற்றுக் கொள்ளுங் கள் - என்று கூட்டத்தில்கலந்துகொண்ட வன வளத் திணைக்கள அதிகாரிகள்தெரிவித்தனர்.

கோணாவில் பிரதேசத்தில் கிரவல் அள்ளுவதற்கான அனு மதி இதுவரை வழங்கப்படாதமைக்கான காரணம் குறித்து மாவட்ட செயலாளர் கேள்வி எழுப்பினார். திணைக்களங்களின் அனுமதிகள் விரைவாக கிடைக்கப் பெறாமையே காரணம் என உரிய அதிகாரிகளால் தெரிவிக் கப்பட்டது. திணைக்களங்கள் ஒழுங்கு முறையீனமாக நடந்து கொள்வதாலேயே மண் போன்ற சட்டவிரோத செயல்கள் இடம் பெறுகின்றன என்று மாவட்ட செயலாளர் சுட்டிக்காட்டினார்.

கூட்டத்தில் மாவட்ட செயலாளர், பிரதேசசெயலாளர்கள், திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(ற-21,6,34)

# முறையான அனுமதியின் பின்னே பொன்னாவெளியில் கல் அகழ்வு

## பூநகரி பிரதேச செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ.7

கிளிநொச்சி, பூநகரி பொன்னாவெளி பிரதேசத்தில் சட்டரீதியான அனுமதி பெறப்பட்டு மக்களின் அனுமதியுடனேயே கல் அகழ்வு மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு பூநகரி பிரதேச செயலாளர் எஸ்.கிருஷ்ணேந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பூநகரி பொன்னாவெளிப்பகுதியில் சிமெந்து உற்பத்திக்கான கல் அகழ்வுகளை மேற்கொள்வதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த பகுதியில் நிலத்திலிருந்து ஐம்பது அடி ஆழத்தில் சிமெந்து உற்பத்திக்கான கல் உள்ளது என்று தெரிவித்து பல தடவைகள் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. கல் அகழ்வு மேற்கொள்ளப்படுமாக இருந்தால் கடல்நீர் உட்புகும் நிலை ஏற்படும். ஏற்கனவே உவர் நிலமாக காணப்படும் இதனை அண்டிய கிராமங்களில் அதன்பின்னர் வாழமுடியாத நிலை காணப்படும். அண்டிய பகுதிகள் பெரும் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என்று அந்தப் பிரதேச மக்கள் அச்சம் தெரிவித்தனர்.

> சிமெந்து உற்பத்திக்கான கல் உள்ளது என்று தெரிவித்து பல தடவைகள் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. கல் அகழ்வு மேற்கொள்ளப்படுமாக இருந்தால் கடல்நீர் உட்புகும் நிலை ஏற்படும். ஏற்கனவே உவர் நிலமாக காணப்படும் இதனை அண்டிய கிராமங்களில் அதன்பின்னர் வாழ முடியாத நிலை காணப்படும்.

குறித்த பகுதியில் தற்போது அகழ்வு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அங்கு புவிச் சரிதவியல் சுரங்கப் பணியகத்தின் ஆராய்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பில் சில மாதங்களுக்கு முன்னர் கடிதம் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுமாக இருந்தால் அதற்கு சட்டரீதியான அங்கீகாரங்களைப் பெற்று மக்களின் அனுமதியுடனேயே மேற்கொள்ளப்படும். தற்போது மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிப் பணிகள் பொது மக்களின் காணிகளில் மேற்கொள்ளப்படவில்லை. பொது இடங்களிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. ஆய்வுப்பணிகள் மக்களுக்கு எந்தப் பாதிப்புக்களையும் ஏற்படுத்தாது - என்று பூநகரி பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ற-21)



வவுனியா பொது வைத்தியசாலையின் குருதி வங்கியில் ஏற்பட்ட பற்றாக்குறையை அடுத்து வவுனியா விபுலானந்தாக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் பாடசாலை மண்டபத்தில் குருதிக்கொடை வழங்கப்பட்டது. (ற-402)

# அடையாளம் காணப்பட்டான் சிறுவன்

கரணவாய், நவ.7

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆற்றில் நீராடியபோது நீரில் மூழ்கி உயிரிழந்த சிறுவனின் உடலம் நேற்று பெற்றோரால் இனங்காணப்பட்டது.

நீர்வேலியைச் சேர்ந்த ஆனந்தகுமார். ஜெயப்பிரகாஸ் (வயது14) என்ற சிறுவனே நீரில் மூழ்கி உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் நீரில் மூழ்கி உயிரிழந்த சிறுவனின் உடலம் அடையாளம் காணும் பொருட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. (ற-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மக்களை மீள்குடியமருமாறு அழைப்பு விடுகிறார் வடக்கு அமைச்சர்

யாழ்ப்பாணம், நவ. 7

முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டும். கடந்த காலங்களில் இங்கே வசித்த முஸ்லிம் மக்கள் மீண்டும் வந்து குடியமர வேண்டும். அவர்களுக்கு நாம் உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கின்றோம்.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற முஸ்லிம்களின் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முன்னைய காலத்தில் காணப்பட்ட முஸ்லிம் மக்கள் தொகை தற்பொழுது இல்லை. வெளியேறிய மக்கள் மீண்டும் இங்கு வந்து வாழலாம். அவர்களின் கல்வி உதவிகளுக்கு நாம் ஆதரவு வழங்குவோம். முஸ்லிம் மக்களின் கல்வி நிலை தற்போதைய நிலையிலும் பார்க்க இன்னும் மேலும் வளர வேண்டும். முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும்என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராசா,

கடந்த காலப் போர்ச் சூழ்நிலை காரணமாக முஸ்லிம் மக்கள் தமது சொந்த வாழ்விடங்களை விட்டு வெளியேறினார்கள். அவ்வாறு வாழ்விடங்களை விட்டு வெளியேறிய மக்கள் முழுமையாக மீள் குடியேறாத நிலமை காணப்படுகிறது. வெளியேறிய மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் வாழ நாம் ஆதரவு தெரிவித்து வருகின்றோம். மற்றைய பிரதேசங்களில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களிலும் பார்க்க வடக்கு – கிழக்குப் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்கள் மிகவும் மென்மையானவர்கள்.

புதிய அரசமைப்புக்கு அமைய நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இருக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்று நினைக்கிறேன். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்கிய போது, நாம் அவருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினோம். அந்த வகையில் முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் இன்று முதலமைச்சராக இருக்கின்றார்.

1995ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆட்சியின் போது கொண்டு வரப்பட இருந்த அரசமைப்பில் முஸ்லிம் மக்களுக்கும் சில தீர்வுகள் காணப்பட்டன. எனினும் அந்தத் தீர்வு திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

தற்போது அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து புதிய அரசமைப்பை உருவாக்கி வருகின்றோம். வரவிருக்கும் அரசியல் தீர்வில் தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது முஸ்லிம் மக்களுக்கும் தீர்வுகள் கிடைக்கும். அந்த வகையிலேயே அரசமைப்பு அமையும் என்று நம்புகின்றோம்.

கடந்த காலத்தில் நாம் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்ட பொழுது முஸ்லிம் மக்களும் ஆதரவு தெரிவித்திருந்தனர். முஸ்லிம் பெண்கள் உட்பட ஏராளமானோர் போராட்டத்தில் பங்கு பற்றியதை நாம் இன்றும் மறக்கவில்லை. அப்போது இருந்த ஒற்றுமை தற்காலத்திலும் வரவேண்டும். அனைவரும் சமஉரிமை பெறவேண்டும். முஸ்லிம் மக்களினுடைய கல்வி நிலையும் உயர வேண்டும். அனைத்துத் தரப்பினரும் தங்களது கலாசாரங்களைப் பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் இனங்களின் அடையாளங்களை நிலைநிறுத்தி ஒழுக்க முடைய சமுதாயத்தை உருவாக்க முடியும்.

தற்பொழுது வடக்கில் போதைபொருள், மது பாவனை என்பன இளையோர் மத்தியில் அதிகரித்து வருகின்றது.

எங்களுடைய இளம் சமுதாயம் நிம்மதியாக வாழ வேண்டும் என்று நாம் போராடிக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில், இளம் சமுதாயம் மத்தியில் போதைவஸ்து பாவனைகளை ஊக்குவித்து வருகின்றது. எமது இளம் சமுதாயத்தைப் பாதுகாப்பதற்காக ஒழுக்கங்களை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கின்றேன் – என்றார்.

(வ-5-8)



## வலி. மேற்கு பிரதேசத்துக்கு விரைவில் 100 மின் விளக்குகள்

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் வலி. மேற்குப் பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் வலி. மேற்கு பிரதேசத்துக்குட்பட்ட மின் ஒளிராத வீதிகளுக்கும் – பின்தங்கிய வீதிகளுக்கும் 100 வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

அடுத்தவாரம் முதல் இலங்கை மின்சார சபையின் சுழிபுரம் மின் அத்தியட்சகருடன் இணைந்த வகையில் திட்டம் முன்ன கர்த்தப் படவுள்ளது.

வலி.மேற்குப் பிரதேச சபையிலும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் மக்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இதற்காக மூன்று லட்சம் ரூபாவை வலி. மேற்குப் பிர தேச சபைக்கு ஒதுக்கினார்.

இதேவேளை வடமாகாணத் தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் கீழ் வரும் 19 பிரதேச சபை களுக்கு வீதி விளக்குகள் பொருத்த 10 மில்லியன் ரூபாவை ஒதுக்கித் தருமாறு சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நிதி அமைச்சர் வி.கருணாநாயக்கவைக் கோரியுள்ளார். மாவட்டத்துக்கு 5 மில்லியன் ரூபா வீதம் இரு மாவட்டத்துக்கும் 10 மில்லியன் ரூபா அடிப்படையில் நிதி ஒதுக்கித் தருமாறு அவர் கோரியுள்ளார்.

(ற-21,50)

## மருதங்கேணியில் 232 குடும்பங்களுக்கு வீடு

வடமராட்சி கிழக்கில் மேலும் 232 வீடுகள் அமைப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. கடந்த காலப் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போராளிக் குடும்பங்கள் முன்னுரிமை அடிப்படையில் இந்த வீட்டுத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளன என்று மருதங்கேணிப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார். "அரசின் வீட்டுத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர்ப் பட்டியல்கள் சகல கிராம அலுவலர் அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ளன. வீட்டுத்திட்டத்தின் கீழ் 32 பயனாளிகளின் பெயர்ப் பட்டியல்கள் மாவட்ட செயலகத்துக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளன. மீதியாகவுள்ள 200 பயனாளிகளின் பெயர்ப் பட்டியல்கள் மாவட்ட செயலகத்துக்கு விரைவில் அனுப்பப்பட்டும். அதற்கான அனுமதி பெறப்பட்டு அனுமதி கிடைக்கப் பெற்றதும் வீடுகள் நிர்மாணிக்கும் பணிகள் விரைவுபடுத்தப்படும்" என்று அவர் தெரிவித்தார். (வ-4,17)



## தமிழ் அரசுக் கட்சி அலுவலகம் சாவகச்சேரியில் நேற்றுத் திறப்பு

தென்மராட்சி, நவ. 7

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சாவகச்சேரி தொகுதி அலுவலகம் சாவகச்சேரி நுணாவில் மத்தி வேலாயுதம் வீதியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா ஆகியோரால் கட்சியின் தொகுதி அலுவலகம் கூட்டாகத் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளைத் தலைவர் பொ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களாக கே. சயந்தன் ப.அரியரத்தினம், சாவகச்சேரி நகரசபை மற்றம் பிரதேச சபை ஆகியவற்றின் முன்னாள் தவிசாளர்கள், உறுப்பினர்கள் கட்சித் தொண்டர்களெனப் பலர் கலந்துகொண்டனர் .

நிகழ்வில் பொ.கனகசபாபதி க.அருந்தவபாலன் மாவை. சேனாதிராசா, சி.சிறிதரன், இரா.சம்பந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

(வ- 9)

## ஆலோசனைச் சபை கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், நவ. 7

வலி.மேற்கு பிரதேச சபையின் ஆலோசனை சபைக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி கு.சண்முகலிங்கம் தலைமையில் ஆலோசனை சபை கூட்டம் பிரதேச சபைமண்டபத்தில் இடம்பெறும். 2017வரவு - செலவுத திட்டம் உட்பட பல விடயங்கள் இன்று ஆராயப்படும்.

அத்துடன் ஆலோசனை சபை உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொள்ளவேண்டும் என்று செயலாளர் கேட்டுள்ளார். (வ-50)

## போட்டிப் பரீட்சை முடிவு வெளியானது

அச்சுவேலி, நவ.7

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 3 பதவிக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கு நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சை (மட்டுப்படுத்தப்பட்டது)யின் முடிவுகள் வெளியாகி உள்ளன.

பரீட்சையில் சித்தியடைந்த 812 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இதில் 320 பேர் தமிழ்மொழிப் பரீட்சார்த்திகளாகும். மட்டுப்படுத்தப்பட்ட நிலை போட்டி பரீட்சை மூலம் 515 பேர் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 3 ஆளணிக்குச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவு செய்யப்படவுள்ள எண்ணிக்கை யிலும் மேலதிகமாக 297 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 3 பதவி ஆளணிக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிலை பரீட்சை மூலம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விவரம் கல்வி அமைச்சின் இணையத் தளத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-11)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 7

கரணவாய் தாமோதரம் வித்தியாலயத்தின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் எதிர் வரும் 8ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறும் என்று பாடசாலை சமூகத்தினர் அறிவித்தனர்.

வித்தியாலய அதிபர் ஆ.விமலராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வுக்குமுதன்மை விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-10)

## நினைவுப் பேருரை

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் வி.சிவசுப்பிரமணியத்தின் 20ஆவது ஆண்டு நினைவு பேருரை நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் நடை பெற உள்ள நிகழ்வில் நினைவுப் பேருரையை பேராசிரியர் க.தேவராஜா நிகழ்த்துவார் என்று விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி அரசின் மீது சு.கவினர் வருத்தமாம்

## மகிந்த எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, நவ.7
சமகால அரசின் மீது சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மிகவும் வருத்தத்தில் உள்ளனர் என்று தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ச.

உடுகம்பொல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

மாற்று அரசியல் சக்தி ஒன்றை உருவாக்க வேண்டும் என அரசில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

வடக்கில் ஏற்பட்டுள்ள ஆவா குழு கோத்தபாய ராஜபக்சவால் உருவாக்கப்பட்டது என்று சிலர் எங்கள் மீது குற்றம் சுமத்தினார்கள். நாங்கள் ஒருபோதும் அவ்வாறானவைகளை மேற்கொண்டு நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்யமாட்டோம். கடுகளவேனும் நாங்கள் அவ்வாறான துரோகிகளில்லை.

வெளிநாட்டு சக்திகள் இணைந்து தான் எங்கள் அரசுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தார்கள். தற்போது மக்கள் இதனை கொஞ்சம் கொஞ்மாகப் புரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

தமிழ். முஸ்லிம் மக்கள் அமைப்புகள் தற்போது எங்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்கின்றார்கள். அவர்களும் தவறிழைத்து விட்டனர் என்று தற்போது புரிந்துள்ளார்கள்.

மத்திய வங்கி மோசடி ஆசியாவில் இடம்பெற்ற மிகப் பெரிய மோசடியாகும். இந்தக் கொடுக்கல் வாங்கல்களில் அரசின் முக்கியஸ்தர்கள் பில்லியன் கணக்கில் வருமானம் பெறுகின்றார்கள்.

இந்த மோசடிக்கு ஜனாதிபதி, பிரதமர் உட்பட நல்லாட்சி அரசே பொறுப்புக் கூறவேண்டும். இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள அனைவருக்கு எதிராகவும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இந்த அரசில் உள்ளவர்களுக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவு, நிதி மோசடி விசாரணை பிரிவுகளில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

அரசில் இணைந்துள்ள சுதந்திர கட்சி உறுப்பினர்கள் திருப்தியாக இல்லை. எப்போது அழைத்தாலும் எங்கள் பக்கம் வருவதற்கு அவர்கள் தயாராக இருக்கின்றனர் என்று உறுதியளித்துள்ளனர் – என்றார். (ற)

# சு.க. உறுப்புரிமையை இழந்தார் ஜீ.எல். பீரிஸ்

## மகிந்த கட்சிக்கு தலைமை ஏற்றதால்



கொழும்பு, நவ.7
மகிந்த அணியின் புதிய கட்சியான சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைப் பொறுப்பை ஏற்றதால் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையை இழந்தார்.

குறித்த கட்சி தொடர்பில் தேர்தல் ஆணைக் குழுவுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதன் தலைவராக ஜீ.எல்.பீரிஸ் அறிவிக்கப்பட்டுள்ளார். புதிய கட்சியொன்றுக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளதால் ஜீ.எல். பீரிஸின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

இதனை போராசிரியர் ஜீ.எல். பீரிஸ் உறுதிப்படுத்தியுள்ளார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக ஜனாதிபதி மைத்திரிபால அறிவிக்கப்பட்ட போது கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டதைப் போன்றே தற்போதும் நடந்துள்ளது என்று அவர் கூறியுள்ளார். (ற)

# கழிவு அகற்றலுக்கு மாற்று ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், நவ.7
யாழ். மாநகராட்சிப் பகுதியில் வாகனங்கள் செல்ல முடியாத ஒழுங்கைகள் மற்றும் சிறு வீதிகளில் குடியிருக்கும் குடியிருப்பாளர்களால் சேகரிக்கும் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு மாநகர் ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அவ்வாறான இடங்களில் வசிக்கும் மக்கள் கழிவுப் பொருள்களை உக்கக் கூடியவை, உக்காதவை என்று தரம் பிரித்து அதற்கென ஒழுங்கு செய்யப்படும் இடங்களில் ஒப்படைக்கவேண்டும்.

சனசமூக நிலையங்கள் மற்றும் பொது நிறுவன அலுவலகங்கள் போன்ற இடங்களில் கழிவுகளை சேகரிப்பதற்கென ஒழுங்கமைப்புக்கள் ஏற்படுத்தப்படும். அதனைவிட மாநகரப் பகுதியில் அமைக்கப்பட்ட கழிவு சேகரிப்பு நிலையங்களிலும் மக்கள் தாம் சேகரிக்கும் கழிவுகளை ஒப்படைக்க முடியும்.

கழிவுகளை பொதியாக்கி பிரதான வீதி ஓரங்களில் போடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் – என்றார். (ற-17)



# நிவாரண கடன் திட்டங்களில் மாணவருக்கு லப்டொப், ரப்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 7
பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிவாரணக் கடன் திட்டத்தின் கீழ் மடிக்கணினி வழங்கவும், ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு அடுத்த 2 வருடங்களில் ரப் (TAB) வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



ஹொங்கொங்கில் நடைபெறும் ஜேர்மனின் வர்த்தகத்துக்கான 15ஆவது ஆசிய பசுபிக் மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் சிறப்புரையாற்றினார்.

ஹொங்கொங் பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில் ஜேர்மன் மற்றும் ஆசிய பசுபிக் வலயத்தின் முக்கிய சட்ட வகுப்பாளர்கள், புத்திஜீவிகள், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பலர் அதில் கலந்து கொண்டனர்.

பிரதமர் ரணில் தெரிவித்ததாவது:

எதிர்கால சமூக மற்றும் பொருளாதார சவால்களை எதிர்நோக்குவதற்காக டிஜிட்டல்மயமாக்கல் செயற்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை இலங்கை முன்னெடுத்துள்ளது. முதற்கட்டமாக நாடு பூராகவும் ஆயிரம் மத்திய நிலையங்களில் இலவச வைபை வசதியை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிவாரணக் கடன் திட்டத்தின் கீழ் மடிக்கணினிகளைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளோம். தகவல் தொழில்நுட்பம் தொடர்பான கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

13 வருட பாடசாலைக் கல்வியைக்கட்டாயப்படுத்துவதுடன், தொழிற்துறையை மேம்படுத்தி சிறந்த சமூகம் ஒன்றை உருவாக்குவதன் ஊடாக இலங்கையில் முக்கிய சீர்திருத்தங்கள் பலவற்றை முன்னெடுக்கவுள்ளோம். அடுத்த இரண்டு வருடங்களுக்குள் உயர்தர மாணவர்களுக்கு இலவச வைபைகளை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம் – என்றார்.

ஜேர்மனின் பிரதி சான்ஸலர் சிக்மா கெப்ரியலுடன் இருதரப்புக்கலந்துரையாடலிலும் பிரதமர் ஈடு பட்டார். இதன்போது ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளில் இலங்கைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று சிக்மா கெப்ரியல் தெரிவித்தார் என்று பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டது. இந்த மாநாட்டை முன்னிட்டு பன்னாட்டுத் தலைவர்களுடனான சந்திப்பிலும் பிரதமர் கலந்து கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4)


# கண்ணீர்க் காணிக்கை

எம் விழி நீரால் எழுதும் கண்ணீர் மடல்

## சரவணமுத்து கருணாநிதி



மண்ணில் 03. 07. 1942
விண்ணில் 05. 11. 2016

"மனிதன் மனிதனாக வாழ்ந்தால்
மகத்துவம் தானாகக் கிடைக்கும்"

இந்த வகையில் வாழ்ந்த
தங்களை இழந்து
எந்த வகையில் இனித்
தேறுவதோ நாமறியோம்

நான்தேடா சொத்துக்கு மாற்றுமில்லை, உரையுமில்லை
திரை கடல் ஓடி திரவியம் தேடுவதாயினும்
கடனிலாது கையில் உள்ளதோடு வாணியம் செய்.

இது தாங்கள் அடிக்கடி கூறிவரும் நற்சிந்தனை
அது நாங்கள் தினமும் பாராயணம் செய்யும் மந்திரம்
நல்ல மனிதரை மானுடத்தில் தேடி அலைகிறோம்
காண்பதோ ஒரு சிலர். அதில் தாங்களொருவர்
தங்களிடம் நல்லவைகளைக் கண்டோம்
அறிவுரைகளைக் கேட்டோம் அத்தனையும்
எமக்கும் பொன்மொழிகளாயின இதுபோல்
பலவற்றை தங்களிடம் காண எண்ணினோம்
காலனவன் தங்களிடம் முந்திக் கொண்டான்
தங்கள் உயிர் பிரிந்தன்று அதிகாலை வேளையில்
தங்கள் அறிவுரையை நான் எண்ணிப் படித்து
உச்சாடனம் செய்து முடியும் வேளை தங்கள்
மரணச் செய்தி அலைபேசியில் வர அதிர்ந்தது என் உள்ளம்

தங்கள் பிரிவால் எங்கள்
குடும்பத்தினரும், எனது சகோதரங்களும்
மீளாத்துயரம் அடைவதோடு.

ஆளுக்கொரு தேதி வைத்து ஆண்டவன் அழைப்பான்

என்றபடி பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரப் பெருமானை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

தங்கள் பிரிவால் துயருறும்
சு.செல்வரத்தினம், சகோதரர்கள்

ஸ்ரீ விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ் - சாவகச்சேரி
றூபா பன்முக வர்த்தகம்
104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி.23323)
(13.17.18.21)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சூரனின் வதைக்கு இடையூறு என பொலிஸாருடன் மக்கள் முறுகல்

தாண்டிக்குளம் கந்தசாமி கோயிலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சூரன் வதையின்போது அடியார்களுக்கும் அந்தப் பகுதியில் போக்குவரத்துப் பணியில் இருந்த பொலிஸாருக்கும் இடையேமுறுகல்நிலைஏற்பட்டது. ஏ-9 வீதியால் சூரன் கொண்டுவரப்பட்டபோது போக்குவரத்துப் பணியில் இருந்த பொலிஸார் வீதியூடான போக்குவரத்தைத் தடுத்து, சூரன் வதைக்கு வழி ஏற்படுத்தித் தரவில்லை என்று அடியார்கள் குற்றஞ்சாட்டினர்.

மாலை 5.30 மணிக்கு தாண்டிக்குளம் கந்தசுவாமி கோயில் முருகன் வீதி உலாவுடன் சூரன் வதை நிகழ்வு நடைபெற்றது. மாலை 6 மணிக்கு வீதியை சூழ்ந்து பக்திபர வசத்துடன் பக்தர்கள் சுவாமி தரிசனத்தில் இருந்தனர். அப்போது கடமையில் நின்ற பொலிஸார் தாண்டிக்குளம் ஏ- 9 வீதியூடாக வாகனங்களை செல்ல அனுமதித்தனர். அதையடுத்து பொலிஸாருக்கும் பக்தர்களுக்குமிடையில் முரண்பாடு ஒன்று ஏற்பட்டது. பின்னர் ஆலய வளாகத்தில் சூரன் வதை நிகழ்வு இடம்பெற்றது.

எமது ஆலயத்தின் வீதி சிறியது. ஆலயத்துக்கு வெளியே ஏ-9 தாண்டிக்குளம் வீதியூடாக சுவாமி வீதி உலாவை மேற்கொண்டே சூரன் போர் நிகழ்வு இடம்பெறுவது வழமை. அதற்காக வவுனியா பொலிஸாரிடம் போக்குவரத்து பாதுகாப்புக்கான அனுமதியை ஆலய நிர்வாகம் கோருவர். பொலிஸாரும் பாதுகாப்பு வசதிகளை வழங்குவர். இம்முறை வீதியூடாக 20 நிமிடங்களுக்கு மேல் வாகனம் செல்ல பொலிஸார் அனுமதியளித்தமை எமது வழிபாட்டுக்கு குந்தகம் விளைவிப்பதாக இருந்தது. இது எமக்கு மன வேதனையை தருகின்றது - என்று பொலிஸாருடன் முரண்பட்ட அடியார்கள் தெரிவித்தனர்.

பொலிஸார் உட்பட முக்கியத்துவம் வாய்ந்த சிலரின் வாகனங்கள் வந்தவுடன், வீதியில் வாகன நெரிசலைத் தணிக்கவே 15 நிமிடங்கள் வாகன போக்குவரத்துக்கு அனுமதியளித்தோம். குறித்த வீதியில் முக்கால் மணித்தியாலத்துக்கு மேலாக வாகனங்கள் எதையும் செல்ல விடாது திருநாவற்குளம் காளி கோயிலடி வீதியூடாகவே செல்ல அனுமதியளித்தோம் - என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-402,21)

# கிளிநொச்சியில் அதிகரிக்கும் மரக் கடத்தல்கள்

## கல்மடுக் காட்டுப் பகுதியில் சிக்கின ரூ.50 லட்சம் பெறுமதியான பாலைக் குற்றிகள்

யாழ்ப்பாணம், நவ.7

கிளிநொச்சி, கல்மடு காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் தறிக்கப்பட்ட பாலை மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பில் 9 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட பாலை மரக் குற்றிகளின் பெறுமதி சுமார் 50 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். கடந்த வெள்ளிக்கிழமை மாலை கல்மடுநகரில் உள்ள விமானப் படை முகாம் அதிகாரிகளால் முல்லைத்தீவுப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெலிவென்னவுக்கு வழங்கப்பட்ட தகலை அடுத்து குறித்த பகுதி முற்றுகையிடப்பட்டது. சுமார் 5 ஏக்கர் கொண்ட காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாகத் தறிக்கப்பட்டிருந்த பாலை மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டன. அவை விற்பனைக் கொண்டு செல்வதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. ஒரு தொகுதி பாலை மரங்கள் வெட்டிச் சரிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன. இது தொடர்பில் 7 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். மரங்களை ஏற்றிச் செல்வதற்குக் தயார் நிலையில் இருந்த வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டது. கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்கள் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது - என்று பொலிஸார் தெரிவித்தனர்.




பெறுமதி மிக்க மரங்களை சட்டவிரோதமாக தறித்துக் கடத்தும் சம்பவங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்துள்ளன. பொலிஸாரின் நடவடிக்கைகளில் பலர் சிக்குகின்றபோதும், சட்டவிரோத மரம்தறிப்புநிறுத்தப்படாதுதொடர்ந்தவண்ணமே உள்ளது என்று சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டனர்.

இது தொடர்பில் பொலிஸார் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி, காடழிப்பைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதேவேளை, கிளிநொச்சியில் இடம்பெறும் சட்டவிரோத மரக் கடத்தலுக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் கடந்த 3ஆம் திகதி இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர். (ற-21,6,36)

# மரண அறிவித்தல்

## சரவணமுத்து கருணாநிதி

(சூரியன் களஞ்சியம் உரிமையாளர்)



காரைநகர், மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும், இல.194, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கருணாநிதி (செந்தில்) 05.11.2016 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையாப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவசோதி (கந்தன் களஞ்சியம்), கற்பகநாதன் (ஸ்ரீமாதவன்) மற்றும் பாக்கியவதி, காலஞ்சென்ற பரம்சோதி (வெங்கடேஸ்வரா) மற்றும் தவமணி, கோகிலாவதி, கணேசன் (ராசு களஞ்சியம்), சிவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாநிதி (கொழும்பு), தயாபரன் (சூரியன் களஞ்சியம் - யாழ்ப்பாணம்), தயாநந்தினி (லண்டன்), தயாளன் (நாராயணா ஹாட்வயர்), தயாநந்தன் (சூரியன் களஞ்சியம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரராஜசிங்கம் (நாராயணா ஹாட்வயர்), வாசுகி, சிவராசா (லண்டன்), கஜந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரி, மஞ்சரி, கோபிநாத், கஜீவன், அனோஜன், அபிஷன், மதுரன், மிதுரா, மதுரா, சங்கவி, சஞ்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2016) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 8 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.194, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C/23319)
(11,17,18,21)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 222 7044**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலக்கழிவை மயானத்தில் கொட்டுகின்றது கடற்படை

## கீரிமலை பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ.7

அண்மையில் மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்ட கீரிமலை, செம்பொன்வாய்க்கால் மயானத்தில் கடற்படையினர் மலக் கழிவுகளைக் கொட்டுகின்றனர்.

இவ்வாறு அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டினர்.

குறித்த குற்றச்சாட்டை கடற்படை மறுத்துள்ளது. இது தொடர்பாக முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை என்று வலி.வடக்குப் பிரதேச சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள செம்பொன்வாய்க்கால் மயானம் உட்படப் பல பிரதேசங்கள் நீண்ட காலமாக கடற்படையினரின் பிடியில் இருந்தன. அண்மையில் அந்தப் பகுதி மக்கள் பாவனைக்காக அனுமதிக்கப்பட்டது. அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் செம்பொன்மயானத்தைப் பயன்படுத்துகின்றார்கள்.

மயானப்பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், அண்மையில் தகனத்துக்காக உடலைக் கொண்டு சென்றபோது மயானத்துக்குச் செல்லும் வீதியை மறித்த கடற்படையினர் மயானத்துக்குச் செல்லவிடாது திருப்பியனுப்பினர். பின்னர் குடியிருப்புகள் ஊடாக உடல் கொண்டு செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

கடந்த சனிக்கிழமை மாலை சக்கர் வாகனம் மூலம் கொண்டு வரப்பட்ட மலக் கழிவுகளை மயானத்தில் கொட்டினர். அந்தப் பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுகின்றது. மழை பெய்தால் அவை கீரிமலைக் கடலில் கலக்கும் அபாயம் உள்ளது. மக்கள் பாவனையில் உள்ள இடத்தில் இவ்வாறு செய்வது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல - என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுக் குறித்துக் கருத்துத் தெரிவித்த கடற்படைப் பேச்சாளர், கடற்படையினர் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை என்று மறுப்புத் தெரிவித்தார்.

இது தொடர்பில் எமக்கு எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை. எவராவது எம்மிடம் முறையிட்டால் இது குறித்து ஆராய முடியும். செம்பொன்வாய்க்கால் மயானம் கடற்படையால் அண்மையில் மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டது. எனினும் குறித்த பிரதேசம் இன்னமும் கடற்படையினரின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. அந்தப் பிரதேசத்தை உத்தியோகபூர்வமாக இன்னும் ஒப்படைக்கப்படாத நிலை காணப்படுகின்றது - என்று வலி.வடக்குப் பிரதேச சபை அதிகாரிகள் தெரிவித்தனர். (ற-8,10)



# கிட்டுப் பூங்காவில் மலர்க் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ.7

மரநடுகைமாதத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் கிட்டுப் பூங்காவில் மலர்க்கண்காட்சி ஆரம்பமானது.

கார்த்திகை மாதம் மர நடுகை மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதை முன்னிட்டு வடக்கு மாகாண சுற்றாடல் அமைச்சு மலர்க் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

மரநடுகைமாதத்தை முன்னிட்டு பொதுமக்களும் சமூக அமைப்புகளும் மரநடுகையில் ஆர்வம் காட்டிவருகின்றனர். அவர்கள் தங்களுக்குத் தேவையான தரமான மரக்கன்றுகளைப் பெறும் நோக்கிலும் உள்ளூர் தாவர உற்பத்தியாளர்களுக்கான சந்தை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கும் நோக்குடனுமே மலர்க்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த தாவர உற்பத்திப் பண்ணையாளர்கள் 14 காட்சிக் கூடங்களை அமைத்துள்ளனர் – என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மலர்க்கண்காட்சியின் ஆரம்ப விழாவில் வடக்கு கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாணசபை உறுப்பினர்கள் க.சிவாஜிலிங்கம், க.தர்மலிங்கம், சி.அகிலதாஸ், அனந்தி சசிதரன், விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், திணைக்களத் தலைவர்கள் மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்துகொண்டனர்.

மலர்க்கண்காட்சி எதிர்வரும் 11ஆம் திகதி வரை தினமும் காலை 9 மணியில் இருந்து இரவு 8 மணிவரையும் நடைபெறும். கண்காட்சியைப் பார்வையிட வரும் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்படும் என்று வடக்கு சுற்றாடல் அமைச்சு தெரிவித்தது. (ற-21)


## தலதா மாளிகை முன்பான வீதி திறக்கப்படாது -கிரியெல்ல

கொழும்பு, நவ.7

கண்டி சிறி தலதா மாளிகைக்கு முன்னாள் உள்ள பெருந்தெருவில் வாகனங்கள் பயணிப்பதற்கு மீண்டும் திறக்கப்பட மாட்டாது என பெருந்தெருக்கள் மற்றும் உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

குறித்த பாதை மூடப்பட்டதால் ஏற்படும் வாகன நெரிசல் மற்றும் நகரின் மத்தியிலுள்ள போக்குவரத்து சிக்கல் என்பவற்றுக்கு மாற்று வழித்திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

கண்டி உயர் பாலிகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ற)



திருகோணமலை மாவட்டத்தில் தோப்பூர் மற்றும் பாலத்தோப்பூர் பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. கந்தளாய், கிண்ணியா, மூதூர், புல்மோட்டை போன்ற பகுதிகளில் மழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் மழை நீரில் மூழ்கியுள்ளன. (ற)

# அரச நிறுவனங்களை தனியார் மயமாக்குவதற்கு சு.க. எதிர்ப்பு

கொழும்பு, நவ.7

இலாபம் உழைக்கும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதற்கு வரவு- செலவுத் திட்டத்தில் யோசனைகள் முன்வைக்கப்பட்டால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதற்கு ஆதரவாக வாக்களிக்காது.

இவ்வாறு அந்தக் கட்சியின் இளைஞர் அமைப்பின் தலைவர் ஷாந்த பண்டார தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

லாபம் உழைக்கும் எந்தவொரு அரச நிறுவனத்தையும் தனியார்மயப்படுத்தக்கூடாது என கடந்த 31ஆம் திகதி நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்க்கமான தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு எதிரான யோசனைகளுக்கு நமது கட்சி ஆதரவளிக்காது.

நட்டமடைந்துள்ள நிறுவனங்களை லாபம் அடையும் நிறுவனங்களாக மாற்றுவதே சிறிலங்கா.சு.கட்சியின் நோக்கமாகும். அதேபோன்று அதிக நட்டம் அடைந்துள்ள நிறுவனங்களை தனியாருடன் இணைந்து லாபம் உழைக்கும் நிறுவனமாக மாற்றுவதில் தவறில்லை - என்றார். (ற)

# யோசிதவுக்கு நுழைவிசைவு வழங்க இணங்கியது ஆஸி.!

## கொழும்பு ஊடகம் கூறுகின்றது

கொழும்பு, நவ.7



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது மகன் யோசித ராஜபக்ச ஆஸ்திரேலியா செல்ல நுழைவிசைவு கிடைத்துள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த காலங்களில் யோசித ஆஸ்திரேலியா செல்ல அனுமதிக்கப்படாமையால் யோசிதவின் நுழைவிசைவுப் பிரச்சினை அதிகம் பேசப்பட்ட ஒருவிடயமாக இருந்தது.

கடந்த வாரம் இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதரகம் யோசிதவுக்கு நுழைவிசைவு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதால் யோசித மிகவும் மகிழ்ச்சியில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யோசித ஆஸ்திரேலியாவுக்கு செல்வதற்குத் தீவிர முயற்சி மேற்கொண்டமைக்கு வலுவான காரணங்கள் இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. யோசித போலியான தகவல்களைச் சமர்ப்பித்து ஆஸ்திரேலியா நுழைவிசைவு பெற்றுக்கொள்ள முயற்சித்தமையால் நுழைவிசைவு மறுக்கப்பட்டிருந்தது என்று முன்னர் கூறப்பட்டது. (ற)

# திடீரென அதிகரிக்கப்பட்டது திறைசேரியின் பாதுகாப்பு!

கொழும்பு, நவ.7

2017ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்டம் தாக்கல் செய்யப்படும்போது சதி நடவடிக்கையில் ஈடுபட சில குழுக்கள் திட்டமிட்டுள்ளன என்று வெளியான தகவல்களுக்கமைய திறை சேரியின் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. வரவு–செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர் திறைசேரிக்கு விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் தற்போது திறைசேரியின் [illegible] திறைசேரி செயலாளர், திறைசேரி பிரதி செயலாளர், நிதி அமைச்சரின் மக்கள் தொடர்பு செயலாளர், நிதி இராஜாங்க அமைச்சரின் தனிப்பட்ட செயலாளர், திறைசேரியின் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு அறிவித்து சுற்றறிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

திறைசேரி பகுதியில் உள்ள அனைத்து கட்டடங்கள் மற்றும் பிரிவு இம்மாதம் 7ம், 8ம் திகதிகளில் பாதுகாப்பு பிரிவினால் விசேட சோதனைக் குட்படுத்தப்படவுள்ளன என்றும், அங்கு அனைத்துத் திணைக்களத்துக்கும் சொந்தமான அலுவலகங்கள் அங்குள்ள மேசை, அலுமாரி உட்பட அனைத்தும் சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன என்றும், பூட்டப்பட்டுள்ள அனைத்து பொருள்களின் பூட்டுக்கள் திறக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிய வந்துள்ளது.

நாளை முதல் எதிர்வரும் 11ஆம் திகதி வரை திறைசேரி பகுதிக்கு வரும் புதியவர்களின் வருகையை கட்டுப்படுத்தியுள்ள நிலையில், நிதி அமைச்சர், நிதி இராஜாங்க அமைச்சர், நிதி அமைச்சரின் செயலாளரைத் தவிர ஏனைய அனைவரின் கூட்டங்களும் தடை செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

திறைச்சேரி பகுதிகளில் பொலிஸ் நாய்களை ஈடுபடுத்தி, இந்த நாள்களில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், குடிதண்ணீரில் இருந்து ஆவணங்கள் அனைத்து குறித்த நாள்களுக்கு முன்னர் களஞ்சியப் படுத்தப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கு ஆளுநர் கொழும்பில் வெளியிட்டுள்ள குற்றச்சாட்டுக்கள்

வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே கொழும்பில் நடத்தியுள்ள பத்திரிகையாளர் மாநாடொன்றில் வடக்கு மாகாண அரசியல்வாதிகள் சிலர் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை. வடக்கு அரசியல்வாதிகள் தம்மை மீள் பரிசோதனை செய்து கொள்ளும்படியும், குற்றச்சாட்டுக்களில் உண்மையிருப்பின் திருந்தி நடந்து கொள்ளவும் அழுத்தம் கொடுப்பதாக அந்தக் கருத்துக்கள் அமைந்துள்ளன.

வடக்கு மாகாண மக்கள் எதிர்கொள்ளும் உண்மையான பிரச்சினைகளில் வடக்கிலுள்ள அரசியல்வாதிகளுக்கு அக்கறை கிடையாது என்றும், வடக்கிலும் தெற்கிலும் அமைதியின்மையைத் தோற்றுவிக்கின்ற வகையில் தவறான செய்திகளையும், பொய்களையும் வெளியிட்டுக் கொண்டு அதன் மீது தம்மை நிலைப்படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்றும் ஆளுநர் குரே கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

சாதி, சமூக அந்தஸ்து மற்றும் சொத்து போன்றவற்றின் காரணமாக எழுந்துள்ள பாகுபாடுகளால் சாதி குறைந்த தமிழர்கள் மத்தியில் மனக்குறைகள் நிரம்பியுள்ளன. இந்த மக்களின் பிள்ளைகளுக்கு சிறந்த பாடசாலைகளில் இடம் கிடைப்பதில்லை இந்த மக்கள் கோயில்களிலும் உட்பிரவேசிக்க விடப்படுவதில்லையென்று ஆளுநர் கூறியுள்ளார். வீடின்மை, சமூகப் பிரச்சினைகள், தொழில் கிடைக்காமை, குறைந்த வருமானம் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு இந்த மக்கள் முகம் கொடுத்து அவதிப்படுகிறார்கள் என்பது ஆளுநரின் ஆதங்கம். பெரும்பான்மையாக வாழும் சாதாரண மக்களுக்கு இவை நெருக்குதலான பிரச்சினைகளாக இருக்கின்றன என்றும் கவலைப்பட்டுள்ளார்.

இந்த விதமான கருத்துக்களை அவர் ஏன் கொழும்பில் சென்று சொல்லவேண்டும் என்பது ஒரு புறமிருக்க, வடக்கு அரசியல்வாதிகளுக்கு அதிர்ச்சி தருபவையாகவே இவை இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. சாதிப் பிரச்சினைகள், கோயில் பிரவேசம், சிறந்த பாடசாலைகளைப் பெறுவது போன்ற பிரச்சினைகள் இயக்கங்கள் செயற்பட்ட காலத்திலேயே ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருத்துண்டு. போருக்குப் பின்னரும் அதே நிலை நீடிப்பதாகவே கருதப்படுகின்றபோது பாடசாலைப் பிரவேசத்திலும் கோயில்களிலும் சாதிப் பாகுபாடு நிலவுவதாக ஆளுநர் கூறுவதற்கு ஆதாரம் இருக்க வேண்டும். வடக்கு அரசியல்வாதிகள் இது விடயத்தில் அவசியம் கவனம் செலுத்தி உண்மை நிலையை வெளிப்படுத்த வேண்டும்.

தவறான செய்திகளையும் பொய்களையும் வெளியிட்டுக்கொண்டு. அரசியல்வாதிகள் தம்மை நிலைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தில் உள்ள உண்மை வெளிப்படுத்தப்படுமானால் பலவிடயங்கள் வெளிவரும்.

இங்குள்ள நிலமைகள் பற்றி ஆளுநர் இங்குள்ள அரசியல்வாதிகளுடன் ஏன் முதலமைச்சருடனும் கூட கலந்துரையாடுகின்ற வசதியிருக்கின்றது. அதை அவர் செய்யாமல் கொழும்பில் பத்திரிகையாளர்களை அழைத்துக் கூறுகிறார் என்றால் நிச்சயம் இதில் முக்கிய அம்சம் ஏதோ ஒன்று இருக்க வேண்டும் என்றே தோன்றுகின்றது. அதனை அவரே வெளிப்படுத்த வேண்டும், அல்லது இங்குள்ள அரசியல்வாதிகள் தம் நிலையை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தித் தெளிவுபடுத்த வேண்டும்.




ஈழத்தமிழ்மணி

தமிழ்மக்கள் ஒன்று சேர்ந்து என்னைத் திட்டமிட்டு தோற்கடித்து விட்டனர் என்றுகடந்தஆண்டு ஜனவரி 9ஆம் திகதி தனது சொந்த இடமான அம்பாந்தோட்டை, வீரமுனக் கிராமத்துக்குச் சென்றபோது அங்கு குழுமியிருந்த மக்களிடையே வேதனைக் குரலில் கூறியிருந்தார் மகிந்த ராஜபக்ச.

புலிகளைத் தோற்கடித்த வீரரான மகிந்த ராஜபக்சவைத், தமிழ் மக்கள் தோற்கடித்தனர் என்பதே உண்மையாகும். தமிழ்மக்களால் தான் தேர்தலில் தான் தோற்கடிக்கப்பட்டேன் என்ற அவரது இனவாதக் கருத்து அவர் தமிழினத்துக்கு எதிரானவர் என்பதையேஅன்றுகோடிட்டுக்காட்டியது. தென்னிலங்கையிலும் மகிந்தவைப் போர் வெற்றி வீரனாகச் சித்திரித்துக் கொண்டிருந்த நிலைமாறி, அதன் விம்பம் படிப்படியாக குறைந்து வருகின்றது.

மகிந்தவின் விசுவாசிகளும், சில இனவாதக் குழுக்களும், கட்சிகளும் இனவாதத்தை கையிலெடுத்துக் கொண்டு, தங்களைப் பலப்படுத்தி வருகின்றனர். ஒன்பது ஆண்டுகள் வரையிலான மகிந்த ராஜபக்சவின் ஆட்சி சர்வாதிகார ஆட்சியே என்பதை நாட்டு [illegible] ஜனாதிபதியாக இரண்டு தடவைகள் அதிஉச்ச பதவியிலிருந்துஅதிகாரத்தைச் சுவைபார்த்தவர். அசைக்க முடியாத இரும்பு மனிதராகத் தன்னை உருவாக்கிக் கொண்டவர். அவருடைய கூடப்பிறந்த சகோதரர்கள் ஒன்றுசேர்ந்த அசைக்க முடியாத குடும்ப ஆட்சியாக தமது ஆட்சியை மகிந்த ஆக்கிக் கொண்டார்.

18ஆவது சரத்தைக் கொண்டு வந்துநிறைவேற்றி, தனதுநெருங்கிய குடும்ப உறவினர்களையும் கூடவே இணைத்துக் கொண்டும், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தமது தரப்பில் சேர்த்துக்கொண்டும் நிலையான ஆட்சியைத் தக்கவைத்திருந்தார்.

### மகிந்தவின் சிங்கள, பௌத்த பேரினவாதப் போக்கின் விளைவு

சிங்கள, பௌத்த பேரினவாதியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு, தன்னை தென்னிலங்கை மக்களுக்கு மட்டுமே தலைவன் என்ற மமதையுடன் ஏனைய இனத்தவர்கள் மீது மிகக் கடுமையான போக்கைக் கடைப்பிடித்து வந்தார்.

2005ஆம் ஆண்டிலிருந்து 2009 மே 18 வரை, மகிந்த தரப்பினர் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நீதி நியாயமற்ற செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர். விடுதலைப் புலிகளது பயங்கரவாதத்தை துடைத்தெறிவோம் என்ற நோக்குடன் வன்னி மீது போரை பிரகடனப்படுத்தினர். பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். போராளிகள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் படையினரிடம் சரணடைந்த போது காணாமல் போயினர். பலர் கடத்தப்பட்டும் பலர் சிறைகளிலும் அடைக்கப்பட்டனர்.

2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2015 ஆம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் கொடி கட்டிப் பறந்த

# மகிந்தவின் வீழ்ச்சி பரிதாபமானதே!

ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி வரை மகிந்த தலைமையிலான கொடூர மானபாசிச ஆட்சியேநாட்டில் இடம்பெற்றிருந்தது. மகிந்த ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் மகிந்தவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்சவின் அராஜக நடவடிக்கைகள் யாவும் மூவின மக்களையும் கடுமையாகப் பாதித்திருந்தன.

**2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்கு மகிந்த ராஜபக்ச வட பகுதிக்கு வந்திருந்தார். வடபகுதி தமிழ் மக்கள் மகிந்தவின் பேச்சுக்கும் கருத்துக்களுக்கும் மதிப்புக் கொடுத்திருக்கவில்லை.**

போர் முடிவுற்ற பின்னர், 2010ஆம் ஆண்டு முதல் பொதுத்தேர்தல், 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் என 2013ஆம் ஆண்டு வரை மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் பல தேர்தல்கள் நடைபெற்றிருந்தன.

அந்தத் தேர்தல்களில் தமிழர் பகுதிகளிலும் போட்டியிட்ட மகிந்த தரப்பு தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவ தற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்க ளையும், ஆதரவாளர்களையும் அச்சுறுத்தியது, உள் ளூராட்சி சபைத்தேர்தல், வடக்கு மாகாண சபைத்தேர்தல் என்பவை நடைபெற்ற வேளையில் மகிந்தவின் பரப்புரைகளுக்கு தமிழ் மக்கள் மசியவில்லை.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெற்ற ஜனாதிபதித்தேர்தல் பரப்புரைக்கு மகிந்த ராஜபக்ச வட பகுதிக்கு வந்திருந்தார். வடபகுதி தமிழ் மக்கள் மகிந்தவின் பேச்சுக்கும் கருத்துக்களுக்கும் மதிப்புக் கொடுத்திருக்கவில்லை. மகிந்த ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின்போது யாழ்ப்பாணத்தில் தெரியாத தேவதையைவிட தெரிந்த பிசாசு நன்று எனவும், மற்றுமொரு சந்தர்ப்பத்தில் வடக்கு மாகாண சபை நிர்வாகத்தைக்கூட வைக்கோல் பட்டடை நாயைப்போல் என கடுமையாக விமர்சனம் செய்திருந்தார். மகிந்த தேர்தலில் தோற்ற பின்னரும் பதவி வெறி அவரை விட்டுப் போகவில்லை. ஆட்சிமாற்றம் மகிந்தவை நிலைகுலையச் செய்திருந்தது. பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தான் பிரதமராகவாவது வர வேண்டும் என்ற கனவும் மகிந்தவுக்கிருந்தது, அதுவும் நிராசையாகி விட்டது.

மைத்திரி நல்லாட்சி அரசின், நிர்வாகத்தில், மகிந்தவின் குடும்பத்தினர் மட் டுமன்றி அவரது அரசில் உயர் பதவிகளை வகித்த அதிகாரிகளும் நிதிமோசடி, ஊழல்கள், அரசியல் படுகொலைகள், ஆள்கடத்தல்கள், நிலமோசடி என பலதரப்பட்ட குற்றச்சாட்டுக்களின் பேரில் விசாரணைகளுக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

2015இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேன மகிந்தவுக்கு அனுமதி வழங்கியிருந்தார். பொதுத் தேர்தல் மூலமாக மகிந்தவால் பிரதமராகவோ, எதிர்க்கட்சித் தலைவராகக்கூடத் தானோ வரமுடியவில்லை.

இருந்த போதிலும் தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச, டலஸ் அழகப்பெரும, உதய கம்மன்பில போன்றோர் மகிந்தவை உசுப்பேத்தி வருகின்றனர். பொதுத் தேர்தலின்போது மகிந்தவுடன் இணையுங்கள் என்றுரைத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மகிந்த பிரதமராக வருவார் என நம்பினர். மகிந்த பிரதமராக வரமுடியாத நிலை தென்படவே மைத்திரி அரசுடன் இணைந்து கொண்டனர்.

மகிந்தவின் ஆட்சியில் இடம்பெற்ற சம்பவங்கள் சிங்கள மக்களையும் கடுமையாகப் பாதித்திருந்தன. பயங்கரவாதத்தை ஒழிக்க முயலும் அரசுக்கு ஆதரவாக மகிந்த அரசு விடுதலைப் புலிகளுடன் போர் நடத்துகின்றது. அதற்காக சிங்கள மக்களும் பாடுபடவேண்டும். போருக்காகவும் படையினருக்காகவும் ஒத்துழைக்க வேண்டும் என்ற பரப்புரைகளுக்கு சிங்கள, முஸ்லிம் மக்கள் தென்னிலங் கையில் முகம் கொடுத்திருந்தனர். பொருளாதார நெருக்கடிகளையும் வாழ்க்கைச் சுமைகளையும் எதிர்கொண்டனர். இருந்தும் போரில் படையினர் வெற்றி ஈட்டி சிங்கள மக்களையும் 2009 இல் சிலிர்க்க வைத்தது.

2009 இற்குப் பின்னர் மகிந்த குடும்பமே நாட்டின் அரசுரிமையைக் கையிலெடுத்திருந்தது. சர்வாதிகார அரசியல், மகிந்த ஆட்சிக்கு வலுவூட்டியது. சிங்கள மக்கள் மீதான வன்முறை அரசுப்படையினரால் மேற்கொள்ளப்பட்டது. அடக்கு முறைகளையும் சிங்கள மக்கள் மீது மட்டுமன்றி சிங்கள மாணவர்கள் மீதும் மகிந்த அரசு கையாண்டது. இதனாலேயே சிங்கள மக்களில் கணிசமானோர் மகிந்தவின் ஆட்சி மீது வெறுப்புக் கொண்டனர். அதன் பலாபலனே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எவருமே எதிர்பாராத விதத்தில் மகிந்த தோல்வியைத் தழுவ வழிவகுத்தது.

குடை நிழலில் குஞ்சரம் ஊர்ந்தோர் நடை மெலிந்தோராய் நண்ணினும் நண்ணுவர் என்ற முதுமொழிக்கு உதாரணமானவர் மகிந்த.

## மதிய உணவு விவகாரத்தில் உரிய கண்காணிப்பு வேண்டும்

கிளிநொச்சி பன்னங்கண்டியில் அமைந்துள்ள பாடசாலையயான்றின் மாணவர்கள் விறகுகளைச் சேகரிப்பதற்காக வெளியே அனுப்பப்படுவதாகப் பத்திரிகையொன்றில் செய்தி வெளியாகியிருந்தது. பாடசாலையில் மதிய உணவைச் சமைப்பதற்காகவே இந்த விறகு சேகரிப்பு இடம் பெறுவதாகவும் தெரியவருகின்றது. இந்த விடயம் உண்மையாக இருக்குமானால் இதை எந்த வகையிலுமே ஏற்றுக் கொள்ள முடியாது. சில பாடசாலை அதிபர்கள் கற்றல் செயற்பாடுகளை விட வேறு விடயங்களில் மாணவர்களை ஈடுபடுத்துவதை அவதானிக்க முடிகின்றது. பாடசாலையின் உள்ளும் புறமும் கூட்டுதல், புற்களையும் செடிகளையும் பிடுங்கித் துப்புரவு செய்தல், சாப்பாட்டுக் கோப்பைகளைக் கழுவுதல் ஆகிய வேலைகளில் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர் – புழுதி கிளம்பும் வகையில் அவர்கள் கூட்டுதல் வேலையில் ஈடுபடும் போது காலணி மற்றும் பள்ளிச் சீருடை ஆகியன அழுக்காகிப்போவதை அவர்களால் தடுக்க முடிவதில்லை தற்போது கிளிநொச்சியில் உள்ள பாடசாலை மாணவர்களை விறகு சேகரிப்பதற்கு அனுப்பி வைப்பதாகச் செய்தி வந்துள்ளது. இது தொடர்பாகப் பாடசாலை அதிபரிடம் கேட்டால், கல்வித் திணைக்களம் விறகு வாங்குவதற்குப் பணம் தருவதில்லை. நாம் வேறென்ன செய்வது? எனப்பதில் தருவார்கள். ஆனால் இதை ஏற்றுக் கொள்ளவே முடியாது. ஒரு சில பாடசாலைகளில் மதிய உணவைச் சமைப்பவர் வராது விட்டால் அந்த வேலையைப் பெற்றோர் செய்ய வேண்டுமெனப் பாடசாலை அதிபர்களால் வற்புறுத்தப்படுவதாகத் தெரிகின்றது. இதனால் பெற்றோர்களுக்கும் பாடசாலை அதிபர்களுக்குமிடையில் முரண்பாடுகளும் தோன்றியுள்ளன. இதனால் பாதிக்கப்படுவது பிள்ளைகள்தான் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆகவே மதிய உணவு வழங்கும் விடயத்தில் பாடசாலை அதிபர்களை மட்டுமே நம்பியிராமல் கல்வித்திணைக்களமும் காத்திரமான பங்களிப்பை வழங்கவேண்டும். இறுக்கமாக கண்காணிப்பையும் மேற்கொள்ளவேண்டும். இதனால் எவ்வளவோ பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். மாணவர்கள் விறகு சுமக்க வேண்டிய அவலமும் ஏற்படாது

பா.வளர்மதி. இருபாலை.

## ஓட்டோக் கட்டணங்களில் வேறுபாடு தேவைதானா?

ஓட்டோ சாரதிகள் தாம் நினைத்தவாறு கட்டணங்களை அறவிடுவதால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அண்மையில் சுன்னாகத்திலிருந்து எனது வீட்டுக்குச் செல்வதற்கு ஓட்டோவில் பயணித்தேன். ஓட்டோ சாரதி 250 ரூபா தருமாறு கேட்டுப் பெற்றுக் கொண்டார். பின்னர் வேறொரு ஓட்டோவில் பயணித்தபோது அந்த ஓட்டோ சாரதி 200 ரூபா தருமாறு கூறிப் பெற்றுக் கொண்டார். ஒரேயளவு தூரத்துக்கு ஏனிந்த வேறுபட்ட கட்டணங்கள்?

இதேவேளை ஓட்டோக்களுக்கு மீற்றர் பூட்டுவதாகக் கூறினார்கள். ஆனால் அநேகமான ஓட்டோக்களில் மீற்றர் பயன்படுத்தப்படுவதில்லை. கட்டணத்தை ஓட்டோ சாரதிகளே நிர்ணயம் செய்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் பயணத்தின் முடிவில் ஓட்டோ சாரதிகள் மனம் போன போக்கில் கட்டணத்தைக் கேட்கின்றனர். இதனால் பயணம் செய்பவர்களுக்கும் அவர்களுக்குமிடையில் முறுகல் நிலை தோன்றுகின்றது.

இன்று ஓட்டோ பலரும் பயன்படுத்துகின்றதொரு சாதனமாகிவிட்டது. இதனால் சீரான கட்டணங்களை அறவிடவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பஸ்களுக்கு கட்டணங்களை நிர்ணயம் செய்யும்போது ஓட்டோக்களுக்கு மட்டும் விதிவிலக்கா?

உரிய அதிகாரிகளுக்கு இது சமர்ப்பணம். ஓட்டோ சாரதிகளையும் பொது மக்களையும் இனியும் மோத விடாதீர்கள்.

பா.சந்திரன். சுன்னாகம்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரிட்டனின் நாடாளுமன்றக் கட்டடத்தைக் கடந்த 1605ஆம் ஆண்டு வெடிவைத்துத் தகர்க்கும் முயற்சி முறியடிக்கப்பட்ட நாளை நினைவுகூரும் வகையில், அந்த நாட்டில் ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி பெரும் எடுப்பில் தீபோற்சவ விழா நடைபெறுவது வழக்கம். நடப்பு வருடத்தின் விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. குறித்த நிகழ்வில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் முக்கிய வேட்பாளர்களில் ஒருவரான டொனால்ட் ட்ரம்பின் 36 அடி உயர கொடும்பாவி தீயிட்டு கொளுத்தப்பட்டது. (ம-எ)

## ஒரே நாளில் 2,200 அகதிகள்

இத்தாலி கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் மட்டும் 2, 200 அகதிகள் மீட்கப்பட்டனர் என இத்தாலி கரையோர காவல் படை தெரிவித்தது.




உள்நாட்டுப் போரால் நிலைகுலைந்துள்ள ஈராக், சிரியா, லிபியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்தும், வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்பிரிக்க நாடுகளில் இருந்தும் தினம் தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாகச் செல்கின்றனர். மத்திய தரைக்கடல் வழியாக இவ்வாறு அகதிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றிச் செல்லும் படகுகள், நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி, பலத்த உயிர்ச்சேதத்தை

ஏற்படுத்தி வருவது தெ
கிறது. சமீப காலமாக ஐ

அகதிகளாக தஞ்சம் அ
எண்ணிக்கை மட்டும்

## உலகமே எதிர்பார்த்துக்
## அமெரிக்க ஜனாதிபதித்

உலகமே ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நாளை நடைபெறவுள்ளது.




தற்போதைய ஜனாதிபதியான ஒபாமாவின் பதவிக்காலம் அடுத்த வருடம் ஜனவரி மாதத்துடன் முடிவுக்கு வருகிறது. இதனால் அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நாளை நடத்தப்படுகிறது. அமெரிக்காவின் இருபெரும் கட்சிகளில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக டொனால்ட் ட்ரம்ப்பும், குடியரசுக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரி கிளிங்டனும் உள்ளனர். தேர்தல் பரப்புரைகள் அனல் பறந்து ஓரளவு முடிவுக்கு வந்துள்ளன.

### ஹிலாரிக்கான வாய்ப்பு

அமெரிக்காவில் தற்போது ஆட்சி அமைத்துள்ள கட்சியான ஜனநாயக் கட்சியின் வேட்பாளர் என்ற காரணத்தாலும், அமெரிக்காவின் அயலுறவுத்துறை அமைச்சராக ஏற்கனவே பதவி வகித்த காரணத்தாலும், ஹிலாரிக்கு அதிகளவான ஆதரவு ஆரம்பத்தில் இருந்தது. ஆனால், அவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் அரச தேவைகளுக்காக தனது தனிப்பட்ட மின்னஞ்சலை பயன்படுத்தியமையால் அவர் மீது தற்போது ஊழல் மோசடிக் குற்றச்சாட்டு முன்வைக் கப்பட்டுள்ளது. அரசதேவைகளுக்காகதனதுதனிப்பட்ட மின்னஞ்சலை பயன்படுத்தியமையை ஹிலாரி ஏற்றுக்கொண்டாலும், ஊழல் ஒன்றும் செய்யவில்லை என ஹிலாரி தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் அடிக்கடி விசாரிக்கப்படுகிறார். இதன் காரணமாக ஆரம்பத்தில் மிகப் பிரகாசமாக இருந்த ஹிலாரிக்கான வாய்ப்புக்கள் தற்போது தொங்கு நிலையில் உள்ளன.

### ட்ரம்புக்கான வ

ஹிலாரி மீது முன்
மோசடிக் குற்றச்ச
என்று சொல்லுவ
தல் களத்தில் சார்
ட்ரம்ப் விளங்குகி
களில் ட்ரம்ப் உதி
அவருக்கு பின்
கொடுத்துள்ளன
பான நிலைப்பாடு



## இந்துக்கள் மீது தாக்குதல்கள் பங்களாதேஷில் நடத்தப்பட்டன

### மத அவமதிப்பு எதிரொலியாக

பங்களாதேஷில் சிறுபான்மையாக வாழும் இந்துக்கள் மீது கொடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றமை பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.

பங்களாதேஷில் இந்துக்கள் வாழும் மாவட்டமான பிராமன்பரியாவின் மத்கயாபரா, தக்சின்பரா ஆகிய இந்து கிராமங்களுக்குள் புகுந்த ஆயுததாரிகள் சிலர், இந்துக்கள் மீது தடியடி நடத்தியதுடன் 7 வீடுகளை எரியூட்டினர்.

சில கோயில்களும் நொறுக்கப்பட்டன. பொலிஸார் சம்பவ இடத்துக்குக் குவிக்கப்பட்டதை அடுத்து, ஆயுததாரிகள் விரட்டப்பட்டனர். பெரும் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் வாழும் இந்து நபரொருவர் உலகிலுள்ள மோசமாக தொழுகைக்கூடமென்றால் அது மெக்காவே என அண்மையில் தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டிருந்தார். இதனால் இந்துக்களுக்கு எதிராகச் சில தினங்களுக்கு முன்னரும் கலவரமொன்று வெடித்தது. அதன் தொடர்ச்சியாகவும் இது இருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம-எ)

## அல்குவைதாவின் முக்கியஸ்தரைக் கொன்றது அமெ.

வொஷிங்டன், நவ.7

ஆப்கானிஸ்தானுக்கான அல்குவைதா தலைவர் பாருக் அமெரிக்க படையின் தாக்குதலில் கொல்லப்பட்டார் என அமெரிக்கா இராணுவம் தெரிவித்தது.



ஆப்கானிஸ்தானில் அல்குவைதா அமைப்பு பதுங்கி இருக்கும் இடங்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட இடங்களில் கடந்த மாதம் இறுதிப் பகுதியில் தொடர்ச்சியான வான் தாக்குதலை நடத்தியது அமெரிக்கா. தாக்குதலை நடத்தியமையை உறுதி செய்த போதிலும், அந்த ஆயுதக் குழுவுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பில் எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில் குறித்த தாக்குதலில் ஆப்கானிஸ்தானுக்கான அல்குவைதா தலைவர் பாருக் கொல்லப்பட்டார் என அமெரிக்க இராணுவம் நேற்றுமுன்தினம் அறிவித்தது. நடப்பு வருடத்தின் ஆரம்பத்தில் பன்னாட்டுகளாலும் தேடப்படும் குற்றவாளிகளின் பட்டியலில் பாருக் சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ... இத்தாலி கடற்பரப்பில் மீட்பு

...தொடர்கதையாகி வரு ...ஐரோப்பிய நாடுகளில்



...டைந்துள்ள மக்களின் ... சுமார் 21 லட்சத்தை எட்டியுள்ளது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் மட்டும் மத்திய தரைக் கடல் வழியாக 13 இறப்பர் படகுகள், இரு இயந்திரப்படகுகள் மூலம் இத்தாலி நாட்டு கடல் எல்லையை கடக்க முயன்ற சுமார் 2,200 பேரை இத்தாலி கடலோரக் காவல் படையினர் மிலன் நகர கடல் பகுதியில் தடுத்து நிறுத்தி மீட்டுள்ளனர். 10 உயிரிழந்த உடல்களையும் கண்டெடுத்துள்ளனர்.

இந்தத் தகவல்களை ஐக்கிய நாடுகளை சபையும் உறுதிப்படுத்தியது. (ம-எ)



## டொனால்ட் ட்ரம்பின் பரப்புரையில் துப்பாக்கி ஏந்திய நபரால் பரபரப்பு

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் முக்கிய வேட்பாளர்களில் ஒருவரான டொனால்ட் ட்ரம்பின் பரப்புரைக் கூட்டத்தில் நபரொருவர் துப்பாக்கியுடன் வந்தமையால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நாளை நடைபெறவுள்ளது. குடியரசுக் கட்சியின் தலைமை வேட்பாளராக டொனால்ட் ட்ரம்ப் உள்ளார். தேர்தல் பரப்புரைகள் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளன. குடியரசுக் கட்சியின் தேர்தல் பரப்புரைக்கூட்டமொன்று நேற்று முன்தினம்நடைபெற்றது. நெவேடா மாநிலத்தில் உள்ள ரெனோ நகரில் நடைபெற்ற குறித்த கூட்டத்தில் டொனால்ட் உரையாற்றி கொண்டிருந்தபோது, திடீரென்று மேடையில் தோன்றிய அவரது பாதுகாவலரான ரகசிய பொலிஸார், டிரம்பின் உடலை கேடயம் போல் மறைத்தபடி, அவரை மேடைக்கு பின்புறமாக அழைத்துச் சென்றனர்.

அதற்குள், மேடைக்கு எதிரே இருந்த ஒருநபரை உள்ளூர்ப் பொலிஸார்கைதுசெய்து அழைத்து சென்றனர். அந்த மர்ம நபர் துப்பாக்கியுடன் பரப்புரைக் கூட்டத்துக்கு வந்து, ட்ரம்பை கொல்ல முயன்றதாக பொலிஸ் வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன. குறித்த நபர் கைது செய்யப்பட்ட பின்னர், மீண்டும் மேடையில் தோன்றிய டொனால்ட் ட்ரம்ப் தனது உயிரை பாதுகாத்தமைக்காக நன்றி தெரிவித்துவிட்டு தனது பேச்சை தொடர்ந்தார். பொலிஸார்மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம)

## விண்வெளியிலிருந்து பதிவானது வாக்கு

வொஷிங்டன், நவ. 7

அமெரிக்க வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு தோர்தல் சூடு பிடித்துள்ளது. இந்த நிலையில் பன்னாட்டு விண்வெளி மையத்தில் இருந்து, அமெரிக்க விண்வெளி வீராங்கனை கேட்



றுபின்ஸ் தனது வாக்கை பதிவு செய்துள்ளார். தேர்தல் தினத்தில் மட்டுமல்லாமல், அதற்கு முன்னைய தினங்களிலும் தமது வாக்கைப் பதிவுசெய்யக் கூடிய வசதி அமெரிக்காவில் உள்ளது. இதனைப் பயன்படுத்தியே றுபின்ஸ் தனது வாக்கைப் பதிவுசெய்தார். (ம-எ)

## ... காத்திருக்கும் ... தேர்தல் நாளை



...வாய்ப்பு

...வைக்கப்பட்டுள்ள ஊழல் ...நாட்டு ட்ரம்புக்கான வாய்ப்பு ...தற்கல்ல. ஏனெனில் தேர் ...ச்சைகளின் இருப்பிடமாக ...கிறார். தேர்தல் பரப்புரை ...ர்த்த மூன்று கருத்துக்கள் ...னடைவை ஏற்படுத்திக் ... என்று–அகதிகள் தொடர் ...). அமெரிக்கக் குடியுரிமை பெறாத அகதிகள் அனைவரும் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவார்கள். மேலதிகமான அகதிகள் எவரும் அமெரிக்காவுக்குள் உள்வாங்கப்படார் என ட்ரம்ப் தெரிவித்திருந்தார். இரண்டாவது, ரஷ்யாவைப் புகழ்ந்தமை. அமெரிக்காவின் பரம எதிரியான ரஷ்யாவையும் ரஷ்ய ஜனாதிபதி புடினையும் ட்ரம்ப் எக்கச்சக்கமாக புகழ்ந்து தள்ளினார். இதனால் ஏகப்பட்ட அமெரிக்கர்களின் ஒட்டுமொத்த எதிர்ப்பையும் சம்பாதித்திருந்தார். மூன்றாவது, மெக்ஸிக்கோ தொடர்பான நிலைப்பாடு. அமெரிக்காவின் அயல்நாடான மெக்ஸிக்கோவுக்கு எதிராக சுவர் எழுப்பப்படும் என ட்ரம்ப் அறிவித்தார். இதற்கு பாப்பரசர் தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார். பாப்பரசருக்கும் கண்டனத்தைத் தெரிவித்தார் ட்ரம்ப்.

எல்லாவற்றையும் விட, கடந்த சில வருடங்களுக்குமுன்னர்பெண்கள்அனைவரையும் விலை மாதுக்கள் என்றவாறாக ட்ரம்ப் சித்திரித்திருந்தார். இவை எல்லாமும் சேர்ந்து அவர் மீது எதிர்ப்பலைகளைத் தோற்றுவித்திருந்தன.

ட்ரம்ப்வெற்றிபெறுவார்என்றகதைக்கேஆரம்பத்தில் இடமில்லை எனக் கருதப்பட்டாலும், மறுமுனையில்ஹிலாரியும்பின்னடைவைச் சந்தித்துள்ளதால் திரில் நிலைக்கு மாறியுள்ளது அமெரிக்கத் தேர்தல் களம். (ம-எ)

## போதைப் பொருள் விவகாரத்தில் ஆளுநருக்கும் சாவுத் தண்டனை

### டுடேர்தே அதிரடி

மனிலா, நவ. 7

பிலிப்பைன்ஸில், போதைப் பொருளைக் கடத்தினார் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட ஆளுநர் ஒருவர் சிறையில் வைத்து பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.



பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி டுடேர்தே, போதைப் பொருளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதன்படி போதைப் பொருளை கடத்துபவர்கள், வைத்திருப்பவர்கள், மூளையாகச் செயற்படுபவர்கள், கொள்வனவு செய்பவர்கள் என அனைவரும் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் அல்புவரா நகர ஆளுநரான றொலான்டோ எஸ்பினோசா என்பவர் போதைப் பொருளைக் கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலும் அவர்போதைப் பொருளைக் கொள்வனவு செய்ய முற்பட்ட காரணத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார் என பொலிஸ் தரப்புத் தெரிவித்தது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் பிறிதொரு ஆளுநரும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



## தென்கொரிய ஜனாதிபதிக்கு சிக்கல்கள்

ஊழல் மோசடிக் குற்றச் சாட்டுக்கள் காரணமாக தென்கொரிய ஜனாதிபதி பார்க் கியூன் ஹை, பதவி விலகவேண்டும் என வலியுறுத்தி பல்லாயிரக் கணக்கான பொதுமக்களால் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தென்கொரிய ஜனாதிபதிக்கு 40 ஆண்டுகள் நெருங்கிய தோழியாக சோய் சூன் சில் என்பவர் உள்ளார். அவர் இரண்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களை நடத்தி வருகிறார். தொண்டு நிறுவனத்துக்கு வந்த பல கோடி ரூபாய் நிதியை தனது சொந்த பயன்பாட்டுக்கு செலவழித்தார் என குற்றஞ்சாட்டப்பட்டது. இதற்கு ஜனாதிபதியும் உடந்தை எனத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அவர் பதவி விலகவேண்டும் என வலியுறுத்தி, பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்று திரண்டு தலைநகர் சியோலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஊர்வலத்தில் கிட்டத்தட்ட 17 ஆயிரம் பொதுமக்கள் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)

## இந்தோனேஷியாவில்

# கிறிஸ்தவர்கள் - இஸ்லாமியர்கள் கலவரம் 160 பேர் உயிரிழந்தனர்; பலருக்குக் காயம்

ஜகார்த்தா, நவ.7

இந்தோனேஷியாவில் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியரிடையே வெடித்த கலவரத்தை அடுத்து, 160 பேர் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர். கிறிஸ்தவ ஆளுநர் பசுகி ஜகாஜா இஸ்லாத்துக்கு எதிராகவும் குரானுக்கு எதிராகவும் விமர்சனம் விடுத்ததை அடுத்தே, நேற்றுமுன்தினம் இந்தப் பெரும் கலவரம் வெடித்தது என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஆரம்பத்தில் ஆர்ப்பாட்டமாக ஆரம்பித்த பேரணி படிப்படியாக பெருங் கலவரமாக மாற்றம் பெற்றது. இந்தக் கலவரத்தில் 160 பேர் கொல்லப்பட்டனர். பல வீடுகளும், வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. மூளையாகச் செயற்பட்ட 10 பேர் கைது செய்யப்பட்டனர். கலவரத்துக்கு காரணமாக இருந்த தனது கருத்துக்கள் தொடர்பில் ஆளுநர் மன்னிப்புக் கேட்டார். (ம-எ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நவம்பர் மாத ராசி பலன்



## தனுசு

சுற்றுப் புறச் சூழலுக்குக் கட்டுப்படாமல் தனக்கென தனிப்பாதையில் செல்லும் தனுசு ராசிக்காரர்களே! 3ஆவது வீட்டில் கேது நிற்பதனால் தெளிவாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். கடந்த காலத்தில் ஏற்பட்ட இழப்புகள், ஏமாற்றங்கள் மீண்டும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் கவனமாக இருப்பீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தெய்வபக்தி அதிகரிக்கும். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். உங்கள் ராசிநாதன் குரு பத்தாவது வீட்டில் கேந்திராதிபத்தியம் அடைந்திருப்பதனால் வேலைச்சுமை கூடிக் கொண்டேபோகும். உங்களைப் பற்றிச் சிலர் தவறாக பேசிக்கொள்வார்கள். அதற்காக நீங்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருக்காதீர்கள். பணம் கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கையாக இருங்கள். முன் கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. உணவுக் கட்டுப்பாடு தேவைப்படுகிறது. உங்கள் பூர்வ புண்ணியாதிபதியாகிய செவ்வாய் சாதகமான நட்சத்திரங்களில் செல்வதனால் குழந்தைப் பாக்கியம் உண்டு. பிள்ளைகளால் உங்கள் அந்தஸ்து ஒருபடி உயரும். மகளுக்கும் நல்ல வரன் அமையும். மகனுக்கும் நல்ல நிறுவனத்தில் வேலைக் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை உருவாகும். சுக்கிரன் சாதகமாக நின்றுகொண்டிருப்பதனால் பழைய கடன் பிரச்சினை கொஞ்சம் குறையும். ஏழரைச்சனி நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் அநாவசிய செலவைக் குறைக்கப் பாருங்கள். திடீர் செலவுகள் இருந்து கொண்டேயிருக்கும். 15ஆம் திகதி வரை உங்கள் பாக்கியாதிபதி சூரியன் நீச்சமானாலும் லாப ஸ்தானத்தில் இருப்பதனால் சவாலான வியங்களைக் கூட எளிதாக முடிப்பீர்கள். எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். அரசாலும் ஆதாயம் உண்டாகும்.

**பெண்களுக்கு**

புதிய நண்பர்களை நம்பி பழைய நண்பர்களை இழந்து விட வேண்டாம். பெற்றோரைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். பழைய பாக்கிகள் வசூலாகும். வேலையாள்களால் இருந்து வந்த பிரச்சினை குறையும். கடையை விரிவுப்படுத்துவீர்கள். உத்தியோகத்தில் அவ்வப்போது வேலையில் நீடிப்போமா, இல்லையா என்ற சந்தேகம் வரும். மூத்த அதிகாரிகளும் உங்களைப் பாரபட்சமாக நடத்துவார்கள். சவால்களுக்கு முகம்கொடுக்கும் மாதம் இது.

## மகரம்

தன் பலம் பலவீனம் அறிந்து, தன்னைத் தயார் படுத்திக் கொள்ளும் மகர ராசிக்காரர்களே! உங்கள் ராசிக்கு பிரபல யோகாதிபதியாக இருக்கும் சுக்கிரன் சாதகமான நட்சத்திரங்களில் பயணம் செய்வதனால் எல்லா விதத்திலும் உங்களுக்கு வெற்றி உண்டு, மகிழ்ச்சி உண்டு. இழுபறியாக இருந்து வந்த வேலைகள் நல்ல விதத்தில் முடிவடையும். வழக்குகள் சாதகமாகும். பணவரவு அதிகரிக்கும். புதுத்தொழில் தொடங்கக்கூடிய வாய்ப்பும் உண்டாகும். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் செல்வாக்குக்கூடும். உறவினர் வீட்டுத் திருமணம், கிரகப்பிரவேசம் எல்லாம் முன்னின்று நடத்துவீர்கள். மகனுக்குத் திருமணம் கூடி வர வாய்ப்பிருக்கிறது. வேலை கிடைக்கவும் வாய்ப்பிருக்கிறது. சிலர் புது வாகனம் வாங்கக்கூடிய அமைப்பும் உருவாகும். உங்களுடைய ராசிநாதன் சனிபகவான் லாப வீட்டில் நின்று கொண்டிருப்பதனால் பெரியவர்களின் அறிமுகம் கிடைக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களால் அனுகூலம் உண்டு. உங்களுடைய வார்த்தைக்கு மதிப்புக்கூடும். உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். 2 ஆவது வீட்டிலே கேது நின்று கொண்டிருப்ப தனால் வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. செலவுகளைக் கட்டுப்படுத்த நினைத்தாலும் கட்டுக்கடங்காமல் போகும். செவ்வாய் உங்கள் ராசிக்குள் நுழைந் திருப்பதால் வீண் செலவுகளும் குறையும். தாய் வழி உறவினருடன் இருந்து வந்த கருத்து மோதல் களும் விலகும். ஆனால் உடல் உஷ்ணமாகும். குளிர்ச்சிதரக்கூடிய காய் கறிகளை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். குருபகவான் உங்கள் ராசியைப் பார்த்துக் கொண்டேயிருப்பதனால் பெரிய பதவியில் அமர்வீர்கள். சிலருக்கு வேலை கிடைக்கும்.

**பெண்களுக்கு**

உயர்கல்வியில் தேர்ச்சி பெறுவீர்கள். போட்டித் தேர்வில் கலந்துகொண்டு வெற்றி பெற்று புது வேலையில் சேரக்கூடிய வாய்ப்பும் உண்டாகும். சிலருக்கு திருமணம் கூடி வரும். வியாபாரத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வருவீர்கள். புகழ்பெற்ற நிறுவனங்களுடன் புது ஒப்பந்தங்கள் செய்து கொள்வீர்கள். உத்தியோகத்திலே செல்வாக்கு அதிகரிக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் மாதம் இது.

**நாளை** ஐப்பசி-23
செவ்வாய்க்கிழமை -08.11.2016
திதி: அட்டமி மு.ப. 08.33
நட்சத்திரம்: அவிட்டம் பி.இ.12.28
ராகுகாலம்:0[illegible] வரை
சுபநேரம்: 10.35-12.05 வரை

# இந்த அநியாயங்களை எவர்தான் தடுப்பார்?

மீள்குடியமர்வு மாவட்டமாகக் காணப்படும் கிளிநொச்சி மாவட்டத்தில் பலதரப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் வீட்டுத்திட்டப் பயனாளிகள் தமக்குத் தேவையான மணலைப்பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டிய நிலையுள்ளது.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மற்றும் பெறுமதியான மரங்கள் அழிக்கப்படுகின்றமை போன்ற செயற்பாடுகள் அதிகளவில் காணப்படுகின்றன. இவ்வாறு இந்த மாவட்டத்தில் வகை தொகையின்றி அழிக்கப்படும் வளங்கள் இந்த மாவட்டத் தேவைகளுக்குப் பயன்படுவது என்பது மிகமிக அரிது. ஆனால் வியாபார நோக்கங்களுக்காகவே இவை அழிக்கப்பட்டு வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இதனால் கிளிநொச்சி மாவட்ட மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டவிரோத மணல் அகழ்வுகள், காடழிப்புக்கள் தொடர்பில் இறுக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு மணல் கொண்டு செல்வதற்கான அனுமதிகள் எவையுமில்லாத போதும் இவ்வாறான வளங்கள் கொள்ளையிடப்பட்டு வெளிமாவட்டங்களுக்கே கொண்டு செல்லப்படுகின்றன. இது தொடர்பாக மாவட்டச் செயலாளர் கருத்துத் தெரிவிக்கும் போது, இவ்வாறு வெளிமாவட்டங்களுக்கு மணல் கொண்டு செல்வதற்கான எந்த அனுமதிகளும் இல்லை. இந்தமாவட்ட மக்கள் தமக்குத் தேவையான மணலைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன, அதற்குரிய அனுமதிகளைப்பெற்றுத் தமக்குத்தேவையான மணலைப்பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் தெரிவித்தார்.

மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோத மணல் அகழ்வினால் விவசாய நிலங்கள் மற்றும் வீதிகள் என்பனவும் சேதமடைகின்றன. மீள்குடியமர்வின் பின்னர் போடப்பட்ட சில வீதிகள்கூட தொடர்ச்சியான மணல் அகழ்வினால் சேதமடைந்துள்ளன. இதனைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இருந்தும் தினமும் இவ்வாறான மணல் அகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து மணல் மற்றும் பெறுமதியான காட்டு மரங்கள் என்பவற்றை வெளிமாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்கான எதுவித அனுமதிகளும் வழங்கப்படுவதில்லை ஆனால் எதுவித அனுமதிகளுமின்றி இரவு பகலாக இவ்வாறான வளங்கள் கொள்ளையிடப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் பன்னங்கண்டி, தட்டுவன் கொட்டி, ஊரியான், உருத்திரபுரம், செருக்கன் உள்ளிட்ட இடங்களில் கட்டுமானங்களுக்குப் பயன்படுத்த முடியாத உவர் நில மணல் மற்றும் மயானங்களிலிருந்து அகழ்வு செய்யப்பட்ட மணலே வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு நுகர்வோரை ஏமாற்றி விற்பனை செய்யப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு மணலைக் கொண்டு செல்வதற்கு எந்தவித அனுமதிகளும் வழங்கப் படாவிட்டாலும் கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ-35 வீதி ஏ-32வீதி ஏ-9 வீதியூடாக வெளி



மாவட்டங்களுக்கு மணலைக்கொண்டு செல்வதற்கு வழித்தட அனுமதிகள் உள்ளமை இவ்வாறான சட்ட விரோதமான மணல் அகழ்வுகளுக்கு வாய்ப்பாகவுள்ளதாகப் பலரும் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி பன்னங்கண்டிப் பகுதியில் மிக அண்மையில் பொது மயானத்தில் இருந்து பெருமளவான மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக சடலங்கள் புதைக்கப்பட்ட பகுதிகளில் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் புதைக்கப்பட்ட எச்சங்களும் காணப்பட்டன. இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் உள்ளிட்ட அரசியல் வாதிகளுக்கு மக்கள் வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டபோதும் அவ்விடத்திற்கு வந்தது கொள்ளையர்களுடன் சமரசம் செய்து விட்டு எவரையும் கைது செய்யாது, எந்த சட்டவிரோத நடவடிக்கைகளையும் எடுக்காது சென் றுள்ளனர். இது மக்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாசி, நேசி, யோசி, ஆலோசி

கே.எஸ்.சிவஞானராஜா

இலங்கையின் கல்வித்தரம் முன்னொருபோதும் இல்லாதவாறு பையப் பையக் குறைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இவ்வாறு குறையக் காரணம் யாதென ஆராயும்போது தாய் மொழியை உரியவாறு கற்காது ஏனோ தானோவெனக் கற்பதனாலேயே இந்தப் பலவீனம் ஏற்பட்டுள்ளதாகக் கருத முடியும். குறிப்பாக -

உறுப்பாக எழுதுதல், பார்த்து வாசித்தல், வாசித்து எழுதுதல், கேட்டு எழுதுதல், எழுதி வாசித்தல், உரத்து வாசித்தல், உணர்ந்து வாசித்தல், சேர்ந்து வாசித்தல், பிழையின்றி வாசித்தல்.

தாமாக நேசித்தல், யாசித்தல் தடையின்றி தண்ணீர் படவிரைவாக வாசித்தல், தாம் தாம் தன்னையுணர ஆலோசிக்க வைத்தல் ஆகிய வாசிப்பை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் போதுமானதாகவும் திருப்திகர மானதாகவும் மெய்யன்போடும் கடமையுணர் வோடும் ஆரம்பத்திலிருந்தே செய்யாமல் விடுபட்டதே இதற்கு மூலகாரணமாகும்.

மேலும் இப்போதிருக்கும் சந்ததியினர் குறிப்பாகத் தமிழர்கள் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக போரினால் சூழப்பட்டிருந்தமையாலும் அல்லாமலும் பெரும்பாலானவர்கள் மன உளைச்சலிலிருந்து விடுபடாமல் நோயாளிகளாகி அகப்பட்டதனாலும் வாசிப்பும் நேசிப்பும் யோசிப்பும் ஆலோசிப்பும் பிள்ளைகளுக்கு வரமாய் அமையவில்லை. அதன் அறுவடையை இப்போது அனுபவிக்கின்றோம். எவ்வாறு பிள்ளைகளை வழிநடத்த வேண்டுமென்று படித்த பெற்றோர்களுக்கும் தெரியவில்லை. அல்லாதவர்களுக்கும் புரியவில்லை. இந்த இருபகுதியினருக்கும் சரியான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதில்லை. தனியார் வகுப்புகளுக்குச் சென்றால் படிப்பு வந்து விடும் என்று பெற்றோர்கள் எண்ணி விடுவது எந்த விதத்திலும் நியாயமில்லை. காரணம் வீடுதான் முதற் பாடசாலை.

**பிரம்பு**

பெரும்பாலான வீடுகளில் மூங்கில் பிரம்பு ஒன்றல்ல இரண்டு வாங்கி வைத்திருக்கின்றார்கள். ஏனெனில் ஒன்று முறிந்தால் அடுத்தது உடன் பாவனைக்கு விடப்படும்.

ஆமாம்!

பிரம்பு பாவித்தால் படிப்பு வந்திடுமா?

பிரம்பு பாவித்தால் வாசிப்பு வந்திடுமா?

பிரம்பு பாவித்தால் உறுப்பு எழுத்து வந்திடுமா?

பிரம்பு பாவித்தால் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்று விட முடியுமா?

பிள்ளைகளின் தேடல்களுக்கும் அவர்களின் வேகத்துக்கும் அவர்களின் குறும்புகளுக்கும் பெற்றோராலும் ஆசிரியர்களாலும் ஈடுகொடுக்க முடிவதில்லை. இதன் ஓர் எச்சரிக்கை வடிவமே பிரம்பு ஆகும். பிரம்புகள் பலவற்றை மேசையில் வைத்திருக்கலாம். ஆனால் அவை இரும்பாக மாறிவிடக்கூடாது. மாறாக அவை நரம்புகளைப் பதம் பார்க்கக் கூடாது. அவை கரும்பாக இனிக்க வேண்டும்.

**எழுத்து**

தமிழில் உள்ள 247 எழுத்துக்களை முதற் கண் அழகாகக் காட்சிப்படுத்த வேண்டும். அவற்றுள் உயிரெழுத்துப் பன்னிரண்டையும் ஆறுதலாகப் பையப் பைய இயன்றவரை அழகாக எழுதப் பிள்ளைகளைப் பயிற்றுவிக்க ஆவன புரிய வேண்டும். அப்பா அம்மாவும் சேர்ந்து ஊக்கப்படுத்துதல் மிக முக்கியமானது. ஊக்கப்படுத்தலில் அடியோ கோபமோ பேச்சோ வெருட்டுதலோ தண்டனையோ தாக்குதல்களோ எரிந்து விழுதலோ இருத்தல் ஆகாது. இவற்றை மனத்திலிருத்தி விருப்பத்தோடும் பொறுமையோடும் எழுத்துக்களையும் இரண்டு எழுத்துக்களினால் ஆன சொற்களையும் கிளிப்பிள்ளைக்குச் சொல்லிக் கொடுப்பது போல் எழுதவும் சொல்லவும் பழக்கினால் பிள்ளை பிழை விடவிடப் பெரியவனாக மிளிருவான். எழுத்துக்கள் எழுதும்போது பிழை விட்டால் அது ஒரு குற்றமல்ல.



நம் சமூகம் வாசிப்பதையும் அதைக் கவனிப்பதையும் அதை நேசிப்பதையும் எழுதுவதையும் பிரயோகிப்பதையும் அதுபற்றி யோசிப்பதையும் மறந்து விட்ட காரணத்தால் கொழும்புதான் சொல்ல வேண்டுமென்றில்லை. குளிரூட்டிய அறைகளிலிருந்து போடப்படும் திட்டங்கள் குடிசைகளுக்கு வந்து சேர வேண்டும். இப்பொழுது கிராமங்களிலே தான் கல்வியின் விளைச் சல் அதிகம். விளம்பரங்கள் கல்வி ஆகாது.

தரம் ஒன்று பிள்ளைகள் எழுத்துக்களை அப்படி இப்படித்தான் எழுதுவார்கள். பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக என்பதை வாசிக்குமாறு ஓர் ஆசிரியை பிள்ளையை அதட்டுகிறார். பிள்ளைக்கு அது விளங்கத் தாமதமாகிறது. பிள்ளையின் காது முறுக்கப்படுகிறது. பிள்ளையின் கண்கள் குளமாகின்றன. அந்த ஆசிரியை உயர்தர வகுப்பு மாணவர்களுக்குக் கற்பிக்கிற மாதிரி பிஞ்சுகளுக்கு ஒருமுறை வாய்க்குள் முணுமுணுக்கிறார். பிள்ளை தவிக்கிறது. பல பெற்றோர்கள். நூற்றுக்கு நூறு எடுக்க வேண்டுமென்று பிள்ளைகளைப் படாதபாடுபடுத்துகிறார்கள். முடியுமா? சாவு தான் நூற்றுக்கு நூறு புள்ளிகள் பெற்றுக் கொள்ளும். அதற்குத்தான் பெற்றோர்கள் ஆசைப்படுகிறார்களா? பிள்ளைகளை ஒழுங்காக வாசிக்க அவர்களாக நேசிக்க வைத்து விட்டால் அவர்கள் பற்றி நீங்கள் ஒருபோதும் யோசிக்கவே தேவையில்லை. எழுத்தொலியோ கேட்ட மாத்திரத்திலே எழுத்து கைகளில் தொனிக்கும்படியாக கை தானாக எழுத வேண்டும். இதன்மூலம் கேள்வி ஞானம் செவிகளில் நிரம்பும் வகையில் எழுத்துக்கள் பிள்ளைகளுக்கு வாலாயம் பெறவேண்டும் அம்மா, அப்பா, அண்ணா, அப்பு, ஆச்சி, அன்பு, அழகு, ஆடு, ஆமை, ஆண், ஆல், ஆலயம், ஆடி, ஆவணி, இவை, இஞ்சி, இனிப்பு, இடுப்பு, இலுப்பை, இவன் இவ்வாறு சொற்களஞ்சியங்களை முதலில் கேட்கும் படியாகவும் பின்னர் ஒவ்வொரு சொல்லாக அவசரப்படாமல் வாசிக்கும் படியாகவும் பின்னர் தான் ஒலிநயத்தோடு எழுதும்படியாகவும் செய்தல் அவசியம். பெரும்பாலான வீடுகளில் முதலில் எருமை மாடு சனியன் மூதேவி நாய் மொக்கு தரித்திரம் ஆகிய சொற்களைப் பிள்ளைகள் சரியாக எழுதப் பழகுகிறது. ஏனென்றால் அம்மா பிள்ளைக்குப் பிழைவிடும்போது சொல்லும் அருச்சனை இதுவாகும். அம்மா சரியாகப் பலதடவை அறுத்து உறுத்துச் சொல்லும் போது பிள்ளைக்கு எழுத்தும் வாசிப்பும் கல்மேல் எழுத்துப்போலாகிறது. எனவே பிள்ளைகளுக்கு ஆசிரியர்களின் ஒலி நய ஆளுமை மிகவும் பிரதானமாகும். மாறாக உடை வள ஆளுமை, உடை வள ஆளுமையோ பிரதானமாக அமைய வகை புரிதல் ஆகாது ஆசிரியர்கள் முதலில் அழகாக எழுத வேண்டும். என்பது ஆண்டவனின் விருப்பமாகும். பல ஆசிரியர்களின் எழுத்துக்கள் முறைகேடாகவே உள்ளதை அவதானிக்க முடிகிறது. இந்த நிலை மிகுந்த கவலையைத் தருகிறது. யாருமே மனம் வைத்து எழுதுவதாக இருந்தால் அவர்கள் வணங்கப்பட வேண்டியவர்களே. அவ்வாறு எழுதுவதற்கு முன்னர் தொலைபேசி அழைப்பு வந்து விடும். ஆனால் அவர்களது பிள்ளைகள் உறுப்பாக எழுத வேண்டுமென்று கோயிலில் அருச்சனை செய்வார்கள்.


**எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்**

ஒருபெரியார். அவருக்குத் தமிழில் உயர்ந்த பட்டங்கள் பதவிகளும் கொடுத்தும் விட்டார்கள். பாவம் என்ன செய்வார். ஒரு பெரிய நிறுவனத்துக்குத் தனது பட்டத்தின் கௌரவத்தை நிலை நாட்டுவதற்காக விலாசமிட்டு அனுப்பியுள்ளார். நிறுவனத்தின் பதவியைத் தரம் ஐந்து மாணவன் கூடச் சரியாக எழுதிவிடுவான் பெரியவர் பிழையாகவே எழுதிவிட்டார். என்ன செய்யலாம்? பட்டம் கொடுத்த நிறுவனத்துக்கு இந்தப்பிழையைக் குறித்து அனுப்பினால் பட்டத்தைத் திருப்பி எடுத்து விடுவார்களா? என்ன கொடுமையிது?

எனவே நம் சமூகம் வாசிப்பதையும் அதைக் கவனிப்பதையும் அதை நேசிப்பதையும் எழுதுவதையும் பிரயோகிப்பதையும் அதுபற்றி யோசிப்பதையும் மறந்து விட்ட காரணத்தால் கொழும்புதான் சொல்ல வேண்டுமென்றில்லை. குளிரூட்டிய அறைகளிலிருந்து போடப்படும் திட்டங்கள் குடிசைகளுக்கு வந்து சேர வேண்டும். இப்பொழுது கிராமங்களிலே தான் கல்வியின் விளைச்சல் அதிகம். விளம்பரங்கள் கல்வி ஆகாது.

கோல் ஊன்றிப்பாய்தலிலே மகாஜனா, அருணோதயா தத்தம் பயிற்சியினாலேயே தேசியமட்டத்தை வென்றன. இலங்கை கல்வியில் உன்னதம் பெறவேண்டுமாயின் முதலில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆலய சமூ கத்தவர்கள், தொழிலாளர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள், வாகன உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள், குறிப்பாக மதகுருமார்கள், மதப் பரிபாலகர்கள், வங்கியாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகள் வாசிப்பில் யோசித்து நேசித்து ஆலோசித்து அடுத்த சந்ததிக்காவது ஒரு விழிப்புணர்வையயோ போட்டியையோ ஊக்கத்தையோ வெல்லும்படி செய்வார்களாக இருந்தால் வாசிப்பு சுவாசிப்பிலும் மிளிர்ந்து கல்வி பிரகாசிக்குமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்பமும் துன்பமும்

ஒரு கிராமம். அங்கு குணசேகரன் என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு அகல்யா, காவ்யா என இரு மகள்மார் இருந்தனர். அவர்கள் இருவருக்கும் தக்க பருவத்தில் மணம் முடித்து வைத்தார்.

ஆண்டுகள் சென்றன.

இரு மகள்களும் எவ்விதம் வாழ்கின்றனர் என்று பார்த்து விட்டு வரப் புறப் பட்டார். முதலில், மூத்த மகள் அகல்யா வீட்டுக்குச் சென்றார். அவளது வீட்டுக் காரர் ஒரு விவசாயி.

"அகல்யா உங்களது வாழ்க்கை எப்படியம்மா இருக்கிறது?" என்று கேட்டார்.

"அப்பா! எங்களுக்கு ஒரு குறையுமில்லை. வயலில் நெல் பயிரிட்டு இருக்கிறோம். விளையும் பருவத்தில் இருக்கிறது. மழை பெய்தால் நல்ல விளைச்சல் கிடைக்கும். ஒரு வாரத்துக்குள்ளே நல்ல மழை பெய்ய வேணும் என்று கடவுளை வேண்டு கிறோம்" என்றாள் அகல்யா.


அதைக் கேட்டு மகிழ்ந்த குணசேகரன், இரண்டாவது மகள் காவ்யா வீட்டுக்குச் சென்றார்.

காவ்யாவின் கணவர் செங்கல் சூளை வைத்திருந்தார்.

"காவ்யா உங்களது வாழ்க்கை எப்படியம்மா இருக்கிறது?" என்று கேட்டார்.

"அப்பா பெரும் அளவுக்கு செங்கற்களைத் தயார் செய்து காய வைத்திருக்கிறோம். இரண்டொரு நாள்களில் 'சூளை' போட்டாக வேண்டும். சூளை போட்டு எடுப்பதற்குள் மழை வராமல் இருக்க வேண்டும் என்பதற்காக கடவுளை வேண்டிக் கொண்டி ருக்கிறோம். மழை வந்துவிட்டால் பெரிய நஷ்டத்தை உண்டாக்கிவிடும்" என்று கூறினாள் காவ்யா.

இரு மகள்மாரின் எண்ணங்களையும் நினைத்துப் பார்த்தார். 'கடவுள்தான் இவர் களுக்கு விடை கூற வேண்டும்' என்று நினைத்தபடி வீட்டுக்குத் திரும்பினார் குணசேக ரன். உல கத்தில் உள்ள மக்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான எண்ணமும் விருப்பமும் இருக்காது. ஒருவர் நன்மை எனக் கருதும் விடயம் மற்றவருக்குத் தீமை யாக இருக் கும். ஒருவர் கசப்பு என்று முகம் சுளிக்கும் ஒன்று மற்றவருக்கு இனிப்பாக இருக்கும். அதனால், உலகத்தில் ஒவ்வொருவரும் எந்த விடயத்திலும் சுயநலத்தோடு செயற் படக் கூடாது. பொது நலத்தோடு பார்த்துச் செயற்பட வேண்டும்.





# வர்ணம்
## தீட்டுவோம் வாங்க....





சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.



# வரலாற்றில் இன்றைய தினம்

1665 - மிகவும் பழைமை வாய்ந்த 'த லண்டன் கசட்' முதன் முதலாகப் பிரசுரமானது.

1786 - ஸ்ரங்ரன் இசைக்குழு என்ற பெயரில் அமெ ரிக்காவின் பழைமையான இசைக்குழு உருவாக்கப்பட்டது.

1900 - ஜி.ஜி.பொன்னம்பலம் பிறப்பு.

1900 - கியூபாவின் மக்கள் கட்சி உருவாக்கப்பட்டது.

1910 - றைற் சகோதரர்களால் ஆகாய மார்க்க மாக சரக்குகள் எடுத்துச் செல்லும் சேவை தொடங்கப்பட்டது.

1914 - 'த நியூ றீப்பப்ளிக்' சஞ்சிகை முதன் முதலாக வெளியிடப்பட்டது.

2000 - கூட்டணியின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் நிமலன் வீதியில் சுட்டுக் கொலை; மோட்டார் சைக்கிளில் சென்ற ஆயுதபாணிகள் கைவரிசை.

2000 - ராஜ்குமாரை விடுவிக்க வீரப்பனின் நிபந் தனையை நிறைவேற்றும் இரு மாநில அரசுகளின் முடிவை உச்ச நீதிமன்றம் இல்லாமல் செய்தது.

# அபு சிம்பல்



எகிப்தில், அஸ்வான் நகருக்கு 290 கி.மீ., தூரத்தில் இருக்கிறது, 'அபு சிம் பல்'. இந்தக் கோவில் மிகப் பெரிய பாறையைக் குடைந்து உருவாக்கப் பட்டிருக்கிறது.

இரண்டாம் ராமசேஸ் என்ற மன்ன ரால், கி.மு., 13ஆம் நூற்றாண்டில் கட்டப் பட்டது அபு சிம்பல். ராமசேஸ் தன்னு டைய போர் வெற்றியைக் குறிக்கும் வகையில் தனக்கும், தன் மனைவி, ராணி நெபர்டாரிக்கும் இந்தக் கோவி லைக் கட்டினார்.

எகிப்தில் அதிக அளவு வெளிநாட்டுப் பயணிகளைக் கவரக்கூடிய இடமாக 'அபு சிம்பல்' இருக்கிறது. இந்தக் கோவிலை உருவாக்க இருபதாண் டுகள் ஆயின. கி.மு., 1264ல் ஆரம்பித்து, கி.மு., 1284ல் கட்டி முடிக்கப்பட்டது. பாறையைக் குடைந்து அமைக் கப்பட்ட கோவில்களிலேயே இது மிகவும் பெரியது. இரண்டு கோபுரங் கள் உள்ளன. சிலையின் தலையி லும், முகவாயிலும் கிரீடங்கள் காணப் படுகின்றன. கோவிலின் உள்ளே, ஆறு உயரமான தூண்கள் இருக்கின் றன. ஆண்டுக்கு இரு முறை ஒக்ரோ பர் 20, பெப்ரவரி 20 ஆகிய தேதி களில், கோவிலின் உட்புறத்தில், சூரி யக் கதிர்கள் விழுமாறு கோவில் கட்டப்பட்டிருக்கிறது.

# புத்தகத்தை ஏன் வாசிக்க வேண்டும்?





- தெளிவாகவும் அழகாகவும் பேச.
- எழுத்துக்களை தவறு இல்லாமல் எழுத.
- மற்றவர்களிடம் பேசும்போது சரியான எடுத் துக் காட்டுக்களுடன் பேச.
- வரலாற்றை முழுமையாகத் தெரிந்து கொள்ள.
- படிப்பதால் மூச்சு சீராகும்.
- இதயத்தின் துடிப்பு சீராகும்.
- ஒரு நாளைக்கு 60 பக்கம் படிப்பதால் முகம் அழகாகும்.
- எந்த ஒரு விடயத்தையும் தெளிவாக எந்த ஒரு குழப்பமும் இன்றி எடுத்துச் சொல்ல முடியும்.
- புத்தகம் படிப்பதன் விளைவாக நம்மைப் பற்றிய சிந்தனை தொலை நோக்குச் சிந்தனையாகும் வாய்ப்புக் கிட்டும்.
- நல்லவை எவை தீயவை எவை என்று பகுத்தறியும் மனப்பக்குவம் கிடைக் கும்.
- நம்முடைய தாய்மொழிமேல் தனிமதிப்பு உருவாகும்.
- அறிவியல் சிந்தனை கிடைக்கும்.
- மக்களாட்சி பற்றிய சரியான சிந்தனை வளரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'சாப்பிடும் போது கடைசியிலை ரசம் ஊத்திக்கனும்' என்று சொல்றது...



'தட்டை ஈஸியாக் கழுவுறதுக்காக' ஏதோ ஒரு பொண்ணுதான் கண்டு பிடிச்சிருக்கனும்...

இப்போ காலையிலை எழுந்தவுடனே பேஸ்புக் யூஸ் பண்ணுற மாதிரி



சின்ன வயசில படிச்சு இருந்தா இன்னும் கொஞ்சம் உருப்பட்டு இருக்கலாம்...

நம்ம ஊரிலை பொண்ணு அங்கப் பிரதட்சணம் பண்ணுனா அது 'கோயில்'.



ஒரு ஆண் அங்கப் பிரதட்சணம் பண்ணுனா அது 'டாஸ்மாக்'...

**வளவமுதன்**

ஆயிரம் பேருக்கு மத்தியிலும்
தனிமையாய் உணர்ந்தால்
நமக்குத் தொடர்பற்ற
வாழ்க்கை வாழ்கிறோம்
எனப் பொருள்...!

நான்
ஒரு மணி நேரத்
திலை பண்றத என்
மனைவி ஒரு நிமிசத்திலை
முடிச்சுடுவா...
அப்படி என்ன பண்ணுவாங்க...
நான் சமைப்பேன்
அவ சாப்பிடுவா...

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 7 | | | | | | 5 |
| | | | 8 | 3 | | | | |
| | 6 | 9 | | 5 | | | | |
| | 2 | | | | | 7 | | 9 |
| 4 | | | | 7 | | | | 8 |
| 1 | | 8 | | | | | 5 | |
| | | | | 8 | | 5 | 9 | |
| | | | | 6 | 2 | | | |
| 3 | | | | | | 6 | | 7 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 3 | 7 | 2 | 4 | 1 | 5 | 9 |
| 7 | 9 | 5 | 6 | 8 | 1 | 2 | 3 | 4 |
| 1 | 2 | 4 | 9 | 3 | 5 | 8 | 7 | 6 |
| 4 | 1 | 9 | 2 | 5 | 6 | 7 | 8 | 3 |
| 5 | 3 | 2 | 4 | 7 | 8 | 6 | 9 | 1 |
| 8 | 6 | 7 | 3 | 1 | 9 | 5 | 4 | 2 |
| 9 | 4 | 8 | 1 | 6 | 7 | 3 | 2 | 5 |
| 3 | 5 | 6 | 8 | 9 | 2 | 4 | 1 | 7 |
| 2 | 7 | 1 | 5 | 4 | 3 | 9 | 6 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உல்க அளவில் பிரபல்யமானது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த லாபம் கிடைக் கும். சேமிப்பு உயரும். பணியாளர்கள் விண்ணப் பித்த கடனுதவி கிடைக்கும். பெண் கள், குடும்ப வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்வர்.

**இடபம்:** பொது விவகாரங்களில், கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், விடா முயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக் கும். உறவினர் வகையால், திடீர் செலவு ஏற் படும். பயணத்தில் மிதவேகம் நல்லது.

**மிதுனம்:** நண்பர்களின் பேச்சால் சங்கடத் திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம். வெளியூர்ப் பய ணத் திட்டத்தில் மாறுதல் ஏற்படலாம்.

**கடகம்:** தக்க சமயத்தில், நண்பரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் பன்மடங்கு உயரும். குடும்பத்தின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள். பெண்கள், கண வரின் அன்பையும், ஆதரவையும் பெறுவர்.

**சிங்கம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர். பெண்கள், ஆன்மிக நிகழ்ச்சிகளில் பங்கேற்பர்.

**கன்னி:** அடுத்தவர் குடும்ப விடயத்தில் தலை யிட வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை சீர்பெற, கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணி யாளர்கள், பணிச் சுமைக்கு ஆளாக நேரிடும். செலவை சமாளிப்பர்.

**துலாம்:** எதிர்பார்ப்பு நிறைவேற தாமதமா கலாம். தொழில், வியாபாரத்தில், புதிய முயற் சியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக் கும். உடல் நலத்தில் ஆர்வம் காட்டுவீர்கள். பெண் களுக்கு சகோதர வழியில் உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** வெற்றி இலக்கை நோக்கி நடை போடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அப ரிமிதமான வளர்ச்சி உண்டாகும். லாபம் பன் மடங்கு உயரும். தெய்வ வழிபாடு சிறப்பாக நடந் தேறும். விருந்து விழாவில் பங்கேற்று மகிழ்வர்.

**தனுசு:** அறிமுகம் இல்லாதவரிடம் குடும்ப விவ காரம் பற்றிப் பேச வேண்டாம். தொழில், வியா பாரம், தாமத கதியில் இயங்கும். லாபம் சுமா ராக இருக்கும். பெண்கள், பிள்ளைகளால் நெருக் கடிக்கு ஆளாகலாம்.

**மகரம்:** பிறர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி நிறை வேறும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். பெண் கள், குடும்ப ஒற்றுமைக்குத் துணைநிற்பர்.

**கும்பம்:** எதிர்மறையாக இருந்த சூழ்நிலை, சாத கமாக மாறும். தொழில், வியாபாரம் சிறக்க, வளர்ச் சிப்பணியில் ஈடுபடுவீர்கள். ஆதாயம் படிப்படி யாக உயரும். பணியாளர்கள், பணி விடய மாக வெளியூர் செல்வர்.

**மீனம்:** நண்பருக்கு உதவி செய்து மகிழ்வீர் கள். கடந்த கால உழைப்பின் பயனால், தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி உண்டாகும். பெண்கள், வீட்டுத் தேவைகளை, தாராள செலவில் நிறைவேற் றுவர். தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும்.

# தமிழில் நடிக்க யாரும் அழைக்கவில்லை: சாய் பல்லவி



கோத்தகிரியில் பிறந்த தமிழ் பெண் சாய் பல்லவி. வெளி நாட்டில் மருத்துவம் படித்துக் கொண்டிருந்தவர் பொழுபோக்குக்காக மலையாளத்தில் பிரேமம் படத்தில் நடித்தார். படம் சூப்பர் டூப்பர் ஹிட்டாகவும் மலர் டீச்சர் கேரளா முழுவதும் பிரபலமாகி விட்டார். நிறைய வாய்ப்புக்கள் வந்தது. நடிப்பதா? படிப்பதா? என்ற குழப்பத்தில் இருந்தவர், மிகுதியாக இருந்த ஒரு வருட படிப்பை முடித்து டாக்டர் பட்டத்தை வாங்கிய கையோடு மீண் டும் நடிக்க வந்து விட்டார். தற்போது அவர் 'களி' என்ற மலையாளப் படத்திலும், 'பிந்தா' என்ற தெலுங்குப் படத்திலும் நடித்து வருகிறார்.

இதற்கிடையில் 'அவர் அந்த தமிழ் படத்தில் நடிக்கிறார், இந்தப் படத்தில் நடிக்கிறார். கவர்ச்சியாக நடிக்க மறுப்பதால் இயக்குநர்கள் தயங்கு கிறார்கள்' என்ற செய்திகள் வந்த வண்ணம் உள்ளது. இதனை மறுத்துள்ளார் சாய் பல்லவி.

இது குறித்து அவர் கூறியிருப்பதாவது: தமிழ் படத்தில் நடிக்க ஆர்வ மாக இருக்கிறேன் என்பது உண்மை. ஆனால் இதுவரை யாரும் அழைக்கவில்லை என்பது அதைவிட உண்மை. அப்படி இருக்கும்போது எப்படி இந்த மாதிரியான செய்திகள் வருகிறது என்று தெரியவில்லை. நடிக்க வந்த பிறகு அப்படி நடிக்க மாட்டேன் இப்படி நடிக்க மாட்டேன் என்று சொல்வதில் நியாயம் இல்லை. பாத்திரத்துக்கு தேவையென்றால் செய்யத்தான் வேண்டும். ஆனால் அது திணிப்பாகவோ அல்லது வேறு நோக்கத்துக்காகவோ இருந்தால் நடிக்க மாட்டேன். தமிழில் நல்ல கதையையும், தரமான பாத்திரத்தையும் எதிர்பார்த்துக் கொண்டி ருக்கிறேன்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# முட்டை உள் கோழிக்கறி



### தேவையான பொருள்கள்

கோழிக்கறி – கால் கிலோ
முட்டை – 5
பெரிய வெங்காயம் – கால் கிலோ
தக்காளி – கால் கிலோ
தேங்காய் – அரை மூடி
எண்ணெய் – கால் லீற்றர்
இஞ்சி விழுது – ஒரு தேக்கரண்டி
பூண்டு விழுது – ஒரு தேக்கரண்டி
உப்பு – தேவையான அளவு
பட்டை – சிறுதுண்டு
லவங்கம் – 4
ஏலக்காய் – 3
சீரகம் – ஒரு தேக்கரண்டி
மஞ்சள் தூள் – 2 சிட்டிகை
மிளகாய்த் தூள் – 3 தேக்கரண்டி
கோதுமை மா – 100 கிராம்



### செய்முறை

கோழிக் கறியை சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.
வெங்காயம், தக்காளி ஆகியவற்றையும் நறுக்கிக் கொள்ளவும்.
தேங்காயைத் துருவி அரைத்துக் கொள்ளவும்.
சட்டியில் இரண்டு குழிக்கரண்டி எண்ணெய் ஊற்றி அதில் பட்டை, லவங்கம், சோம்பு, ஏலக்காய் ஆகியவற்றைப் போட்டு தாளிக்கவும்.
அதன் பின் வெங்காயத்தைப் போட்டு பொன்னிறமாக வதக்கவும்.
அதனுடன் தக்காளியையும் சேர்த்து வதக்கவும்.
வெங்காயமும், தக்காளியும் வதங்கியவுடன் அதில் கோழிக்கறியைப் போட்டு நன்கு வதக்கவும்.
அதில் மிளகாய்த்தூள், மஞ்சள் தூள் ஆகியவற்றைப் போட்டு நன்கு கிளறவும்.
அதன் பின் அரைத்து வைத்த தேங்காயை அதனுடன் கொட்டி நன்கு கிளறவும். தேவையான அளவு உப்பு சேர்க்கவும்.
தாளிப்பதற்காக ஊற்றிய எண்ணெய் மேலே மிதக்கும் பொழுது அதனை இறக்கவும்.
பிறகு முட்டையை எடுத்து அதன் மேல் பகுதியில் சிறு துளையை இட்டு அதில் சிறிதளவு வறுத்து வைத்த கோழிக்கறியை அதனுள் போட்டு ஒரு சிறு குச்சியினால் நன்கு கிளறவும்.
இதேபோல் அனைத்து முட்டைகளையும் தயார் செய்யவும்.
சட்டியில் தண்ணீர் ஊற்றி அதில் கோதுமை மாவைப் போட்டு பசைபோல் காய்ச்சவும்.
முட்டையை எடுத்து அதில் உள்ள துளையினை மாவின் பசையினால் மூடவும்.
இதனை இட்லி ஊற்றி வைப்பது போல் இட்லி தட்டின் மேல் முட்டைகளை வைத்து வேக வைக்கவும்.
முட்டை உள் கோழிக்கறி தயார். மிகவும் சுவையாகவும் வித்தியாசமான உணவாகவும் இருக்கும்.




## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | பாசையூர் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 500 | – | 800 | 700 | 600 |
| நண்டு | 250 | 400 | 200 | – | 500 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | – | 600 | 600 | – |
| பாரை | 550 | 500 | 400 | – | 700 | 500 | 400 |
| சுறா | 500 | 400 | 500 | – | 800 | 700 | – |
| சீலா | 300 | 300 | 300 | – | 450 | 400 | – |
| விளை | 650 | 400 | 300 | – | 500 | 300 | 400 |
| முரல் | 300 | 300 | 300 | – | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 300 | 400 | – | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | – | 500 | 300 | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 300 | 300 | 350 |
| திரளி | 300 | 200 | 100 | – | 250 | 150 | 300 |
| நகரை | 250 | 200 | 100 | – | 300 | 200 | 300 |
| சூடை | 150 | 150 | 100 | – | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 100 | 200 | – | 300 | 200 | – |
| திருக்கை | 150 | 250 | 200 | – | 400 | 200 | 120 |
| மதனம் | 150 | 200 | – | – | 300 | 300 | – |
| கொய் | 100 | 100 | 50 | – | 120 | 100 | – |
| பாலை | 400 | 100 | 300 | – | 400 | 400 | 200 |
| வாழை | 100 | 100 | – | – | 300 | 200 | 200 |




அளவில் பெரிய மட்பாண்ட பூச்சாடிகள் அறிமுகமாகியுள்ளன. முன்பு ஹோட்டல்களில் மட்டும் காணக்கூடியவையாக இருந்த இவை தற்போது பொது மக்களின் நுகர்வுக்கு வந்துள்ளன. அலங்கார வேலைப்பாடுகளுடன், மண்ணினால் அலங்கரிக்கப்பட்டுள்ள. இவற்றில் தாவரங்கள், அலங்கார செயற்கை பூக்களை வைக்கலாம். சிலர் சாடியை மாத்திரம் அலங்காரப் பொருளாக வைப்பர். இந்தச் சாடி ஒன்றின் விலை ஆயிரத்து 100 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப் படுகிறது.



1 படத்தில் காட்டப்பட்டவாறு மூன்று பகுதியாக தலைமுடியை பிரித்துக் கொள்ளவும்.
2 போனிறெய்ல் போட்ட தலைமுடியை தலையுடன் சேர்த்துப் பின்பக்கமாக கிளிப் செய்யவும்.
3 தலைமுடியை எடுத்து பின்பக்கம் விடவும்.
4 மீதமான முடியை உட்புறமாக சுருட்டி கிளிப் செய்யவும்.
5 பின்னர் முன்பக்க முடியை பின்னாக இழுத்து படத்தில் காட்டியவாறு கிளிப்செய்யவும்.
6 மற்றைய பக்கமும் அவ்வாறு செய்யவும்.



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 50 | 60 | 40 | 40 | – | 50 |
| கத்தரி | 60 | 60 | 50–120 | 60 | 40 | 60 | – | 35 |
| கரட் | 70 | 80 | 80–120 | 80 | 120 | 140 | – | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 60 | 50 | 60 | – | 60 |
| பயிற்றை | 160 | 150 | 140 | 80 | 160 | 160 | – | 60 |
| பாகல் | 200 | 140 | 200 | 120 | 180 | 180 | – | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 100 | 100 | 70 | 120 | – | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 90 | 120 | 100 | 100 | 80 | 140 | – | 70 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 30 | 70 | – | 30 |
| தக்காளி | 80 | 60 | 60 | 60 | 70 | 80 | – | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 60 | 40 | 80 | – | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 10 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 80 | 80 | 80 | 60 | 80 | – | 70 |
| புடோல் | 70 | 40 | 60 | 60 | 60 | 60 | – | 50 |
| கோவா | 80 | 100 | 80 | 80 | 80 | 80 | – | 50 |
| வெண்டி | 80 | 80 | 120 | 80 | 100 | 40 | – | 30 |
| போஞ்சி | 160 | 180 | 180 | 160 | 160 | 220 | – | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 140 | 120 | 160 | – | 100 |
| தேங்காய் | 50 | 35 | 45 | 35–40 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 100 | 120 | 120 | – | 120 |
| தேசிக்காய் | 450 | 600 | 600 | 500 | 550 | 600 | – | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 100 | 120 | 140 | 140 | 120 | 140 | – | 70 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 50 | 60 | 80 | 60 | 80 | – | 100 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் அதிரடி 8 இளைஞர் திடீர் கைது

## ஆவாக் குழு உறுப்பினர்கள் என்கிறது பொலிஸ்
## ஒருவர் முன்னணி அலுவலகத்தில் வைத்து மடக்கப்பட்டார்

தெரிவித்தார். ஆவாக் குழுவுடன் இராணுவத்துக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். இவ்வாறு தெற்கில் ஆவாக் குழு பற்றிய பல்வேறு கருத்துக்கள் வெளியாகிய நிலையில் கடந்த இரண்டு நாள்களில் மேற்படி 8 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஆவாக் குழுவுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்று மட்டும் 5 பேரும், நேற்று முன்தினமும் 3 பேருமாக 8 பேர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இணுவிலைச் சேர்ந்த இ.கபிலோசன் (வயது -22), இ.நிரூசன் (வயது-21) ஆகிய சகோதரர்கள் அவர்களது வீட்டில் வைத்து நேற்றுஅதிகாலை 5 மணியளவில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவர்களது ஹயெஸ் வாகனத்தையும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் எடுத்துச் சென்றுள்ளனர் என்று கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மருதனார்மடத்தில் வைத்து அந்த வாகனத்தின் முன்பகுதியை கழற்றியுள்ளனர். அதன்போது அதனைக் கைதானவர்களின் சகோதரர்கள் கண்டுள்ளனர். தமது சகோதரர்களின் வாகனத்தில் சாரதிகள் புதியவர்களாக இருந்ததனால், வாகனத்தை எங்கே கொண்டு செல்கிறீர்கள் என்று அவர்கள் கேட்டுள்ளனர். அந்த வாகனத்தை வைத்திருந்தவர்கள் துப்பாக்கியைக் காட்டி தம்மைப் பொலிஸ் என்று கூறியுள்ளனர். எனினும் அதில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லாததனால் அந்த இடத்தில் ஏற்பட்ட குழப்பத்தினால், அங்கு பொதுமக்கள் ஒன்று கூடிவிட்டனர். பின்னர் பொலிஸார் அங்கு சென்று குழப்பத்தைக்கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

அவ்வாறு சாரதியை யார் என்று கேட்டவரின் தாயும் மகனும் வாகனத்தின்திறப்பைஎடுத்துக்கொண்டு பொலிஸாரிடம்ஒப்படைத்ததோடு, வாகனத்தைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று பொலிஸாரிடம் ஒப்படையுங்கள் என்று அந்தத் தாய் தெரிவித்தார்.

பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்றபின்னர்பொலிஸ் நிலைத்தில் வைத்து என்னைப் பொலிஸார் தாக்கி நிலத்தில் விழுத்தினர். அவ்வாறு அடிப்பதனைக் கண்டதும் பொலிஸார் அடிக்கிறார்கள் ஊடகத்துக்குக் கூறுங்கள் என்று மகன் கத்தினார். அதன்போது பொலிஸார் மகனின் வாயைப் பொத்தி கைகளைப் பின்புறமாகக் கட்டி, பொலிஸ் நிலையத்தின் உள்ளே இழுத்துச் சென்றனர் என்று தாயார் பொலிஸார் மீது குற்றஞ்சாட்டினார். அதன் பின்னரே தனது மகனையும் அவர்கள் கைது செய்து கொண்டு சென்றுவிட்டனர் என்றார் அந்தத் தாய்.

மற்றைய இருவரும் வெவ்வேறு இடங்களில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். வாள்வெட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அவர்களைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸாரால் கூறப்பட்டது. வாகனத்தையும் பயங்கரவாதப் பிரிவுப் பொலிஸார் கொண்டு சென்றுள்ளனர். அந்த வாகனத்தை உறவினர் ஒருவர் லீசிங் அடிப்படையில் எடுத்துத் தந்திருந்தவர் என்று பொலிஸ் நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தவரின் தாய் தெரிவித்தார். வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்ட இருவரும் தனது தங்கையின் பிள்ளைகள். அவர்கள் வாள்வெட்டுடன் தொடர்புபட்டிருக்கவில்லை. அப்படியிருக்க என்ன காரணத்துக்காகக் கைது செய்தார்கள் என்பது தெரியவில்லை என்று அந்தத் தாய் மேலும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் 3 பேர் கைது செய்யப்பட்டனர். முதலில் இருவர் கைது செய்யப்பட்டதோடு, அவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் மற்றொருவர் கட்சி அலுவலகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4,101,106)

# நல்லாட்சி அரசு மீதும் தமிழருக்கு அதிருப்தி

## புதுடில்லியில் சுமந்திரன் தெரிவிப்பு

முழுமைபெறும் போதுதான் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

புதுடில்லியில் வைத்து பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சிகளின் கூட்டமைப்பாக ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாக, ஏனைய நான்கு கட்சிகளுடன் ஐந்தாவது கட்சியாக பதிவு செய்வதற்கு, அதில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தீர்மானம் எடுக்கவில்லை. கட்சிகளின் கூட்டமைப்பாகப் பதிவதற்குத்தான் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்து வரும் கருத்துக்களால் கூட்டமைப்புக்குப் பாதிப்பு இல்லை. அவரும், வேறு சிலரும் மக்களின் நம்பிக்கையீனத்தைத் தெரிவித்து வருகின்றார்கள். அது நியாயமானது. விடயங்கள் நடைபெறவில்லை. அல்லது விடயங்கள் மந்த கதியில் நடைபெறுகின்றன. இதனால் மக்களுக்கு நம்பிக்கையீனம் ஏற்படுவது நியாயமானது. அவர்கள் அதனை வெளிப்படுத்துகின்றார்கள். இவ்வளவு காலம் கிடைக்காத தீர்வு இப்போது மட்டும் கிடைத்து விடுமா என்று அவர்கள் கேட்கின்றனர். விடயங்கள் முழுமை பெறும்போதுதான் நம்பிக்கை ஏற்படும்.

புதிய அரசமைப்புக்கான பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி அரசியல் நிர்ணய சபையை உருவாக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் இயற்றப்பட்டு அது மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்டது. வழிநடத்தல் குழு உருவாக்கப்பட்டது. ஆறு உப குழுக்கள் நியமிக்கப்பட்டன.

உப குழுக்களின் அறிக்கை எதிர் வரும் 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். வழி நடத்தல் குழுவின் அறிக்கை இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்படும். இந்த இடைக்கால அறிக்கைகள் வெளியிடப்படும்போது, இதுவரை என்ன விடயங்களில் இணக்கம் எட்டப்பட்டது, எந்த விடயங்களில் இணக்கம் எட்டப்படாமல் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பது தெரிய வரும்.

இலங்கை பொறுப்பு கூறல் நடவடிக்கையை ஏற்றுக் கொண்டதற்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வற்புறுத்தல்தான் காரணம். அதன் தாக்கத்தைக் குறைக்க எப்போதும் கூட்டமைப்புச் செயற்படாது.

போர் முடிவடைந்த போது வடக்கு கிழக்கைப் பௌத்த மயமாக்கும் சம்பவங்கள் நடைபெற்றிருந்தன. பின்னர் தணிந்திருந்தது. மீண்டும் திடீரென துரிதம் அடைந்துள்ளது. இதற்குப் பின்னால் இருந்து செயற்படக் கூடியவர்கள் யார் என்று எங்களுக்கு தெரியும். இதுபோன்ற செயற்பாடுகள் நல்லிக்கணத்துக்கு எதிரானவை. இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறக்கூடாது என்பதில் தெளிவாக இருக்கிறோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைப்பு என்ற கோரிக்கை எய்தப்பட வேண்டும். அது குறித்து முஸ்லிம் மக்களோடும் முஸ்லிம் தலைவர்களோடும் பேசிக் கொண்டிருக்கின்றோம் – என்றார்.

இதேவேளை, முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் திருத்தம் செய்ய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அதற்கு முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் எதிர்ப்புத் தெரிவிப்பது பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கும் போது, பெண்களுக்கு சம உரிமை கிடைப்பதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கும் – என்றார். (வ-

# யாழ்ப்பாணத்தில் சட்டம் ஒழுங்கை உறுதிப்படுத்தக் கோரி கவனவீர்ப்பு

## 7 தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து அறிவிப்பு

கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய 7 தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் இணைந்து கலந்துரையாடினர். வடமராட்சியிலுள்ள விடுதி ஒன்றில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக சட்டத்தரணி ஸ்ரீகாந்தா செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:

அண்மையில் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் பாரபட்சமற்ற முழுமையான நம்பிக்கை ஏற்படுத்தக் கூடியபுலன்விசாரணைகளையும் எந்தவித தலையீடுகளுமற்ற நீதி விசாரணைகளையும் நாம் கோரி நிற்கின்றோம்.

படுகொலைக்கான பின்னணியும், காரணங்களும் விசாரணைகளூடாகக் கண்டறியப்படல்வேண்டும். முழு உண்மையும் கண்டறியப்பட்டால் மாத்திரமே எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்களைத் தடுத்து நிறுத்த முடியும்.

படுகொலைகள் தொடர்பாக வாள்வெட்டுக் குழுக்களைத் தொடர்புபடுத்தி வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள், நிகழ்ந்த தாக்குதல் சம்பவங்கள், வடக்கில் குறிப்பாக யாழ்.மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது. அவற்றைமேலும்தீவிரப்படுத்தும் வகையில் சில தரப்பினரால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

இவைதொடர்பாக யாழ்.குடாநாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்படப்படுவதனையும் பொதுமக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்துவதை வலியுறுத்தியும் விரை வில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதில் 7 கட்சிகளினதும் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண உறுப்பினர்கள் எனப்பலரும் பங்குபற்றுவர் – என்றார்.

இந்தச் சந்திப்பில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், கட்சியின் செயலாளர் என்.ஸ்ரீகாந்தா, உப தலைவர் ஹென்றி மகேந்திரன் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்களான வே.சிவயோகம், ச.சுகிர்தன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி செயலாளர் எஸ்.சதானந்தன், ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் எஸ்.சிவகுமார், தமிழர் சமூக ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த எஸ். மோகன், கே.கங்கா தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த கே.நகுலன், ரி.ஜங்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(வ-4,108)

# யானையிடமிருந்து நூலிழையில் தப்பினார் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர்

தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு - கரைதுறைப் பற்று பிரதேச செயலாளர் பிக்கப் வாகனத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 5 மணியளவில் முள்ளியவளை மாமூலை வீதியால் பயணித்துக் கொண்டிருந்தவேளையில், குடியிருப்பு பகுதிக்கு அண்மையில் நடு வீதியில் யானை ஒன்று நிற்பதை அவதானித்துள்ளார். ஆரம்பத்தில் அது ஓர் மாடாக இருக்கலாம் என கருதி பயணித்த வேளையில் ஓரளவு நெருங்கிய வேளையிலேயே யானை இனம் காணப்பட்டது. இதனால் பதற்றத்துடன் வாகனத்தைப் பின்திசை நோக்கிச் செலு[...] தப்பியோடியுள்ளார். இ[...] வேளை இதே தினத்தில் [...] காலையில் ஒட்டுசுட்டான் [...] தேசத்தில் வீதியில் உடற்பயிற்[...] காக நடந்து சென்ற கிராம அ[...] வலர் ஒருவரை வீதியோரம் நி[...] யானை தாக்கமுற்பட்ட சமயம் அ[...] தப்பியோடியதாகவும் தெரி[...] கப்பட்டது. முல்லைத்தீவு மா[...] டத்தின் பல பகுதிகளிலும் [...] னியா வடக்கின் பல பிரதேசங்க[...] லும் அண்மை நாள்களில் யா[...] களின் நடமாட்டம் அதிகரித்து[...] தாக மக்கள் அச்சம் தெரிவித்[...]

(வ-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நுட்பம்



### புதிய வகையான விசைப்பலகை (Key Board) மைக்ரோசொப்ட் நிறுவன அறிமுகம்

வயர்லஸ் வசதியுடன் கூடிய மின்கலங்களின் சக்தியுடன் செயற்படக்கூடிய புதிய வகையான விசைப்பலகை ஒன்றை மைக்ரோசொப்ட் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.
இவை றிபிள் ஏ (AAA) வகை பற்றரிகள் மூலம் இயங்கு நிலையை பெற்றுக் கொள்கின்றன. இந்தப் புதிய வகைத் தயாரிப்பிற்கான உத்தரவாதம் என்பது ஓராண்டுகால வரையறையைக் கொண்டுள்ளது.
மிக நேர்த்தியாகவும் அழகாகவும் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த விசைப்பலகையானது சாம்பல் நிறமுடையதாகவும் 460.14, 229.22, 34.73 அளவுடையதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.
1,012 கிராம் எடையுடைய மேற்படி விசைப்பலகையானது புளூரூத் வசதியுடன் இயங்குநிலை பெறும் கணினிகளில் 50 அடி தூரத்துக்கப்பால் இருந்து பயன்படுத்தக்கூடிய விசேட அம்சத்தை கொண்டமைந்துள்ளது.
ரிமோட் (Remote) போன்ற செயல்படு திறனைக் கொண்டுள்ள இவ்வகை விசைப்பலகையானது சாதாரண விசைப்பலகையினைவிட சற்று உயர்வான வடிவமைப்பினை கொண்டுள்ளதனால் தரவுகளை ரைப் செய்வதற்கான இலகு தன்மையினை பெற்றுத்தந்துள்ளது.
இவ்வகையான விசைப்பலகையினை அண்ட்ரோய்ட் 5.0 லாலிபாப் ஓ.ஸ், அண்ட்ரோய்ட் 4.4.2 கிட்கேட் போன்ற தொழில்நுட்ப வசதிகளையுடையசாதனங்களுடனும் இணைத்து பயன்படுத்திக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும், விண்டோஸ் 8, விண்டோஸ் 10 வகை ஒ.எஸ் மற்றும் மேக் ஓ.எஸ்.வி 10.10.5 , 10.11.1, 10.11.4 ஆகிய ஒ.எஸ்களில் இந்த கீபோர்டை பயன்படுத்த முடியும்.

## முத்தையன்கட்டு குளத்தின் புனரமைப்பு பணிகள் துரிதகதியில்



**உலக வங்கி நிதி உதவி வழங்கியது**

முல்லைத்தீவு முத்தையன்கட்டு குளத்தின் புனரமைப்பு பணிகள் உலக வங்கியின் நிதிப் பங்களிப்புடன் துரிதகதியில் இடம்பெற்று வருவதாக மாவட்டத்தின் நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் தெரிவித்தது.
இதன் பிரகாரம் உலக வங்கி வழங்கியுள்ள 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலே மகாவலி அபி விருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழாக புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

## வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களுக்கு ஓய்வூதியம்

### அடுத்த ஆண்டுமுதல் திட்டம் நடைமுறைக்கு



வெளிநாடுகளில் பணியாற்றிவரும் இலங்கைப் பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்ட நடைமுறைப்படுத்தல் ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.
தனியார் செய்தி சேவைப்பிரிவு ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்துரைத்துள்ளார்.
அதன்போது மேலும் அவர் தெரிவித்ததாவது: கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தின்போது ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஜனாதிபதி ஆகியோர் இணைந்து கூட்டாகவெளிப்படுத்தியிருந்த தேர்தல் விஞ்ஞாபன அறிக்கையிலேயே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. குறிப்பாக வெளிநாடுகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கான மூன்று வாக்குறுதிகள் அந்த அறிக்கையிலே குறித்துக் காட்டப்பட்டிருந்தன. பிரதானமாக வெளிநாட்டுப் பணியாளர்களின் குடும்பங்களுக்கான நலன்புரித் திட்டம்,ஓய்வூதிய திட்டம் மற்றும் பணியாளர்கள் தாங்கள் பணிபுரிந்து வருகின்ற நாடுகளிலே ஆரம்பிக்கக்கூடிய வங்கிக் கணக்குகளுக்குரித்தான 2.5 சதவீத வட்டியை வழங்குதல் என்பனவே அவை. அந்த வகையிலே தற்போதைய நல்லாட்சி அரசானது வெளிநாடுகளில் பணியாற்றிவரும் இலங்கைப் பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளது என்றுள்ளார்.

## வணிகம்

## ஆசியா, மத்திய கிழக்குக்கு நேரடி விமான சேவைகள்

ஆசியா மற்றும் மத்திய கிழக்கு வலயங்களை மையப்படுத்தி மேலும் 11 நேரடி விமான சேவைகள் இலங்கையிலிருந்து ஆரம்பிக்கப் படவுள்ளன.
கொழும்பில் இருந்து, குறித்த 11 நேரடி விமான சேவைகளை ஆரம்பிப்பதற்கு, சிறிலங்கன் விமான சேவை நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதாக, அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையிலே தெரியப்படுத்தியுள்ளது.
பங்களாதேஷின் டாக்கா, ஓமானின் மஸ்கட், பாகிஸ்



தானின் லாஹூர், பஹ்ரைன், மாலைதீவுகள், சீசெல்ஸ், இந்தோனேஷியாவின் ஜகார்த்தா மற்றும் இந்தியாவின் கொல்கத்தா, மதுரை, வாரணாசி, புத்தகாயா ஆகிய விமான நிலையங்களுக்கே, இந்த நேரடி விமானப் போக்குவரத்து சேவைகள் இடம் பெறவுள்ளன. கடந்த ஆண்டு இலங்கைக்கு வருகை தந்தவர்களில் அண்ணளவாக 17 லட்சம் சுற்றுலாப் பயணிகளில் 9 இலட்சம் பேர், ஆசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள் என, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(த)







'எமது சிறுவர்கள்' எனும் தொனிப்பொருளின் கீழ் யாழ்ப்பாணம் பிரதேச அபிவிருத்தி வங்கி ஒழுங்கமைத்திருந்த உலக சிறுவர்தின நிகழ்வுகள் அண்மையில் இடம் பெற்றிருந்தன. இந்த நிகழ்வில் வங்கியின் உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், வங்கிக் கணக்கைப் பேணி வருகின்ற வாடிக்கையாளர்கள், பெற்றோர், சிறுவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனா...

கூறப்படும் குற்றச்சாட்டுகளை அவர் நிராகரித்தார். 2 வீத வட்டிக்கே கடன் வழங்கப்பட்டதாகவும், நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தவறான தக வல்களைத் தெரிவித்து வருவதாகவும் சீனத் தூதுவர் குறிப்பிட்டார். அதிக வட்டிக்கு கடன் வழங்கப்பட்டது என்றால், எதற்காக மீண் டும் சீனாவிடம் நிதி உதவி கேட்கிறீர்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார். அவரது இந்தக் கருத்துக்கள் அரசுக்குக் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. சீனத் தூதுவரின் கருத்துக்களுக்கு நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மறுப்பு வெளியிட்டார். வெளிநாட்டுத் தூதுவர் வெளியிட்ட கருத்து என்ற வகையில் அயலுற வுத்துறை அமைச்சு இந்த விடயத்தைக் கவனத்தில் கொண்டுள்ளது.

புதுடில்லி சென்றுள்ள அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர நாடு திரும்பியதும், இந்த விடயம் குறித்து ஆராய்வதற்காகக் கூட்டம் நடத்தப்படவுள்ளதாக அயலுறவுத்துறை அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சீனத் தூதுவர் வெளியிட்ட கருத்துத் தொடர்பாக அரசு ஆழ்ந்த அதிருப்தியை வெளியிட, சீனத் தூதுவருக்கு அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர அழைப்பாணை அனுப்புவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சீனத் தூதுவரின் கருத்துக்கள் தொடர்பாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, சீனத் தூதுவரின் கருத்துக்களை நட்பு நாடு ஒன்றின் தூதுவர் வெளியிட்ட கருத்துக்கள் என்று கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை. அவர் கூறியதில் எந்த அடிப்படையும் இல்லை. நாங்கள் ஒரு இறைமையுள்ள நாடு. அவ்வாறே நடத்தப்பட வேண்டும், என்று கூறியுள்ளார். (வ-5)

## படைப்...

யிட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற சம்பவங்களும் சாலியின் நீக்கத்துக்கு காரணம் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்ததாக சண்டே லீடர் தனது செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வாரம் இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் பதவியில் இருந்து பிரிகேடியர் சுரேஸ் சாலி நீக்கப்பட்டு, பிரிகேடியர் விஜேந்திர குணதிலக அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

பிரிகேடியர் சுரேஸ் சாலி நீக்கப்பட்டதையடுத்தே, அவருக்குக் கீழ் செயற்பட்ட இரண்டு புலனாய்வுப் பிரிவுகள் கலைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பிரிகேடியர் சுரேஸ் சாலி மீதான நம்பிக்கை இழக்கப்பட்டதையடுத்தே அவர் இந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்றும், பிரிகேடியர் சாலியின் நீக்கத்துக்கு, யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களும் ஒரு காரணம் என்றும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச உள்ளிட்ட முன்னைய ஆட்சியாளர்களுடன், பிரிகேடியர் சுரேஸ் சாலி நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை புதிதாக இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட பிரிகேடியர் விஜேந்திர குணதிலக, முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு நெருக்கமானவர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

### வாடகைத் தாய் தேவை

30 வயதுக்குக் குறைவான பெண் IUF சிகிச்சைமுறை மூலம் செய்வதற்கு வாடகைத்தாயாகத் தேவை. சன்மானம் வழங்கப்படும். இரகசியம் பேணப்படும்.

**076 6341028**

### தவறிவிட்டது


யாழ்ப்பாணத்தை சேர்ந்த செல்வி சுகந்தினி பேரம்பலம் என்பவரது கடவுச்சீட்டு கடந்த 28.09.2016 முதல் கிளிநொச்சி நகரப்பகுதியில் காணாமல் போயுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**072 3306050**

### மரண அறிவித்தல்

**கிறிஸ்தோப்பர் கிளிவோட் வில்லியம்ராஜா**

(ஓய்வு பெற்ற புள்ளிவிவரவியலாளர் STN, யாழ் மாவட்ட செயலகம்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்தோப்பர் கிளிவோட் வில்லியம்ராஜா நேற்று (06.11.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ் தோப்பர் மேரி மாகிறேட் தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை-ஜேற்றூட்டம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பிலோமினா சின்னராணியின் பாசமிகுகணவரும் லக்ஸ் மணன் (ஆசிரிய ஆலோசகர், யாழ் வலயம்), தமயந்தி (ஆசிரியர், யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை), பாமதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் புனிதராக்கினி, பேரின்பராக்கினி, திலகராணி, றஞ்சிதம் (தாதிய உத்தியோகத்தர், யாழ் போதனா வைத்தியசாலை), அருட் சகோதரி மேரி நிரோஷா (அ.கா. அதிபர், தி/ புனித மரியாள் கல்லூரி) ஆகியோரின் சகோதரனும் எட்வினா (ஆசிரியர், யாழ்/ வேம்படி மகளிர் கல்லூரி), சுரேந்திரன் (ஆசிரியர், யா/ மாதகல் சென்.யோசப் மகாவித்தியாலயம்), ஜெகந்தன் (கனடா) ஆகியோரின் மாமனும் சாரங்கா, மினோஷன், அனு, சனோஜன், திபிஷா, அஸ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (07.11.2016) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நல்லாயன் வீதி,
சில்லாலை.

(c 23324) (16,17,19)

தகவல்:
குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

அன்னை மடியில் 08 . 11 . 2002



கந்தன் அடியில் 05 . 11 . 2016

**ஆனந்தகுமார் ஜெயப்பிரகாஷ்**

(தரம் - 09 மாணவன்- யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் நீர்வேலி)

யாழ்ப்பாணம் நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தகுமார் ஜெயப்பிரகாஷ் 05.11.2016 அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் ஆனந்தகுமார் - சாந்தினி தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற சண்முகராசா , பரமேஸ்வரி, காலஞ்சென்ற நடராசா, சரஸ்வதி ஆகியோரின் அன்புப் பேரனும் சந்தோஷ் (யா/அத்தியார் இந்துக்கல்லூரி), திலக்ஷிகா(யா/கரந்தன் இராமுப் பிள்ளை வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் உதயகுமார் புஸ்பாதேவி, கிருஸ்ணகுமார்(கண்ணன்), கலைவாணி, சதீஸ்குமார்(ஐங்கரன்), கோணேஸ்வரி(சிவா) ஆகியோரின் பெறாமகனும் ஐன்ஸ்டீன் பிரான்சிஸ் கிருஷா, சிவகுமார், கஜகுமார் (கஜன்) ஆகியோரின் மருமகனும் புவிநிலா, சிவரூபன், புராதனி, தேனுசா, நேருஜன்ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.11.2016) திங்கட் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மாசுவன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராசவீதி, சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.
ஆனந்தன் - 077184 0286, கஜன் - 077 453 0899

தகவல்:
குடும்பத்தினர்.

# 6 ஆம் மாத நினைவஞ்சலியும் 66 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்



தோற்றம்
07.11.1950

மறைவு
03.05.2016

## அமரர் கதிரவேலு தியாகராசா

( உரிமையாளர் - ராஜா மிதிவண்டி உதிரிப்பாக விற்பனை நிலையம், மல்லாகம்.)

மலர்முகம் கண்டே உள்ளம் கனிந்தோம் - அப்பா
உம் நிழலில் இருந்து வாழ்ந்ததை மறவோம்
நீர் எம் வாழ்வின் வழிகாட்டி
பாசம் ஒன்றைத்தவிர வேறென்ன நாம் தந்தோம் - அப்பா
வந்தவர் எல்லாம் போவது - உண்மை
விதியென ஒன்று உண்டென அறிந்தோம் - அப்பா
சிந்தனை எமக்கு தோன்றியபோதும் நெஞ்சில் செப்பிட முடியாத்துயரேமோசம்!
உந்தனை இழந்த உணர்வே மிஞ்சும் -
என்றும் உள்ளத்தில் உமது நினைவே துஞ்சும்
வந்தனை செயவோம் வாழும் வரையில் - எம்
சோகம் சொல்லவும் வார்த்தை இல்லை - அப்பா
ஆறமுடியாத சோகம்தான் இங்கே ஆறுமாதங்கள் உருண்டோடிச் சென்றாலும்
என்றும் மறவோம் உங்கள் பாசநினைவுகளை....

(ஜே/5930)(17.20)

புகையிரத நிலைய வீதி, மல்லாகம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் செல்லத்துரை சுதர்சன்



பிறப்பு 10.04.1979
இறப்பு 29.10.2006

ஆண்டுகள் பத்து ஆயிடினும் அன்பு முகம்
மறக்க வில்லை இன்று உம் நினைவாய்
இருந்தே நாம் தவிக்கின்றோம்

தூண்டாமணி விளக்காய் ஒளிவீசிப் பிரகாசித்தீர்
இன்று வேண்டித் துதித்தே நாம் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஜேர்மனி — குடும்பத்தினர்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வேலுப்பிள்ளை பொன்னம்பலம்

அவர்கள் இறைபதம் எய்திய ஐந்தாம் ஆண்டில் நன்றியோடு நாம் நினைவு கூர்வோம்

மண்ணில் 11.10.1927



விண்ணில் 02.11.2011

தன்நெஞ்சுள் கோயிலொன்றை தானாக உருவாக்கி அன்போடு அனைவரையும் அரவணைத்து, உதவி செய்து நன்மைபல அறச்சாலை, பாடசாலை என்றளித்து, மன்னு புகழ் பிள்ளைகளை அவையத்தே முன்னிருத்தி இன்னுயிரால் இல்லாளின் இதயத்துள் கலந்திருந்த மென்மனத்துத் தொழிலதிபர் பொன்னம்பலம் ஐயா உன்னதமாம் இறையுலகுள் புகுந்தின்று ஐந்தாண்டும் முன்வந்ததென்றே நாம் முறைகாத்து நினைவு கூர்வோம்.

'பாக்கியரத்தின பவனம்',
வட்டு வடக்கு, சித்தன்கேணி. (08/5793)(11.18) — குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

விண்ணகம் 15.01.1973



மண்ணகம் 07.11.2015

அமரர்

### ஆ. டீன்ஸ் ராஜ்குமார் (BBA,றெக்ஷன்)

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாளதனில்
தரணியில் தடம்பதித்த தங்க மகனே
செம்மண் செழுமையில் செங்கதிர் பரப்பி
எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்
என்ற முதுமொழிக்கு உருவமாகி
யாழ் பல்கலைக் கழகமதில் பட்டதாரியாகி
பெற்றோரும் உற்றோரும் மகிழ்ந்திருக்க
நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
என்ற வார்த்தைக்கு வடிவமான துணையுடன்
புத்திரி இருவருக்கு தந்தையாக வலம் வந்தாய்
கல்வித் தகைமையால் கனடா தேசத்தில் குடியுரிமை பெற்று
கண்ணியமாக வாழ்ந்திருந்த நேரமதில்
காலனவன் கண் வைத்து மின்னல் என உனதுயிரை
பறித்தானோ இடியென வந்த செய்தியால்
உன் பெற்றோரும் உடன் பிறப்புகளும் உற்றாரும்
மீளாத் துயரில் ஓராண்டு நிறைவில் தவித்து நிற்கின்றோம்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று(07.11.2016) திங்கட்கிழமை காலை 6.30 மணியளவில் கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய். — குடும்பத்தினர்.

## முதலமைச்சராக....

மீண்டு வந்தபோது இளைஞர்கள் எமக்கு இரத்தத் திலகம் இட்டு வரவேற்றனர். நாம் தவறுகள் செய்யாத போதும் அரசுகள் கைது செய்து சிறையில் அடைத்தன. எனக்கு இப்போதும் நினைவு இருக்கின்றது. நானும் காசி ஆனந்தனும் சிறை மீண்டு வரும்போது, சாவகச்சேரி இளைஞர் அணியினர் எமக்கு இரத்தத் திலகம் இட்டனர். எமது ஆடைகள் முழுவதும் இரத்தமாகியது. இந்த வரலாறுகள் இன்று இருக்கும் பலருக்குத் தெரியாது. எனது காலத்தில் இவற்றைச் சொல்ல வேண்டும். அது தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காகவே நான் இதனைச் சொன்னேன். இன்று இளைஞர் அணிகளை நாம் தேடித் திரிந்து அமைக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. முன்னைய காலங்களில் சாவகச்சேரி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது வீடுகளையே அலுவலகங்களாகப் பயன்படுத்தி மக்களுக்கு சேவைகளை வழங்கினர். நாடாளுமன்ற உறுப்பினர்களான வே.குமாரசாமி, வ.ந.நவரத்தினம், ந.ரவிராஜ் போன்றோர் தமது இல்லத்தில் கட்சி அலுவலகத்தினையும் நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தினையும் வைத்திருந்து, தொகுதி மக்களுக்கு அரும்பணியாற்றியதை நாம் மறக்க முடியாது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் செய்தி இணையத் தளங்களின் குளறுபடிகளால் நாம் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. பல இணையத் தளங்கள், பத்திரிகைகள் எமக்கு எதிராகத் திட்டமிட்டுச் செயற்பட்டன. ஆனால் அவை முறியடிக்கப்பட்டன. எமது மக்கள் எம் மீது வைத்த நம்பிக்கையை அவர்களால் அசைக்க முடியாமல் போய்விட்டது. ஆட்சி மாற்றத்துக்கு நாம் கோரியபோது, மாற்றுக் கட்சிகளினால் அதற்கு எதிராக பெருமளவு பணம் கொடுக்கப்பட்டது. ஆனால் மக்கள் நாம் கோரியதற்கு அமைவாக வாக்களித்தனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு நான் ஆசைப்படுகின்றேன் என்ற கருத்து நிலவுவது எனக்குப் பெரும் வேதனையாக உள்ளது. என்றாவது ஒருநாள் நான் அவ்வாறு கோரியதாகவோ அல்லது கூட்டங்களில் பேசியதாகவோ யாரும் சொல்வார்களா ? எனக்கு முதலமைச்சர் பதவியை விட தந்தை செல்வா, தளபதி அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களால் உருவாக்கப்பட்ட கட்சியின் கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் காப்பாற்றி, தமிழ் மக்களின் நீண்டநாள் வேணவாக்களை நிறைவேற்ற வேண்டும் என்பதே அவா.

வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போது, கூட்டமைப்பின் அனைத்துக் கட்சிகளின் விருப்பப்படியே முதலமைச்சர் தெரிவு இடம் பெறவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி என்னை முதலமைச்சர் பதவிக்குப்போட்டியிட வேண்டுமென அறிக்கை விட்டிருந்தார். நான் அதற்கு அசைந்து கொடுக்கவில்லை. எனது ஒரே குறிக்கோள் தமிழ் மக்களின் வேணவாக்கள் தீர்க்கப்பட வேண்டும். இதனைத் தவிர வேறொன்றுமில்லை. இணையத்தளங்களும் சில ஊடகங்களும் மக்களைக் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. இந்த விடயத்தில் மக்கள் கவனமாகச் செயற்பட வேண்டும் - என்றார். (வ-5-9)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் குழந்தை
### ஸ்ரீஸ்கந்தராசா

திதி: அட்டமி (07.11.2016)

தோற்றம் 24.07.1937
மறைவு 19.11.2015



ஆண்டொன்று சென்றாலும் எம்மை விட்டு நீங்காத
உங்கள் நினைவுகள் என்றும் பசுமையாகவே
இருக்கும் உங்களுடைய ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம் தாத்தா

"இரத்தின வாசம்"
அல்வாய். — என்றும் நினைவில் குடும்பத்தினர்.

## 35ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் சின்னத்தம்பி
### கிருஸ்ணபிள்ளை



கடந்த 04.10.2016 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் சின்னத்தம்பி கிருஸ்ணபிள்ளை அவர்களின் இல்லத்தில் இன்று (07.11.2016) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

இராஜவீதி, நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. — குடும்பத்தினர்.
077 990 0035

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### பிலேந்திரன் ஜேம்ஸ்

தோற்றம் 18.08.1936
மறைவு 07.11.2005

அன்பையும் பண்பையும் ஒழுக்கத்தையும்
உணவாக ஊட்டி வளர்த்த
எம் அப்பாவே ஆண்டுகள் பல
சென்றாலும் உங்கள் இலட்சியம்
எம் நெஞ்சை விட்டகலாது
ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

முதலாம் ஒழுங்கை,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். — மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மக்களின்...

யாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே, எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆவாக் குழுவை, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவே உருவாக்கியதாக அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித தெரிவித்திருந்தார். அதனைக் கோத்தபாய ராஜபக்ச மறுத்திருந்தார். வடக்கு மாகாண ஆளுநர் குரே, இராணுவத்தினருக்கும் ஆவாக் குழுவுக்கும் இடையில் தொடர்பு இல்லை என்று தெரிவித்திருந்தார். இவ்வாறான நிலையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆவாக் குழுக்கள் போன்ற எந்தவொரு கும்பலும் இயங்கக் கூடாது. இவை இயங்காமல் இருப்பதற்கு உரிய சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். ஆவாக் குழுவுக்கும் இராணுவத்துக்கும் தொடர்பு இருப்பதாக, பொதுமக்கள் மத்தியில் பரவலாக அந்த அபிப்பிராயம் நிலவுகின்றது. அதை எவரும் உதாசீனம் செய்யக்கூடாது. அதுவும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டிய விடயம் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். (வ-5)

## யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

கந்தரோடை, சுன்னாகம்

முன்னாள் அதிபர்
அமரர் வி.சிவசுப்பிரமணியம்
அவர்களின்



20ஆவது ஆண்டு நினைவுப்பேருரை
வைபவம் - 2016

தலைவர் : திரு.மு.செல்வஸ்தான்- அதிபர்
காலம் : 08.11.2016(செவ்வாய்க்கிழமை)
நேரம் : மு.ப 9.30 மணி
இடம் : கந்தையா உபாத்தியாயர் மண்டபம்

நினைவுப்பேருரை
பேராசிரியர் க. தேவராஜா அவர்கள்
(Coordinator, BBM OnlineDegree Program)

விடயம்
" பாடசாலைக்கான தலைமைத்துவம் "

நிறைவுரை
வைத்திய கலாநிதி S. சிவானந்தராஜா அவர்கள்
(Member, Offical Language Commission)

கல்லூரிக்கீதம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- விழா ஏற்பாட்டாளர்கள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்)

கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்தச் செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளதாவது: யாழ்ப்பாணத்தில் இரு பல்கலைக்கழக மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கும் வெளிச்சக்திகள் எதற்கும் தொடர்பில்லை என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

வடக்கில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்த சம்பவம் மிகவும் துயரமானது. இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்தச் சம்பவத்தால் நாம் பெரிதும் கவலையடைகின்றோம். இந்த சம்பவம் பெரிய தவறாகும். இனியும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக் கூடாது. உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்துக்கு இழப்பீடு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றிருந்தால் நிலை மிகமோசமாகக் காணப்பட்டிருக்கும். மாறாக இந்தச் சம்பவத்தை வடக்குக்கு நிகழ்ந்த ஒரு சம்பவமாக மாத்திரம் நாங்கள் கருத முடியாது. இவ்வாறான சம்பவம் எங்கு இடம்பெற்றாலும் அங்கு அமைதியின்மை காணப்படும். ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும். ஆகவே இவ்வாறான சம்பவங்களை நாங்கள் கண்டிப்பதுடன், இவை மீண்டும் இடம்பெறக்கூடாது.

மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் தொடர்பான கோப் குழுவின் அறிக்கையை பக்கச் சார்பற்ற - அரசியல்வாதிகள் அற்ற சுயாதீன குழுவிடம் விசாரணைக்காக முன்வைக்கப்பட வேண்டும். கடந்த 10 வருடங்களில் இடம்பெற்ற மத்திய வங்கிப் பிணை முறி மற்றும் ஏனைய மோசடிகள் தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெறவேண்டும்.

சில வாரங்களுக்கு முன்னர் நான் ஆற்றிய உரையை சர்ச்சையைத் தூண்டும் விதத்தில் ஊடகங்கள் வெளியிட்டிருந்தன. குறிப்பாக ஆங்கில ஊடகங்கள் பிழையான அபிப்பிராயத்தை உருவாக்க முயன்றன. மக்கள் மத்தியில் பிழையான கருத்தை விதைக்க முயன்றன. நான் விசாரணைகளை நிறுத்தவேண்டும் என்று கோரியது போன்று அவை செய்தியை வெளியிட்டன.

நான் சுயாதீன ஆணைக் குழுக்கள் பக்கச்சார்பற்ற விதத்தில் சுதந்திரமாக செயற்படவேண்டும் என்றே தெரிவித்தேன். பெரியளவிலான மோசடிகள் தொடர்பான விசாரணைகள் அனைத்தும் நிறுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. சிறிய சிறிய மோசடிகள் குறித்தே விசாரணைகள் இடம்பெறுகின்றன. ஆனால் மக்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்புக் காணப்படுகின்றது. அவர்கள் பெரியளவிலான மோசடிகள் குறித்து விசாரணைகளை எதிர்பார்க்கின்றனர்.

பல பெரியளவிலான மோசடிகள் குறித்த விசாரணைகள் மந்த கதியில் காணப்படுகின்றன. இதில் ஒன்று டுபாய் வங்கியில் மிகப்பெருமளவு நிதி வைப்பிலிடப்பட்டமை தொடர்பானது. இது குறித்த விசாரணை நின்றுவிட்டது. அவன்ட் கார்ட் கப்பல்கள் எங்களிடம் கடந்த ஒரு வருடமாக காணப்படுகின்றது. இது குறித்த அரச பகுப்பாய்வு திணைக்கள அறிக்கை வேடிக்கையானதாக காணப்படுகின்றது. துப்பாக்கிகள் ஒன்றுடன் ஒன்று மோதியதால் அவற்றின் தொடர் இலக்கம் அழிந்துவிட்டதாக அது குறிப்பிட்டுள்ளது. தற்போது எந்த வழக்கும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

ரக்பி வீரர் படுகொலை தொடர்பான விசாரணைகளை சிதைப்பதற்கு - குழப்புவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. மக்கள் இது குறித்த உண்மைகளை அறிய விரும்புகின்றார்கள் - என்றார்.

அரசமைப்புத் தொடர்பான கேள்விகளுக்குப் பதில் வழங்கிய ஜனாதிபதி, எமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட விடயங்கள் நிறைவேற்றப்படும். புதிய அரசமைப்பு இந்த ஆண்டு இறுதிக்குள் உருவாகுவது சாத்தியமில்லை. அடுத்த ஆண்டே அது உருவாகும் என்று எதிர்பார்க்கின்றேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (வ-5)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு அழைப்பு



நிகழும் துர்முகி வருடம்
ஐப்பசி மாதம் 7 ஆம் நாள்
(23.10.2016) ஞாயிற்றுக்கிழமை
இறைபதம் அடைந்த
எமது குலவிளக்கு

**சிவஸ்ரீ நாராயணசர்மா (சித்தர் ஐயா) பத்மநாதக் குருக்கள்** (மயிலிட்டி ஐயா)

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (08.11.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் தாவடிதெற்கு வடபத்திரகாளி தேவஸ்தான அன்னதான மண்டபத்தில் நடைபெறும். எனவே அன்பர்கள் யாவரும் அதில் கலந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து. நண்பகல் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளு மாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காதவர்களும் இதனை ஏற்றுக்கொள்ளவும்.*

தர்மலிங்கம் தூபியடி,
சுதுமலை வீதி,
தாவடிதெற்கு, கொக்குவில் (J.5922) (13.18.21)

**குடும்பத்தினர்.**
தொ.பே.021 320 5019

## மரண அறிவித்தல்கள்

### வயிரமுத்து தருமதுரை

(உப தலைவர் ஊரெழு கிழக்கு நாவலம் பதி ஞானவைரவர் ஆலயம்)



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயிரமுத்து தருமதுரை நேற்று (06.11.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயிரமுத்து -நன்னிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பசுபதி - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தர்மேஸ்வரி மற்றும் சுதாகரன் (ஜேர்மனி), சுதர்சன் (லண்டன்), சுதா, சுமன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரராசா, விதுலா(ஜேர்மனி), கீர்த்தனா (லண்டன்), ஜெகன்(பிரான்ஸ்), நதியா ஆகியோரின்'அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான இராசமணி,இராசதுரை, இராசமலர், சிவலிங்கம், திரவியம்,இராசாத்தி மற்றும் தங்கராசா, தவராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசேந்திரம், மகேந்திரம், தெய்வேந்திரம், புவனேந்திரம் (ஜேர்மனி), காலஞ்சென்ற சந்திரன் மற்றும் குணேந்திரம் (சுவிஸ்),சந்திராதேவி, சறோஜாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**வளர்பிறை,**
**ஊரெழு கிழக்கு, ஊரெழு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

077 523 6750

### பொன்னம்பலம் சிவராசா

(ரைக்கர் சிவா)



யாழ். சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகவும், கனடாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவராசா 04.11.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சின்னத்தங்கம் தம்பதியரின் மூத்த புதல்வரும் நல்லதம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் சந்தான லட்சுமியின் அன்புக்கணவரும் சிவானுஜா (ஆசிரியை - யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி), சிவாநந்தினி (கனடா), சியானி (ஜேர்மனி), சுயன் (கனடா), மயூரதி (ஆஸ்தி ரேலியா), அயந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தை யும் சறோஸ்மலர் (கனடா), சரஸ்வதி, சிவகுமார் (கனடா), தங்கமணி காலஞ்சென்ற ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் விமலன், ராம்குமார் (கனடா), அன்பழகன் (ஜேர்மனி), அருணன் (ஆஸ்திரேலியா), மீரா ஆகியோரின் அன்பு மாமனும் கந்தசாமி (கனடா), சுப்பிரமணியம், சுகந்தி (கனடா), கணேசானந்தன், இராகினி, இராசலட்சுமி, அன்னலட்சுமி, தவமணிதேவி, சிவராசா (லண்டன்), சிவானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஹனுஜா, பூர்ஜா, விரோஷின், பிரஜின், அபினேஷ், அனுஷ்கா, அபிஷ்ணன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (06.11.2016) ஞாயிற்றுக்கிழமை Highland Funeral Home 3280 Sheppard Ave E Toranto On MIT 3K3 இல் பார்வைக்காக வைக்கப்பட்டு இன்று (07.11.2016) திங்கட்கிழமை தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**சுயன் (மகன் - கனடா)**
**தொ.பே - 141 673 70618**
**செல்லிடப்பேசி -164 734 56902**

**தகவல்:**
**விமலன் (மருமகன்)**
**கல்வயல், சாவகச்சேரி.**
**077 2105340**

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 08.10.2016 அன்று
சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவர்


**அமரர்**
**மாணிக்கம் சிவலிங்கம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.11.2016) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல - 82,**
**மூர் வீதி, மன்னார்.** (J.5817) (14.17.18)

**மனைவி,**
**பிள்ளைகள்.**

## நீங்கா நினைவில் விண்ணக வாழ்வில் ஓராண்டு



*அமரர்* **ஆறுமுகம் செல்வநாயகம்**

**திதி: 07.11.2016 (திங்கட்கிழமை)**

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 21 . 01 . 1939 | 21 . 10 . 2015 |

மேதினியில் சிறப்புடன்
வாழ்ந்த நீங்கள்
பாரினில் நாம் வாழ
நல்வழி சமைத்தீர்

பக்குவமாய் மேன்மை கொள் காரைநகர்
ஈழத்துச் சிதம்பர சுந்தரேஸ்வரர் இறைபதம்
உறைபவராக ! உத்தமரே உம் நினைவுகள்
எம் உயிர் உள்ளவரை எம் மனங்களை விட்டு மறையாதே!

*ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!*

**இல.90A**
**கூமாங்குளம் வீதி, உக்குளாங்குளம்,**
**வவுனியா.**

*நீங்கா நினைவுகளுடன்*
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணித் தெரிவுப் பதற்றத்தாலேயே ஆஸி. வீரர்கள் தடுமாறுகிறார்கள்

அடுத்த ஆட்டத்தில் (எதிர்கால) அணியில் இருப்பது தொடர்பில் ஆஸ்திரேலிய வீரர்கள் அதிகம் சிந்திப்பதாலேயே நடைபெறும் (நிகழ்கால) ஆட்டத்தில் அவர்கள் தமது இயல்பான திறனை வெளிப்படுத்த இயலாது திணறுகின்றனர். இவ்வாறு தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழல் ஜாம்பவான் சேன் வோர்ண்.

வீரர்கள், அணியில் தங்கள் இடம்பற்றிய கவலையில் ஆடுவதால் ஆட்டத்தில் கவனம் செலுத்த முடியவில்லை. வீரர்களுக்கு களத்தில் இறங்கியவுடன் அடுத்த ஆட்டத்தில் இருப்போமா மாட்டோமா என்ற கவலை ஏற்பட்டு விடுவதாகவே நான் கருதுகிறேன்.

இதுதான் அவர்கள் ஆட்டத்திலும் பிரதிபலிக்கிறது. அணியில் பெரிய பதற்றம் இருக்கிறது என வோர்ண் தெரிவித்தார். (ம)





## கொக்குவில் இந்துவின் தொடரில் மத்தியை தோற்கடித்தது ஏஞ்சல்

யாழ்ப்பாணம், நவ. 7

கொக்குவில் இந்துக் கல்லூரி கீர்த்திகன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்திய கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை அணி சம்பியனானது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று மாலை 6 மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதியது. நான்கு கால் பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு கால் பாதிகளையும் முறையே 22:15, 20:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஏஞ்சல், முதல் பாதியின் முடிவில் 42:32 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றது.

மூன்றாவது கால் பாதியை 20:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது மத்தி. நான்காவது கால் பாதியில் 22:13 என்று ஆதிக்கம் செலுத்திய ஏஞ்சல் முடிவில் ஒட்டுமொத்தமாக 78:65 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

## சிறந்த அடித்தளத்தை அமைத்தது இலங்கை

சிம்பாப்வேக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளான நேற்று இலங்கை அணி சிறந்த அடித்தளத்தை அமைத்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது.

இலங்கையின் ஆரம்ப வீரர்களாக கருணாரத்ன மற்றும் கௌசால் சில்வா இருவரும் களமிறங்கினர்.

இணைப்பாட்டமாக 62 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கருணாரத்ன. குசல் பெரேராவால் முடிந்தது 5 ஓட்டங்கள். 37 ஓட்டங்களுடன் கௌசால் சில்வா வெளியேற்றப்பட்டார்.

உணவு இடைவேளையின் போது இலங்கை 105-3 என்றிருந்தது. தரங்க, தனஞ்சய டி சில்வா இணைந்து நிதானத்துடன் கூடிய நீண்ட இணைப்பாட்டத்தை வழங்கினர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். 79 ஓட்டங்களுடன் தரங்க ஆட்டமிழந்தார்.

ஆனால் பதற்றமில்லாது சதம் கடந்தார் சில்வா. குணரத்னவும் நிலைக்க முதல் நாள் முடிவில் இலங்கை 290-5 என்றுள்ளது. சில்வா 100 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளார். (ம)

## அன்ரனிஸ் இறுதியில்

யாழ்ப்பாணம், நவ. 7

வல்வை விளையாட்டுக் கழகம் நடத்திய 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் மணல்காடு சென். அன்ரனிஸ் அணி இறுதியில் மோதத் தகுதி பெற்றது.

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் அணியை எதிர்த்து மணல்காடு சென். அன்ரனிஸ் அணி மோதியது. 2:0 என்று அன்ரனிஸின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் மாற்றங்கள் ஏற்படாத நிலையில் சென். அன்ரனிஸ் அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-108)

## திருக்குடும்பக் கன்னியர் அணி கூடைப்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், நவ. 7

கொக்குவில் இந்துக் கல்லூரி கீர்த்திகன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்திய கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் திருக்குடும்பக் கன்னியர் மட அணி சம்பியனானது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெற்றது. திருக்குடும்ப கன்னியர் மட அணியை எதிர்த்து இராமநாதன் மகளிர் கல்லூரி அணி பலப்பரீட்சை நடத்தியது. முதல் கால்பாதியை 19:00 என்ற அடிப்படையில் அபாரமாகக் கைப்பற்றியது திருக்குடும்பம். இரண்டாவது கால் பாதியையும் 18:00 என்ற அடிப்படையில் இழந்தது ராமநாதன். முதல் பாதியின் முடிவில் 37:00 என்று பெரும் ஆதிக்கம் செலுத்தியது திருக்குடும்பம்.

மூன்றாவது மற்றும் நான்காவது கால் பாதிகளை 04:01, 28:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய திருக்குடும்ப கன்னியர் மட அணி முடிவில் 69:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அபார வெற்றிபெற்று கிண்ணத்தைக் கொண்டு சென்றது. (ம-23)



## பிலிப் கியூக்ஸின் குடும்பத்துக்கு இழப்பீட்டுத் தொகையாக 50 கோடி

### ஆஸி. கிரிக்கெட் வழங்கியது

பவுன்சர் பந்தால் தாக்கப்பட்டு உயிரிழந்த ஆஸ்திரேலிய வீரர் பிலிப் கியூக்ஸின் குடும்பத்துக்கு இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 50 கோடியை இழப்பீட்டுத் தொகையாக வழங்கியது ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை.

கடந்த 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சிட்னி மைதானத்தில் செப்பீல்டு சீல்டு கிண்ணத்துக்கான ஆஸ்திரேலியாவின் உள்ளூர் முதற் தர தொடர் நடைபெற்றது.

தெற்கு ஆஸ்திரேலிய அணிக்காக விளையாடிய 25 வயதான பிலிப் கியூக்ஸ், நியூ சவுத்வேல்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சீன் அப்போட் வீசிய பவுன்சர் பந்தை அடித்து ஆட முயன்றபோது, அது அவரது கழுத்தின் இடது பகுதியில் பயங்கரமாகத் தாக்கியது. இதனால் நிலை குலைந்து மைதானத்தில் சரிந்த கியூக்ஸ்



அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்குத் தீவிர சிகிச்சை அளித்தாலும் மயக்க நிலையிலேயே நவம்பர் 27ஆம் திகதி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கிரிக்கெட் உலகையே பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் வளரும் நட்சத்திரமாக விளங்கிய பிலிப் கியூக்ஸின் சாவுக்கான காரணம் குறித்து விசாரணை நடத்திய நியூ சவுத் வேல்ஸ் மாகாண சிறப்பு அதிகாரி மைக்கேல் பார்ன்ஸ் தனது விசாரணை அறிக்கையை நேற்று முன்தினம் வெளியிட்டார். அதில் கியூக்ஸின் சாவுக்கு ஆட்டத்தின் நடுவர்கள் மற்றும் வீரர்கள் யாரும் காரணம் இல்லை. அந்த ஆட்டத்தில் விளையாட்டு விதிமுறைகள் சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டு இருக்கிறது. அந்த நாளில் கியூக்ஸுக்கு 20 பவுன்சர் பந்துகள் வீசப்பட்டு இருக்கிறன. அவர் பவுன்சர் பந்தை திறம்படச் சமாளித்து விளையாடக் கூடியவர்தான். சாவை விளைவித்த அந்தப் பந்தை அவர் தவறாகக் கணித்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகள் முழுமையாக நிறைவடைந்ததால் கியூக்ஸின் இழப்புக்கு அவரது குடும்பத்து இழப்பீட்டுத் தொகை வழங்குவதாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்திருந்தது. இதனையடுத்து இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 50 கோடி இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணியில் அன்டர்சன்

காயத்தால் அவதிப்பட்டு வந்த இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன், காயத்திலிருந்து குணமடைந்து மீண்டும் அணியில் இணையவுள்ளார் என இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்தது.

இந்தியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் ஐந்து ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற இருக்கிறது. முதல் டெஸ்ட் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்துக்கான இங்கிலாந்து அணியில் அன்டர்சன் இடம்பெறவில்லை.

ஓகஸ்ட் மாதம் காயமடைந்த அவர், தொடர்ந்தும் காயத்தால் அவதிப்பட்டு வந்தார். இதன் காரணமாகவே முதலாவது டெஸ்ட்டில் அவர் அணியில் சேர்க்கப்படவில்லை. ஆனால் இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஆட்டத்துக்கான அணியில் அன்டர்சன் இணைக்கப்பட்டுள்ளார் என இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்தது.

இங்கிலாந்து டெஸ்ட் அணிக்கு அன்டர்சன் ஓர் முக்கியமான வீரர். அவர் காயத்தால் அவதிப்பட்டு வந்தமை அணியில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. தற்போது காயங்களிலிருந்து விடுபட்டுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான முதல் ஆட்டத்தில் விளையாட விட்டாலும் இரண்டாவது ஆட்டத்தில் நிச்சயம் கள மிறங்குவார் என இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. (ம)





# அந்நிய மண் தோல்விகள் ஆஸியை அச்சுறுத்துகின்றன

## கிளார்க் கண்டுபிடிப்பு

ஆஸ்திரேலியாவுக்கு வெளியே விளையாடும் போது அந்த அணி சந்தித்த தோல்விகள்தான் சொந்த மண்ணிலும் ஆஸ்திரேலியா அணியின் தடுமாற்றத்துக்கான காரணம் எனத் தெரிவித்தார் அந்த அணியின் முன்னாள் தலைவரான கிளார்க்.

ஆஸ்திரேலியா–தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையே மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் பேர்த்தில் நடைபெற்று வருகிறது. தென்னாபிரிக்காவின் கை மேலோங்கியுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 242 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா, இலக்குச் சரிவில்லாமல் 158 ஓட்டங்களைக் குவித்திருந்த போதிலும், இறுதி 86 ஓட்டங்களில் 10 இலக்குகளை இழந்தது. இதனையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே கிளார்க் இவ்வாறு தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவுக்கு வெளியே அந்நிய மண்ணில் விளையாடும் போது ஏற்பட்ட திடீர் சரிவுகள், தொடர்ச்சியாக ஆட்டமிழப்பதன் மனத்தழும்புகள் இன்னமும் ஆஸ்திரேலிய வீரர்கள் மனதை விட்டு அகலவில்லை. இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடர், தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடர் ஆகியவற்றில் ஆஸ்திரேலியா வழித்துத் துடைக்கப்பட்டது. இந்தப் பெரும் தோல்விகளைச் சந்தித்த பின்னர், சொந்த மண்ணில் விளையாடவும் சிறிது பதற்றத்தை எதிர்கொள்ளவேண்டியே இருக்கும். இத்தகைய மனோநிலையிலேயே ஆஸ்திரேலிய வீரர்கள் தற்போது உள்ளனர். தென்னாபிரிக்க அணி கடந்த சில காலங்களாக பந்துவீச்சிலும் துடுப்பாட்டத்திலும் மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தி வருகிறது என கிளார்க் மேலும் தெரிவித்தார். (ம)

# யங்ஹென்றிஸ், 5 ஸ்ரார் அணிகள் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், நவ. 7

மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்பட்டு வரும் தொடரில் வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்களில் இளவாலை யங்ஹென்றிஸ், 5 ஸ்ரார் அணிகள் வெற்றிபெற்றன.




இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் ஆட்டங்கள் நடைபெற்றன. இளவாலை யங்ஹென்றிஸ் அணிக்கும் மூளாய் வளர்மதி அணிக்கும் இடை யிலான ஆட்டத்தில் யங்ஹென்றிஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற 5 ஸ்ரார் அணிக்கும் அராலி கலைவாணி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் 5 ஸ்ரார் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# இங்கிலாந்துக்கு பறக்கவுள்ளார் ரோகித் சர்மா

காயம் காரணமாக அவதிப்பட்டுவரும் ரோகித் சர்மா, அறுவைச் சிகிச்சை செய்துகொள்வதற்காக இந்த வாரத்தின் இறுதிப் பகுதியில் இங்கிலாந்துக்குச் செல்லவுள்ளார்.

விசாகப்பட்டினத்தில் கடந்த மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தின்போது இந்திய வீரர் ரோகித் சர்மாவின் தொடைப் பகுதியில் காயம் ஏற்பட்டது. இதற்காக



அவர் சிகிச்சை பெற்று வந்தார். ஆனால், காயம் குணமடையாததால் அவர் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், சிறப்பு மருத்துவ ஆலோசனைக்காகவும், அறுவைச் சிகிச்சைக்காகவும் இந்த வாரம் இறுதிப் பகுதியில் இங்கிலாந்துக்குச் செல்லவுள்ளார். அறுவைச் சிகிச்சை செய்துகொண்டால் 10 தொடக்கம் 12 வாரங்கள் அவர் ஓய்விலிருக்க வேண்டிவரும். (ம)

# அகதிகளுக்காக கால்பந்து முகாம் முன்னெடுக்கவுள்ளது பார்சிலோனா

ஸ்பெய்னின் புகழ் பெற்ற கால்பந்து கழகமான பார்சிலோனா, கிறீஸ் நாட்டிலுள்ள அகதிகளுக்காக கால்பந்து முகாமொன்றை முன்னெடுக்கவுள்ளது.



கிறீஸின் லோனினா நகரில் அமைந்துள்ள அகதிகள் முகாமுக்கு செல்லவுள்ள பார்சிலோனா வீரர்கள், அங்குள்ள அகதிகளுக்கு கால்பந்து பயிற்சி முகாமொன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

இந்தத் தகவலை ஐக்கிய நாடுகள் சபையும், பார்சிலோனா நிர்வாகவும் உறுதிப்படுத்தியுள்ளன. ஆனால் எந்தெந்த வீரர்கள் செல்லவுள்ளனர் என்பது தொடர்பில் தெரிவிக்கவில்லை. (ம)

# ஜனாதிபதி கிண்ணத்தின் கரப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ. 7

டயலொக் நிறுவனத்தால் ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் கரப்பந்தாட்டத்தில் இளவாலை மத்தி, ஆவரங்கால் இந்து இளைஞர், கிளிநொச்சி புதிய பாரதி அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

அநுராதபுரம் தம்பேகம மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் கிளிநொச்சி புதிய பாரதி அணியை எதிர்த்து பொலன்னறுவை அணி மோதியது. முதல் மூன்று செற்களையும் முறையே 25:11, 25:17, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய புதிய பாரதி அணி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் இளவாலை மத்திய அணியை எதிர்த்து கிழக்கு மாகாண அணி மோதியது. 25:14, 25:17, 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று செற்களையும் கைப்பற்றிய இளவாலை, மத்திய 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ம-422-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள் !!!!

இலங்கையில் முன்னணி வகிக்கின்ற சர்வதேச நிறுவனமாகிய "Granton" நிறுவனத்தின் நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரிவுகளில் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.

தகைமை:
* O/L இல் இருந்து... * பயிற்சியின்போது Earn 12,000/-,18,000/-
* பயிற்சியின் பின் 40,000/- இற்கு மேல்
* வயதெல்லை 18-35 * தங்குமிட வசதிகள் உண்டு.

(J.5913) (16,17,19)

076 3135120, 077 9994807



## ஆங்கிலம் 3 மாத பயிற்சி நெறி

3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேச...
இம்முறை A/L எழுதியோர், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர், இளைஞர் யுவதிகள் இணையமுடியும்!

சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்: 12.11.2016

பிரிவு1.காலை 08-10 பிரிவு 3.மாலை 01-03
பிரிவு2.காலை 10-12 பிரிவு 4. மாலை 03-05

ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட 3 மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்!

பாடப்புத்தகங்கள் Video DVD என்பன இலவசம்.
பயிற்சிநெறி முடிவில் "Diploma Certificate"

SAAMSON
Expert in Language Training
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 1570 486
021 320 3313

## உடனடி வேலைவாய்ப்புக்கள்

உலகம் முழுவதிலும் உள்ள எமது நிறுவனத்தில் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புக்கான பதவி வெற்றிடங்கள் உள்ளன. 3 மாத கால பயிற்சியின் போது 10000 -25000 பெற்றுக் கொள்ளமுடியும். பயிற்சியின் பின் 25000 -50000 பெற்றுக் கொள்ளமுடியும். கல்விதகைமை O/L,A/L படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். தங்குமிடவசதிகள் வழங்கப்படும். பதவி வெற்றிடங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. உடனடியாக தொடர்பு கொள்ளவும். வயது எல்லை 18-35

076 864 3505, 077 966 0885,
071 187 3807

## காணி 10 வருட குத்தகைக்கு

461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் (ஆயுள் வேத கல்லூரி முன்பியங்கிய) 8பரப்பு 1.70 குளி காணியும் கட்டடமும், 61, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் 3பரப்பு 15.90 குளி காணியும் கட்டடமும் 10 வருட குத்தகைக்கு விடப்படும்.

(J.5924) (17.15)

தொடர்பு: 077 690 9736

## நேர்முகத்தேர்வுகள்

பிரபல நிறுவனங்களில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

* Receptionist (female)-5
* Admin Officer (female/male)-2
* Personal Assistant (female) -2
* Accountant (male/female)-4
*Graphic Designers (female)-2
* Bill Clerk (male)-2
* Cashier (male/female)-5
* Sales Boys -5
* Sales Girls-5
* Hospital labours-4
* Labours-10
* Drivers-2
* Coordinator-1
* Marketing Excecutive-2

இப்பதவிகளுக்கான நேர்முகத்தேர்வுகள் எமது நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.
திகதி: 07.11.2016 (திங்கள்) 08.11.2016 (செவ்வாய்)
நேரம்: காலை 10.00-மாலை 3.00

உங்கள் தகைமை எதுவானாலும் பொருத்தமான வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ள
சுயவிவரக்கோவை, தகைமைச்சான்றிதழ், அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் என்பவற்றுடன் நேரில் வாருங்கள்.

WINSTAR JOB BANK
# 106 தபாற்பெட்டிச் சந்தி,
பலாலி வீதி, திருநெல்வேலி. T.P: 076 5450539
web : www.winstarjaffna.com (J 5940) (16,17,19)



இந்தியாவுக்கு எதிரான நீண்ட டெஸ்ட் தொடரில் விளையாட சுற்றுப்பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து நேற்றைய தினம் கடும் வலைப்பயிற்சியில் ஈடுபட்டது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முத லாவது ஆட்டம் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. (ம)

# இந்தியாவுக்கு கடும் நெருக்கடி இங்கிலாந்தால் வழங்கப்படுமாம்

இந்தியாவுக்கு இங்கிலாந்தால் கடும் நெருக்கடி வழங்கப்படும் எனத் தெரிவித்தார் இங்கிலாந்தின் தலைவரான அலிஸ்டர் குக்.

ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொட ரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி இந்தியாவுக்குச் சென்றுள்ளது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் நாளைமறுதினம் நடை பெறவுள்ளது. இந்தியாவில் தொடர் நடைபெறவுள்ளதால் இங்கிலாந்தை இந்தியா ஆதிக்கம் செய்யும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையிலே தனது அணி மீது அளப்பெரும் நம்பிக்கையை வெளியிட்டார் குக். நீண்ட தொடருக்காக இந்தியாவுக்கு வந்துள்ளோம். மறக்கப்பட வேண்டிய பங்களாதேஷுக்கு எதிரான தோல்விக்குப் பின்னர் இந்தியாவை எதிர்கொள்கிறோம். வெளிப்படுத்தப்பட்டு வரும் பொதுவான அபிப்பிராயங்களைப் போன்று இந்தியா கடினமான அணியே. இதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் இங்கிலாந்து சரணடைந்து விடும் என்று சொல்லுவதை ஏற்க முடியாது. நாம் ஆகச் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்துவோம் என்பதில் சந்தேகமில்லை.



4 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா வந்த போது, அகமதாபாத்தில் நடந்த முதலாவது டெஸ்டில் நாங்கள் தோல்வி அடைந்த பிறகு நடந்த சம்பவத்தை நினைவுபடுத்துகிறேன். அப்போது இந்திய அணி 4:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றும் என்று கூறினார்கள். ஆனால் அதை நாங்கள் மாற்றிக் காட்டினோம். 2:1 என்ற கணக்கில் தொடரை வென்றோம். கிரிக்கெட்டில் எதுவும் நடக்கலாம். மிகவும் பெரிய போராட்டமொன்றை நாம் வெளிப்படுத்துவோம் என்பதில் சந்தேகமில்லை. (ம)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 12.10.2016
புதன்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவி
அமரர்
நாகம்மா
சொக்கலிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 07.11.2016 திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 96, இராஜேஸ்வரி வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(ஜே/5944)(17.20)

## மகாஜனா அணி அரையிறுதியில்

யாழப்பாணம், நவ. 7

சமபோசா கிண்ணத்துக்காக தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் மகாஜனக் கல்லூரி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

கொழும்பு அல்பிரட்பிரீஸ் விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தக் காலிறுதி நடைபெற்றது. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு பிறசிடன் கல்லூரி அணி மோதியது. 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது மகாஜனா. (ம-23)

## அன்பொளி கல்வியகம்

யாழ். இந்துக்கல்லூரி வீதி யாழ்ப்பாணம்
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2016
சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் (12.11.2016) சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்தில் (நாச்சிமார் கோயிலடி) நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர்.
(சி/23325)(17.20)

## அமெரிக்க அதிஸ்ட விசா

ஒரு சாதாரண முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
இலவசமாக
அமெரிக்கா போகலாம்
தவறவிடாதீர்கள், இன்றுடன்
பதிவுகள் நிறைவடைகின்றன
0768226230
அடுத்தவருடம் இந்த வாய்ப்பு இருக்குமோ தெரியாது. இப்பவே பதியுங்கள்
விசா பெறுநர்களின் விபரம் எமது அலுவலகங்களில்
V2 Travels

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.